Reg No. 245(

ஆங்கீரஸ-வைகாசி
1932-ம் வருஷ மே-ஜூன் மீ




மாலை 4. மணி 2.

## ஓர் செந்தமிழ்
# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

72
N211, N29BH
N32.4.2
197880

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

# தமிழ் நாட்டின் தேசியக் கவி.

வாழ்க்கை வரலாறு கவிதா விலாசம் தேசாபிமானம்
முதலியவற்றைப் பற்றிய

## அரிய ஆராய்ச்சி நூல்.

திரு. சுத்தானந்த பாரதியாரால்
இனிய எளிய ஆவேச நடையில் எழுதப்பெற்றது.

**இதுபரியந்தம் இம்முறையில் பாரதியாரைப் பற்றிய நூலொன்றும் வெளிவந்ததில்லை.**

இதில் பாரதியாரைப் பிணித்திருந்த ஆசா, பாச, வாழ்க்கை வரலாறு ஆகிய அவஸ்யமான ஆனால், இதுபரியந்தம் அச்சேறாத புதிய விஷயங்களையும், அவர்தம் கவிதையின் போக்கையும், நூல்களின் கருத்தையும், நடையின் சிறப்பையும் போதியவாறு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பாரதியார் நூல்களனைத்தையும்
இதில் ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கிறது.

பெரியோர்களின் சிரப்புரைகளும் பத்திரிகைகளின் மதிப்புரைகளும் அதிகமாகப் பெற்றிருப்பதொன்றே இதன் உயர்வையும் அவசியத்தையும் காட்டுகின்றது.

இன்றே இந்நூலை வாசித்து உண்மைகளை அறிய
முயலுவீர்களாக.

கிளேஸ் பேப்பர்; அழகான அச்சு; படத்துடன்

**240** பக்கங்கள்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1.

தபால் செலவு வேறு.

"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# "பாரதி"யின்

# அயல் நாட்டுச் சந்தாதாரர்களுக்கு.

உள் நாட்டுச் சந்தாதாரர்கள், சென்ற சித்திரை மாதச் சஞ்சிகை ில் குறிப்பிட்டதிற்கிணங்க தங்களது சந்தாவை மணியார்டரில் அனுப்பி வைத்தும், V. P. P.யைப் பெற்றுக்கொண்டும், நமது விரு த்தைப் பூர்த்திசெய்து வருகின்றார்கள். வெளி நாட்டி லுள்ளோரோ இதுபரியந்தம் சந்தாவை அனுப்பிவைக்கா திருக்கின்றனர். இது ற்றியே இதனை எழுதவேண்டியதாயிற்று.

எந்த ஒரு பத்திரிகைக்கும் சந்தாவானது காலாகாலத்தில் முறை ாக வசூலாகவில்லை யானால், அப் பத்திரிகை விரைவில் க்ஷீணிக்கும் ன்பது தெரிந்த விஷயமே. நமது 'பாரதி'யோ, மற்றப் பத்திரிகை ளைப்போன்று தன்னலங் கொண்டதாயில்லை யென்பது சொல்லவும் வேண்டுமோ? இலாபங் கருதாது, சிரமம் எண்ணாது, 'பாரதி'யின் ளர்ச்சி யொன்றினையே கருத்துட் கொண்டிருக்கும் நமது, அன்பர் ள் அதிகமதிகமாகத் துணையும் ஆதரவும் நல்கவேண்டியதிருக்க, ந்தாவைக்கூட அனுப்பா திருப்பதைப்பற்றி என்ன சொல்லுவது! துபற்றி வருந்தாதிருக்கக் கூடவில்லை. உள் நாடாயின் சந்தா சூலிப்பது இலகுவாக முடியக்கூடிய தென்பது அறிந்ததேயாகும். வெளி நாட்டிற்கோ V. P. P. முறை கிடையாது: ஆகையினால் அன்பர்கள் இந்தச் சஞ்சிகையைப் பார்த்த பின்னரேனும் தங்களின் ந்தாவை அனுப்பி எமக்கும் எம் தொழிலுக்கும் உதவி யளிப்பார்க ளனவே நம்புகின்றோம்.

இதுபரியந்தம் சந்தாவை அனுப்பிவைக்காமலிருக்கும் அன்பர் ள் .......................... ஒரு-க்கு சந்தா ரூ ................ அல்லது லிங் ............ யை மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பிவைப்பதை எதிர்பார்க்கின்றோம்.

உத்தமபாளையம், }
ஆங்கிரஸ—வைகாசி. }

பொறுப்பாசிரியர்,
"பாரதி."

## 'பாரதி'யின் குறுக்கெழுத்து பந்தனக் கூப்பன்.

கனம் ஐயா,

இப் பந்தனப் போட்டியில் கலந்துகொள்ள, 4 அணா ஸ்டாம்பும், விடையும் பூர்த்திசெய்து அனுப்பியிருக்கிறேன். எனது விடை சரியானதாயின், கீழ்க்கண்ட விதம் பரிசை வழங்குமாறு விரும்புகின்றேன்.

பரிசு விபரம் ..............................................................

..............................................................

தேதி ..............................  கையொப்பம்.

பெயர் ..............................................................

விலாசம் ..............................................................

..............................................................

..............................................................

## 'பாரதி'யின் விகட வகுத்தல் கூப்பன்.

கனம் ஐயா,

இந்த விகட வகுத்தல் போட்டியில் கலந்துகொள்ள, 4 அணா ஸ்டாம்பும், விடையும், வழியும் அனுப்பியிருக்கிறேன். அஃது சரியானதாயிருந்தால் கீழ்க்கண்ட விதம் பரிசை அளிக்க வேண்டுகின்றேன்.

பரிசின் விபரம் ..............................................................

..............................................................

தேதி ..............................  கையொப்பம்.

பெயர் ..............................................................

விலாசம் ..............................................................

..............................................................

..............................................................

# சோவியத் ருஷ்யா.

பண்டித. ஜவஹர்லால் நேரு அவர்கள்
எழுதிய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு.

## அநேக படங்களுடன் கூடியது.


தமிழ் நாட்டார் பொதுவுடமை ரஷ்யாவைச் சரிவர அறிந்துகொள்ள வேண்டியது அவஸ்யமாகும். இதுபோது சோவியத் ருஷ்யாவைப்பற்றி எப்படி எப்படியோ என்ன என்ன வெல்லாமோ சொல்லப்பட்டு வருகிறது. மக்கள் உண்மை யறிந்தாலன்றி ருஷ்யாவின் புதிய கக்ஷியைப்பற்றித் தீர்மானிக்க வழியில்லை. புத்தம் புதிய இயக்கங்கள் ஓர் நாட்டை மேன்மைப்படுத்தவும் அன்றி தாழ்மைப்படுத்தவும் காரணமாயிருக்கின்றன. அறிவுளோர் நலத்தையே விரும்புவர். ஆனால், விஷயம் விளங்கவேண்டுமன்றோ அதற்கு? பல்வேறு அபிப்பிராயங்கள் நாட்டில் உலாவி உண்மைக்கு மாறான விஷயங்கள் மக்களின் மனதில் பதியக்கூடாதென வறிந்தே, நமது இளஞ் சிங்கம் பண்டித ஜவஹர் அவர்கள் ரஷியா சென்று அங்குக் கண்டதையும் கேட்டதையும் ஆராய்ந்து இந் நூலை எழுதியுள்ளார். இஃது தமிழர்தம் பார்வைக்கு இதுபோது வெளிவருவதா யிருக்கிறதினால், விரைவில் உண்மை காணலாமென நம்பப்படுகிறது. முதற் பதிப்பு குறைந்த அளவாகவே பிரசுரிக்கப்படுவதால், உடனே தருவித்துக்கொள்ள முன் வருமாறு அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

(அச்சிலிருக்கிறது; விரைவில் வெளிவரும்.)

முன் பணம் அனுப்புவோருக்கு விலை ரூ. 1.
பிரசுரித்த பின்னர் ரூ. 1—4—0.

"பாரதி" புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

197880



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

## பொருள் அடக்கம்.

மாலை 4. மணி 2.

ஆங்கீரஸ வைகாசி (1932ஆு மே–ஜூன்)


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | இந்தியாவின் இரு கண்கள்—பொ. ஆ. ... ... | 81 |
| 2. | தெய்வ பாரதத் திருப்பெருங் காட்சி— திரு. சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ... | 86 |
| 3. | எனது குருநாதரின் கடிதம்—(மனோகரனார்) ... | 91 |
| 4. | "ரான்ஜன்" அல்லது 'எக்ஸ்" வெளிச்சக் கதிர்— திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.) ... | 98 |
| 5. | "பாரதி"யின் குறுக்கெழுத்து பந்தனம்— ... | 105 |
| 6. | திருவிதாங்கூரின் அபிவிருத்தி— திரு. வி. எ. பெருமாள் அவர்கள் ... | 107 |
| 7. | பாரத நாட்டின் பண்டைக் கலைகள்— திரு. O. P. தேசிகன் அவர்கள் ... | 120 |
| 8. | வாலிபர்களுக்கு!—திரு. ஜம்புநாதன் அவர்கள் ... | 133 |
| 9. | விகட வகுத்தல்— ... ... ... | 138 |
| 10. | இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில்— திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... | 139 |
| 11. | வைக்கம் சத்யாக்கிரஹ நினைவுகள்— திரு. அய்யாமுத்து அவர்கள் ... | 143 |
| 12. | தமிழர் மணம்—பண்டித திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ... | 154 |


ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.
ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

| மாலை 4 | ஆங்கீரஸ–வைகாசி 1932-ஆு மே—ஜூன்மீ | மணி 2 |
|---|---|---|

# இந்தியாவின் இரு கண்கள்!

ஏறக்குறைய 36 கோடி ஜனத்தொகையைப் பெற்றதாயும் உலக கவனத்தை யொருங்கே ஈர்த்ததாயும் முயற்சியில் வருங்காலத்தில் ஞாலத்தில் போற்றக்கூடியதாயும்—ஏன் ஓர்கால் உலக வல்லரசுகளத்தனையிலும் மகோன்னதமானதாய்—ஏக சக்ராதிபத்யம் வகிக்கும் தன்மையைப் பெற்றதாயாகுமெனப் பல நாட்டு அறிஞரும் மதிக்கும் பாரத கண்டத்தின் நிலைமையை இன்று கவனிக்கும் ஒவ்வொரு இந்தியரும் கண்ணீர் வடிக்கவே வேண்டும்.

நீர் வளம் நிறைந்தது; நிலவளம் மிக்கது; மலை வளம் பெருகிய இந்திய நாட்டில்—ஏதும் குறைவற்று மிகுந்து விளைந்து நாட்டினர் ... ரி, வறுமையைப் போக்கி சமாதானத்தையே நல்கி சாந்தியைக்

கொடுக்கும் புண்ணியபூமி, 'செல்வம் எத்தனையுண்டு புவிமீதே, அவை யாவும் படைத்த' பொன்னாட்டினர், இன்னாளில் ஜனங்கள் சோற்றுக்கும் வறிஞராய்—வாழ்வுக்கும் தீயராய்நின்று பூமிக்கோர் பாரமாக—மக்களுக்கோர் தீங்காக இருந்து வருகின்றார்கள் என்பது ஆச்சர்யமன்றோ!

அடிமை நாட்டிலே மக்களின் கவனம், க்ஷேமத்தையும் விடுதலையையுமே கோருவதற்குப் பதிலாக, தீமையையும் நாசத்தையும் கொடுக்கும் சமூகப் போராட்டங்களில் தலைபிட்டு மடிந்து, தம் சோதரர்களையும் அதில் பங்கு கொள்ளச் செய்து மாசுண்டாக்கி அழியாத கறையை நாட்டிச் செல்கின்றனர். என்ன வேண்டும்? எது செய்வது உசிதம் என்று இந்த அறிவிலிகளுக்கு ஏனோ தெரியவில்லை. மனம் பொங்குகின்றது. கண்ணீர் வடிகின்றது. கரம் நடுங்குகின்றது. இம்மதியிலே பம்பாய் நகரத்தில் நடந்த—நடைபெற்ற—இன்னும் நடந்து கொண்டு வருவதாயிருக்கும் இந்து—முஸ்லிம் கலகத்தைப்பற்றியே நமது கவலை மிகுந்து வருகின்றது. காசு பெறாத விஷயங்களுக்கும் இந்து—முஸ்லிம் போராட்டமென்றால், இந்தியாவின் நிலைமை யென்னாகும். அந்தோ! பரதகண்டமே!!

துரதிர்ஷ்டவசமாக இந்தியா நாளாவட்டத்தில் அன்னியர் ஆட்சிக்குட்பட்டுத் தவிக்கின்றபோது, உள்நாட்டுச் சில்லறைக் கலகங்கள் அதனை இருக்கிப் பிடித்து நிலைநாட்டி வருகின்றன. இந்த இந்து—முஸ்லிம் சச்சரவால் எத்தனை சனங்கள் மாண்டொழிந்தனர், எத்தனைபேர் படுகாயமுற்றனர், எத்தனைபேர் வீடிழந்து மறைந்தனர். இவ்வாறெல்லாம் சம்பவிக்க வேண்டியதுதானோ?

நீண்டகாலமாக இந்தியா இஸ்லாமிய சோதரர்களைத் தன்னகத்தே சேர்த்து, தன்னருமைக் குழந்தைகளாகவே பாவித்துவிட்டது. தேவி பாரதியாக இன்று இந்து—முஸ்லீம் சோதரர்கள் இந்தியாவை வாழ்த்தி வந்தித்து வருதை நாமறிவோம். நாட்டின் இயல்பையும் காலப் போக்கையும் கவனியாது எடுத்ததிற்கெல்லாம் ரத்தக்களம் ஆக்கி, தேசத்தைப் பாழ்படுத்த முனைந்திருக்கும் கொடியர்களை அறிவுளோர் அடியோடு புறக்கணித்தாலன்றி இவைகளுக்கு விமோசனம் சமீபத்திலில்லையென்பது அறியத்தக்கதாகும்.

இந்தியாவிலேயுள்ள 36 கோடி ஜனங்களில் இன்று ஜனத்தொகை மிகுதியான சமூகம் ஹிந்து சமூகமென்றும், அடுத்த படியாக முஸ்லீம் சமூகமென்றும் சொல்லப்பட்டு வருகின்றது. சமீபத்தில் வெளிவந்த ஜனக் கணிதத்தின்படி 8 கோடி முஸ்லீம் மக்கள் நீங்கலாக பாக்கியுள்ள 28 கோடி ஜனத்தொகையில் அக்கணக்கின் பிரகாரமே கிறிஸ்தவர்களும், பௌத்தரும், பார்ஸியரும், சீக்கியரும், பிற மதஸ்தர்களும் அடங்குவர். இதில் தனியாக ஆதி திராவிடர்கள்—ஒதுக்கப்



பட்டவர்கள் என்போர் 8 கோடிப்பேர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். மேற்கண்ட இவைகளிலிருந்து தனியாக இந்துக்களை மட்டும் பிரிப்போமானால், 15 கோடி ஜனங்கள் தேறுவதும் மிகக் கடினம் என்பது தெரியவரும்.

இராஜீயத்திலும் பொருளாதாரத்திலும் ஒருவர்க்கொருவர் நம்பகமின்றி யிருப்பதாலேயே, விஷமிகளால் இழைக்கப்படும் இத்தகைய போராட்டங்கள் நிகழ ஹேதுவாயிருக்கின்றன. நெடுநாட்களாக இந்தியாவைத் தங்கள் தாய் நாடாகக் கொண்டுள்ள முஸல்மான்கள், தங்கள் மதத்தை மிகுதியும் கவனிப்பதாயிருந்தாலும் நாட்டையும் அவ்வாறு கவனிக்கவேண்டிய பொறுப்பை உடையவர்களா யிருக்கின்றார்கள். இந்துக்களும் முன்னிலும் மிகுதியாக இஸ்லாமிய சோதரர்களை நேசித்து உறவாடவேண்டியது நிவர்த்தியற்றதாகும். இரு பெருஞ்சமூகத்தாரும் சமாதானத்துடன் வாழ்ந்தாலன்றி, எவ்வழியிலும் பிரவேசிக்க முடியாதென்பதை நன்கு அறிந்துகொள்ளவேண்டும்.

நாட்டிலே நம்பிக்கையின்மையும், மோசமும், சூதும், போரும் நிகழ்ந்துவரும்போதெல்லாம் இயற்கையா யமைந்துள்ள எதிரிகளுக்குக் கொண்டாட்டமே. 'எரிகின்ற வீட்டில் எடுத்தது ஆதாயம்' என்ற கொள்கையைப் பற்றிய பலர் சூழ்ந்து சுற்றி சமயம் பார்த்துக்கொண்டிருக்கும்போது மானத்தை இழக்கத் துணியும் இந்தியச் சோதரருக்கு எச்சரிக்கின்றோம்.

இந்தியா, என்றும் இந்தியர்களுக்கே. யார் வாழ்ந்தாலும் கெட்டாலும் முடிவில் இந்தியர்களே இந்தியாவின் இலாப நஷ்டங்களையடையவேண்டியவர்களென்பதை மறக்கவேண்டாம். இன்று மனமாச்சரியம். நாளை உள்ளன்பு வழிந்தோடி ஒன்றாவர். இடையில் துரோகிகள் சிக்குண்டு நைந்து மடிவர். வஞ்சகர்களின் மாயம் அறியும் பரியந்தமே அவர்களின் அடாத செயல்களும் அட்டகாசப் பெருமிதங்களும் நிகழும். எனினும் தீயர்களின் செயற்கு மேலும் இடங்கொடாது, இரு சாராரும் மனமொத்து விருத்தியும் ஒற்றுமையும் தரும் வழியனைத்திலும் முயல வேண்டுகின்றோம். நிற்க,

சகோதர முஸல்மான்களுக்கோர் விஷயம் இங்குக் குறிப்பிடுவது அவஸ்யமும் நமது பிரதான கடமையுமாகும். நூற்றாண்டு நூற்றாண்டுகளாக இந்தியாவில் வாழ்ந்து, இந்தியாவையே தாயகமாகப் பெற்றுள்ளீர்கள். உங்கள் வாழ்வும், க்ஷேமமும், செல்வமும், செல்வாக்கும் இங்கேயே தோன்றுகின்றன. அதுபோலவே உங்கள் துன்பங்கள் பிற கஷ்டங்கள் யாவும் இங்கேயே பிறக்கின்றன. பொதுவாக இந்துக்களுக்கு இங்கு என்ன என்னவெல்லாம் தோன்றியும் மறைந்தும் போகின்றனவோ அவைகளில் ஒரு சிறிதும் குறைவின்றி யப்படியே உங்களுக்கும் விளைகின்றன; வித்தியாசம் சிறிதுமில்லை. பின் ஏன்

உங்கள் மனம் சஞ்சலமுறவேண்டும்? உங்களில் ஓர் சோதரர் தவறிழைத்துவிட்டால் மன்னிப்பதைப்போன்று ஹிந்து சோதரர்கள் குற்றமிழைத்தாலும் விசால நோக்கங்கொண்டு மன்னியுங்கள். அன்று உங்களின் தண்ணளியுணரப்படும். பின்னர் அவ்விதம் குற்றமிழைக்க முன் வருவதற்கு நபர் தேடினும் கிடைப்பதருமை. சிலர் ‘மதம்’ சொல்லுகின்றவண்ணம் செய்வதாகப் பாமர மக்களை ஏமாற்றி மோசம் செய்கின்றனர். மதம் என்பதென்ன? அது எதற்காக வென்பதை அறியாத பெரும்பாலான மக்கள், சூது வார்த்தை யென்பதறியாது வஞ்சகர் வயப்பட்டு வீழ்ந்து மடிகின்றனர். இவர்களின் பாபம் அனைத்தும் அறிவுள்ள மக்களைச் சேராதிருக்க அறிஞர் முயலவேண்டிய தவஸ்யமல்லவா?

ஆண்டவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் அறிந்தவன்; யாவும் செய்ய வல்லவன்; அனைத்தையும் உடையவன். அவன் அருளின்றி நடப்பதில்லை. அவனது நினைப்பின்றி இயங்குவதில்லை. யாவும் அவனது செயலே யென்று சுருக்கிக் கூறவேண்டியதே. ஆண்டவனை வாழ்த்தி வந்திக்கத் தகுந்த மானிடர், தவறிழைத்து அழிந்தொழிவது அறிவுடைமையோ? மனிதன் நல் வாழ்வு பெறவும், வாழ்க்கையின் உண்மையுணரவும், ஆசையின் பற்று அறவுமே மதம் உண்டானதென்பதை உணர்த்த முயலவேண்டியது மிக மிக அவசரமாகச் செய்யவேண்டிய நற்பணிகளில் முதற் பணியாகும். மதத்திற்காக எதனையும் செய்யலாம் என்று, மதத்தின் பேரால் பறையசைந்து படுகுழிக்கிட்டுச் செல்வதையும்; மனிதனுக்காக எவற்றையும் எவ்வாறும் செய்யலாமென்று அந்த மதத்தின் பேராலேயே முரசடிப்பதையும் நிவர்த்தித்து, மதத்தின் உண்மையான தன்மையையும் நேர்மையையும் மக்களானோர் பின்பற்றச் செய்யவேண்டியது சீர்திருத்தக்காரர்களின் கடமையாகும்.

மற்றபடியாக இந்து சோதரர்களுக்கும் ஓர் சிற்றுரை இங்கு வழங்கவேண்டியதும் மிக மிக அவஸ்யம்.

கடவுள் எங்குளன் எங்குளன் என்று தேடித் தேடித் தெருவடைந்து இந்தியாவின் மானத்தை இழக்கக் காரணமாயிருந்த இந்தியர்களாகிய நீவிர், இனிமேலாகினும் உண்மையறியவேண்டும். கடவுளைத் தேடி அலையும் வேகம் அதி மோசமாகவில்லை யென்றாலும் பொய்யான முறைகள் (கொள்கைகள்) அவ்வாறே இருந்து வருகின்றன. அத்துடன் இடையிடையே கால நெருக்கடியில் மேலும் நெருக்கடியை உண்டாக்குவதற்குத் துணையான புராணங்களும் சாஸ்திரங்களும் தோன்றி உண்மையறிய முயலும் வழிகளை முன்னிலும் அதிகமாக அடைத்து வருகின்றன; இக்தெல்லாம் இந்துக்களுக்கேற்பட்ட சாபத்தின் கோலம்போலும்.



நாட்டிலே பஞ்சம், கொடுமை, அடிமை, வறுமை ஆகிய பெருத்து, ஆதரவு நல்கும் நல்ல இடங்கள் என்று சொல்லும் பிறமதங்களுக்கு மக்களை அனுப்பிவருகின்றன. நாளுக்கு நாள் வன்மையும் திண்மையும் குறைந்துவரும்போது, வீணான போராட்டத்தையும் வரவழைத்துக்கொள்ளுவது எவ்வளவு மதியீனம்! மதம், மதம் என்று பிதற்றும் பண்டித மணிகள் சல்லியும் பெறார்கள். மக்களின் க்ஷேமத்திலேயே மதங்களுக்கு ஜீவன் என்பது அவர்களுக்குத் தெரிந்தும் உண்மையை வெளியிட்டால், தமது வாழ்க்கை முடிவுற்றுவிடுமென் றஞ்சி சூழ்ச்சி செய்கின்றனர். கடவுளுக்குப் பிரியத்துடன் இயன்றதைச் செய்து வருவதே பக்தியின் முடிபு. உண்மையான பக்தனாயின், அவன் செய்யும் பணியெல்லாம் பரம்பொருளுக்குச் செய்யும் பூஜையாகவே மாறுகின்றது. அறிவுக்குப் பொறுத்தமானதாயும், ஆராய்ச்சிக்கு நிற்கும் விஷயங்களையுமே மக்கள் மதித்து வரும்போது—காலமானது நாகரீகத்தை மிகுதியாகப் பற்றிவரும்போது, பழங் கஞ்சிக் கலசத்தினிடம் செல்வதற்கொப்ப வீண் வேலையில் பிரவேசிப்பானேன்? மேளமும் பசுவும் பக்தனைக் கரையேற்றுவதாயிருந்தால், எவ்வளவு இலகுவாகக் கடவுளை அடைந்துவிடுவர்! இவைகளையெல்லாம் விரிக்கில் புராணமாகவே வளரும். நிற்க, ஒருவர் ஓர் விதமாக நடக்கலாம். மற்றொருவர் மற்றோர் விதமாக நடக்கலாம். இவ்விருவர் நடத்தையும் ஒருவருக்கும் அதிகமாகப் பாதிக்காதிருப்பின், விட்டுவிடுவதே சிலாக்கியமும் முறைமையுமாகும். பிரயோஜனமற்றதாயும் பெருந் தீங்கையும் நஷ்டத்தையும் மிகுதியும் தருவதாயுமுள்ள கலகங்களுக்கெல்லாம் காரணம்: குறுகிய நோக்கமும் விட்டுக் கொடுக்காமையும் மன்னிக்காமையுமே யென்று கூறுவதில் குற்றமில்லை.

மதத்தின் பேரால் நிகழும் சச்சரவுகளுக்குச் சிறிதும் இடமில்லாத முறையில் நடந்து நாட்டின் க்ஷேமத்திற்கு உழைக்கவேண்டிய பொறுப்பான கடமை, மற்றவர்களைப் பார்க்கிலும் ஹிந்துக்களுக்கே அதிகமென்பதை உணர்ந்து, உண்மையும் நேர்மையும் கொண்டு, முஸ்லீம் சகோதரர்களையும் பிற சோதரர்களையும் மிக நேசபான்மையுடன் சேர்த்து க்ஷேமம் அடையவேண்டும். அவ்வாறு ஒற்றுமையுடன் உள்ளன்புடையார்களாகத் தங்கள் தங்கள் கடமையையுணர்ந்து செயலில் கொள்ளும் அன்று முதலே, இந்தியாவின் சுபீக்ஷ காலம் ஆரம்பமாகும். அன்று முதலே இந்தியாவின் விடுதலைக்கு வழி கோலப்படும். அன்று முதலே இந்தியாவுக்கு, அன்னியர்களா லிடப்பட்டிருக்கும் இருப்புச் சங்கிலி அறுந்து வரும். அன்றே இந்து—முஸ்லீம்களைப் பற்றிச் சொல்லிவரும் **இந்தியாவின் இரு கண்கள்** என்ற வாசகம் மெய்யாகும்; மேன்மையுறலாம்; க்ஷேமம் பெறலாம்.

தேவி பாரதியாகிய இந்தியா வாழ்க.

அதன் இரு கண்களாகிய இந்து—முஸ்லீம் சோதரர் வாழ்க.

# தெய்வ பாரதத் திருப்பெருங் காட்சி!

திரு. சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள்.

### தெய்வ சக்தி அன்னை

வீரர் அன்னையை விளக்கொளி யெனப்புவி யேத்தும்
பாரின் அன்னையைப் பசுந்திரு மேனியை யன்பு
சேரு மன்னையைப் பாரதத் தேவியைத் தெய்வச்
சீரின் அன்னையைச் சிந்தையில் உவந்தமு தடைவாம்! 1

சோதிமெய் ஞானானந்த சுத்தனன் நிலையு கந்தோர்
ஈதென வுகப்பைக் கூற வியன்றிடார் போல வென்றும்,
ஆதியம் பொருளே கண்ணாய், ஆதரித் தருள்செய் நாட்டை
வாய்திறந் துரைக் கொணாது மனந்திறந் திறைஞ்சு கின்றேன்! 2.

அறமெலா முதித்த நாடே! ஆரணி யுலகைக் காக்குந்
திறமெலாந் திரண்ட தீரர் திருப்பணி புரியு நாடே;
* வெறுக்கையும், புகழும், ஞான வீரமும் விளங்கு நாடே!
சிறப்பினுக் கணிசெய் நாட்டின் சிந்தனை யெமக்கு வீடே! 3.

புவியினுக் கொளியாய்த் தேவி பொலிந்திடும் பொழிலாய் மாறுஞ்
சிவன் அயன் அருள் சுரக்கத் திருவுறுந் தரும நீழற்
சிவிகையை விரிக்குஞ் செங்கோற் செழிப்பினிற் செயம்பெற் றோங்குந்
தவம்வளர் சுத்த சக்தி தழைத்திடுந் தரும நாடே! 4:

### அத்யாத்மக் கோயில்

இறைவனே யுயிர்க ளாகி இன்பமே வளங்க ளாகி,
யறமதே யரச னாகி யலைகடல் முரச மாகிச்
சிறுமியர் திருவே யாகிச் சிவனரும் புலவனாகி
மறைகளே நூல்க ளாகி, மங்கள மாகு நாடே! 5.

வரையெலாம் முனிவ ரீட்டம்! வனமெலாங் குருகு லங்கள்!
திரையெலாங் கலன்கள்; ஐந்து திணையெலாஞ் செல்வம்; தேவர்
உறைவெலாம் மறைகள்; மாந்தர் உளமெலாங் கருணை தங்கிக்
கரையிலாக் காட்சி சாலக் கவின்பெறு மமர நாடே! 6.

* செல்வம்.



இகந்தனிற் பரந் துலக்கி யிடையறா தினிக்கும், ஆன்மச்
சுகந்தனைக் கனைத்து மீந்தே, துறவினை யணைந்தே, யாசைச்
சகந்தனிற் பற்றி றந்து, தவத்திறல் பெருக்கி, ஆவி
யுகந்திடுஞ் சோதி வீசும் உத்தம முனிவர் நாடே! 7.

எல்லையிற் கடவு ளின்பம் இதயத்தில் அமுது குப்பத்
தொல்பெரு அனுபவத்தில், துளிர்த்தெழுந் தருள் பழுத்தே,
நல்லறி வாளர் பெற்ற நாயக மாகும் வேதச்
சொல்லினை மடுத்தே தெய்வத் தூந்துமி துதிக்கு நாடே! 8.

### இயற்கை அன்னை

வெய்யிலும், மழையுங், காற்றும் விரும்பிடு வளங்க ளீயுஞ்
செய்யவ ளரங்கச் சோலைச் செழும்பசுந் தேனை யுண்டு,
மையரி யினங்க ளூத மயிலோடுங் குமர னாடக்
கைவளர் முரளி பாடக் கண்ணனு முலவு நாடே! 9.

கரையிலாக் கடலை நோக்குங் கன்னியைப் பணிந்து மென்மேல்
வரையினப் படிக ளோங்கி வரையர சிலகிப் பக்கம்
இருமலைத் தொடர்க்கை கூப்பி யியல்பினில் உலக வன்னைக்(கு)
(அ)கரியணை யாக்கி நிற்கும் ஆலயக் குறுஞ்சி நாடே! 10.

[பாரத நாட்டின் குறுஞ்சி நிலத்தை ஒரு அரியணையாக இங்கு வர்ணிக்கப்பட்டுள்ளது. அதன் படிகள் கன்னி முனையினின்று, நீலகிரி, விந்தியம், சாத்பூரா, இமயமாக உயர்கின்றன; மேற்கு, கிழக்குத் தொடர்கள், அரியணையின் கைபிடிச் சுவராக நிற்கின்றன. இவையிரண்டும் பாரத அன்னையைக் கைகூப்பித் தழுவுவது போலிருக்கின்றன.]

வரநதி, அயன்சேய், கோதாவரி, கிருட்டினை, காவேரி,
பரணி, பெண்ணாறு, வைகை, பால்நதி; பரவுஞ் சிந்து,
நருமதை, தபதி, பாயும் மாநிதி யணி வளத்தில்
மருதயாழ் இடைவிடாது மங்களம் முழங்கு நாடே! 11.

ஆறணி வெளியுந் தோகை யளியணிச் சோலை; யின்பச்
சோறணி பழனம்; ஞானச் சுடரணி வளங்கள்; வெற்றி.
வீறணி மாந்தர் வேத விதியணி வாழ்விற் றெய்வம்
பேறணிந் திலகி யோங்கிப் பேரழ குவக்கு நாடே! 12.

கலமறாக் கடலுந் தேனின் கசிவறாப் பணையுங் காவி
யலராறுத் தடமும் புட்கள் ஆர்ப்பறாப் பொழிலும், வேதச்
சிலம்பறாச் சாலை யான்மத் திறமறா வீர மோங்கு
நலமறா வாழ்விற் றெய்வ நறுமணங் கமழு நாடே! 13.

## இன்ப வாழ்வினன்னை

சோதியாய் உள்ளம்; அன்புத் தொடர்பாய் சமூக வாழ்வு;
நீதியாய் அரசு; தூய நினைவாய் ஒழுக்கம்; தெய்வப்
போதமாய் புலவர்; சேமப் பொற்பாய் மனையும், வீரக்
காதலாய் இளைஞர்; செல்வக் கலைகள் பாய்ந் திலகு நாடே! 14.

உழுபடைத் தொழில்க ளோதை; ஓமெனும் இராட்டி னோதை;
கழைபயில் வீர ரோதை கல்விநன் முயற்சி யோதை;
குழலொலி, கொஞ்சு யாழின் குயிலொலி, மனைகடோறும்
மழலையும் வள்ளை யினும் மங்கல மொலிக்கு நாடே! 15.

வீங்குயர் செல்வ வாறு விம்மிடு வணிக ரோதை
நீங்கறு வண்மை யாளர் நீடிசை வழங்கு மோதை;
ஓங்குக செங்கோ லென்றே யும்பரிற் புட்க ளோதை;
பாங்குறுந் திருவி ழாக்கள் பரவிடும் பரவை யோதை! 16.

தத்தையும் பிகமும், பூவை, சாதகம், கலிங்கப் புட்கள்
முத்தமி ழன்றி வேறு முயலருங் கீத மார்க்கும்;
எத்திசை முகமும் பற்பல் லியமெதி ரொலிக்க வன்பர்
பத்திசெய் பனுவ லின்பம் பாரெலாம் பரவு நாடே! 17.

## பச்சிளஞ் செல்வி

வளத்திடைச் செல்வி; வண்டார் மலரிடை யன்னஞ் செல்வ
நலத்திடை யீகை; யீகை நயத்திடை நறுங்கலைகள்;
புலத்திடைத் தெளிவு; வாழ்வின் பொற்பிடை யமுது; செய்ய
வுளத்திடை யமைதி போல வுறவொளி நிலவு நாடே! 18.

பொன்விளை வயல்கள் மீது பூங்கரும் போங்க, வாழை
யின்னிழற் பயிர் விரிப்போ டெழுந்திடும் பசிய சோலை;
தென்னைமாப் பனசம் வாசத் தேனுகுத் தோங்கு மெல்லாம்
அன்னையி னன்புக் கோயிற் கணிசெயுந் திருவினாடே! 19.

பள்ளி நெல் லீந்து கொள்வர் பாடியின் வரகை; நெய்தற்
செல்வத்தை யீந்து வெற்பின் சிந்துரத் தந்த மேற்பர்;
மள்ளருங் குறவர், ஆயர் மறவரும், பரதர், தத்தம்
உள்ளத்தை யூன்றி வாழ்வர் ஒற்றுமை தன்னில் மாதோ! 20.

## போக—யோக வாழ்வு!

ஈதலின் மகிழ்வார்; தன்னந் தனிமையில் இன்பந் துய்ப்பர்;
சாதற்கும் பிறத்த லுக்குந் தளர்ந்து மெய்யஞ்சார்; வேதம்



ஓதலி னொழுக்கங் காண்பர்; உணர்வினில் அருளே காண்பார்;
மாதரில் அன்னை காண்பர் மாசிலாக் கடவுள் வீரர்! 21.

போகமுந் துய்ப்பர் பற்றைப் போக்கியே யான்ம வெற்றி
யோகமுந் துய்ப்பர்; முற்றும் உயிரிடை யிறைவ னாரின்
பாகமுந் துய்ப்பர்; எங்கும் பலவென விரிந்த வொன்றில்
ஏகமுந் துய்ப்பர்; சோதி யிளமைதுய்த் திலங்கு மேலோர்! 22.

## பாரதத் தாய்மார்கள்

கண்ணினால் மானே யாவர் கற்பினிற் சனகி யாவர்
பண்ணினாற் குயிலே யாவர் பணியினால் அணியே யாவர்;
எண்ணினாற் சக்தி யோங்கும் எழில்மிகுந் தின்ப மாவார்;
வண்ணமாச் சோதி யன்னை வடிவமை மாதராரே! 23.

முளரியை யானை செய்ய முகமலர் வளர்க்க; அன்னம்
வளர்த்திட நடையை; மின்னல் வாணகை வனப்பை; வேனில்
இளந்தளிர் மேனி மின்னார், இந்நிலச் சேய்களைத் தம்
வளமுலை யமுதி னூட்டும் வான்பசு வனையர் மாதோ! 24.

திருவையர் அணிமின் வீசச் செழியயாழ் மீட்டி யுள்ளம்
உருகிடத் தலைவன், யார்மேறா டுறங்கிடக் கிள்ளை யீட்டும்;
விரியுமென் றக்குலங்கள் விழிமலர்ச் சுற்றி யாடும்
இருதனம் பழங்க ளென்றே யினங்களைக் குயிலுங் கூவும்!! 25.

வனப்பெனுந் தேரி லேறி வாட்படை விழிகள் மின்னத்
தனக்கரி பொருத முன்னே தழங்கணி முரச மார்க்க,
மனப்புலி தோற்ற வாண்கள் மணிச்சுடர்ப் பூச்சி யாக,
அனங்கனின் படையே யாகி யரிவையர் பொலிந்திட்டாரே! 26.

## சத்திய யுகவரசி

வேதமும் ஒழுக்கம் ஒன்றும்; வீரமும் அறமும் ஒன்றும்;
காதலுங் கற்பும் ஒன்றும்; கண்ணொடுங் கருணை யொன்றும்;
ஈதலோ டிரக்க மொன்றும்; இன்பத்தோ டிறைவ னொன்றும்;
நீதியோ டருளு மொன்றும்; நெறியினிற் பெரிய நாடே! 27.

இல்லையேல் "இல்லை" இல்லை இலைவெறுப் படிமை யச்சம்;
இல்லைவெங் கொலையும் போரும்; இலைபுறங் காட்டும் பேதை;
இல்லைதன் னுரிமை தன்னை யிழந்திடப் பார்க்கும் பேடி;
இல்லை ஆருயிர் அனைத்தும் ஈசன்பங் கென்ப தல்லால்! 28.

தத்துவத் தலங்க ளோடுந் தழைபசு வளங்க ளோடும்,
நித்திய முத்தி சேரும் நிதியொடும், நீதியோடும்,
இத்தல மெல்லாம் உய்யும் இணையறு முண்மை யோடுஞ்
சத்திய யுகத்தை யாளுந் தனிப்பெரு மரசி வாழ்க! 29.

### நித்திய சக்தி யன்னை

எவற்றினும் முதியள்! என்றும் இளையளாம், எங்க ளன்னை!
தவத்தினிற் பழுத்த மைந்தர் தமதெழின் முகமே யானாள்;
சிவத்தனிச் செல்வி; அன்பிற் சிறந்தவள்! சீர்த்தி பொங்க
நவப்புது யுகத்தை யாளு நாயகி யவளே யன்றோ! 30.

தருமத்தில் வெற்றி யான்ற சத்தியப் புகழில் வெற்றி;
கருமத்தில் வெற்றி; செஞ்சொற் கவியினில் வெற்றி; ஆன்ம
வொருமையில் உயர்ந்த வெற்றி! உள்ளத்தி னொளியில் வெற்றித்
திருமிகு வெற்றி யோங்கிச் சிறந்தெம தன்னை வாழ்க! 31

### போற்றி!

வீரரின் உயிரே போற்றி! வெற்றியின் விளக்கே போற்றி!
பூரணக் களிப்பே போற்றி! புண்ணிய விண்ணே போற்றி!
பாரொளிர் அறிவே போற்றி! பச்சிளந் திருவே போற்றி!
தீரரின் றாயே! சத்தித் தேவியே போற்றி போற்றி! 32

கண்ணுறு மணியே! வாழ்வின் கற்பகக் கனியே! தெய்வப்
பண்ணுறு மொழியே! இந்தப் பாருறு முத்தி வீடே!
உன்னுடை மார்பை யெங்கள் உள்ளலர் மாலை யாலே
பொன்னுறச் செய்யும் வீரப் புண்ணியம் அருளுவாயே! 33

மூச்சினில் நீயே! செய்ய முயற்சியில் நீயே! வீரப்
பேச்சினில் நீயே யெங்கள் பெட்பினுக் கணியும் நீயே!
காட்சியும் நீயே செய்ய கருத்தினிற் றுடிப்பு நீயே!
ஆட்சியின் அரசி நீயே! அருட்பெருஞ் சோதித் தாயே! 34

அறத்தினில், அறிவினிற்பே ராண்மையில், பெண்மை தன்னில்,
வரத்தினில், ஆன்ம சித்தி வளத்தினில், வண்மை தன்னில்,
பரத்தினில், இகத்தில், இன்பப் பதம்பெறும் பரிசில் வீரத்
திறத்தினி லோங்கித் தெய்வத் தேசுறத் தேசம் வாழி! 35

# எனது குருநாதரின் கடிதம்.

(மனோகரனார்.)

## VI

உதயகிரியாச்சிரமம்,
13—5—32.

பாரதப் பெண்மணிகளே! இந்திச் செல்விகளே!!

என்ன செய்கிறீர்கள்? உங்கள் அன்னை "பாரதி" வறுமையுற்று, வாடி, வதங்கி, ஆவி சோர்ந்து நிற்கிறாள். உண்ண உணவும், உடுக்கத் துணியும் இன்றி அடிமை வாழ்க்கையில் அல்லலுறும் தன் மணிவயிற்றிலுதித்த முப்பத்தாறு கோடி மக்களின் நிலையைக் கருதி மனமுருகி நிற்கும் இந்தியத் தாயின் மதி முகத்தைக் கவனியுங்கள். பாஹியான், ஹியுவான் சாங் போன்ற சீனத் தூதரும், ஷம்சுதீன், கமாலுதீன் போன்ற மஹம்மதிய அறிஞரும், மெகஸ்தனீஸ், மார்க்கோ போலோ போன்ற யவன யாத்திரீகர்களும் பலர் தன் அவைக்களத்தில் வீற்றிருக்க, வில்லும் வாளும் ஏந்திய வீரப் புதல்வர்களாம் இந்திய முடி மன்னர்கள் புடை சூழ, அருந்ததி யன்ன கற்பிற் சிறந்த காரிகையரும், கலைமகளெனக் கல்வி நலம் வாய்ந்த காந்தாமணிகளும் ஏவல் புரிய, டக்கா மஸ்லின் போன்ற தூய வெண் துகிலுடுத்தி, கோல கொண்டா வைரங்களிழைத்த மணிமுடி தரித்து, ஒப்பற்ற உயர் மணிகளிழைத்த அரியாசனத்தில் அமர்ந்து, இமயம் முதல் குமரி வரை படர்ந்த நிலப் பரப்பைச் செங்கோலோச்சி வந்த பராசக்தியாம் 'பாரத தேவி' இன்று தன்னரசு குலைந்து, அடிமை வாழ்க்கையெய்தி, தன் வீரப் புதல்வர்கள் கோழைப் புதல்வர்களாகித் தன்னை நோக்கி நிற்க, தன் அணி வயிற்றிலுதித்த அங்கனா மணிகள் அபலைகளாகித் தவிக்க, கட்டத் துணிக்கும், காலப் போக்கிற்கும் அயல் நாடுகளை எதிர்நோக்கி வாழும் நிலையை உங்கள் அகக் கண்ணால் உற்று நோக்குங்கள். உங்கள் ரத்தம் கொதிப்பேற வில்லையா? உங்கள் மெய் சிலிர்க்கவில்லையா? உங்கள் உடல் துடிக்கவில்லையா? உங்கள் முன்னோர்கள் நிலை யென்ன! உங்கள் நிலை யென்ன! ஒரு முறை எண்ணிப் பாருங்கள்.

கார்க்கி, மைத்ரேயி, விஸ்வவரை, காத்தியாயினி போன்ற உங்கள் சோதரிகள் வேத மந்திரங்களை இயற்றியும், தர்க்க—வேதாந்த சாஸ்திரப் பண்டிதைகளாகத் திகழ்ந்தும் வேத காலத்தில் உங்கள் நாட்டை விளங்க வைத்திருக்கின்றனர். புராண காலத்தில் கற்புக்

கரசிகளாய் விளங்கிய அனுசூயை, சாவித்திரி, தமையந்தி, நளாயினி, மண்டோதரி முதலிய மங்கை நல்லார்களும், சமர்க் களத்தில் ஆடவர் தமக்கு உதவி புரிந்து அஞ்சாமை காட்டிய கைகேசி, சத்தியபாமை முதலிய வீரப் புதல்விகளும் உங்கள் முன்னோர்களல்லவா? அத்துணை தூரம் செல்வானேன்? சரித்திர காலத்தில் வீரம் புரிந்து, மானங் காத்து, நாட்டைப் புரந்த நங்கையர் திலகங்கள் எத்தனைப் பேர்! இராணி சம்யுக்தை, துர்க்காவதி, தாராபாய், ஜான்ஸி ராணி, மங்கம்மாள் போன்ற மாது சிரோமணிகள் அதற்கு உதாரணங்களல்லவா? நாட்டிடை நிகழ்ந்த வெஞ்சமர் ஒன்றினில் தன் கணவனை யிழந்த காரிகை யொருவள், மீண்டும் தன் ஒரே புதல்வனை அச் சமர்க்களம் விடுத்து வீறு கொண்டு நிற்கையில், அக் குமரன் புறங்காட்டி வீழ்ச்சியுற்றானென்ற வெற்றுரையைக் கேட்டு வீங்கிய கோபத்தால் அக் கோழை மகனுக்குப் பால் கொடுத்ததன் மார்பை யறுத்தெறிய முனைந்த வீரச் செய்கை நடைபெற்ற சூரர் நாடு எது? கூழுக்குப் பாடிக் குடிசையை மாளிகை யாக்கிய ஔவை யெனும் பாட்டி அவதரித்த தேயம் எது? ஆண்டவன்மீது வேண்டிய பாமாலை புனைந்து இறைவனோடு இரண்டறக் கலந்த உத்தமி ஆண்டாள் உற்பவித்த இடம் எது? புனிதவதி திலகவதி போன்ற புண்ணிய மங்கையர் தோன்றிய கண்ணிய நாடு எது? உங்கள் இந்திய நாடே யல்லவா? இத்துணைப் பெருமை தங்கிய பெண்மணிகளின் வழி யுதித்த உங்கள் நிலை இன்று எவ்வாறிருக்கிறது? சற்று யோசித்தீர்களா?

உங்கள் மேனி ஒளி யிழந்து நிற்கிறது. உங்கள் உடல் உணவின்றி வாடுகிறது. மானங் காக்கப் போதிய உடையின்றித் தவிக்கிறீர்கள். கல்வியைக் கைவிட்டீர்கள். உங்களிற் பலரை வழுக்கி வீழ்ந்தவர்களாக்கினீர்கள். உங்கள் மக்களைக் கோழைகளாக்கி விட்டீர்கள். மூட நம்பிக்கைகளின் பாற்பட்டு உங்கள் நலத்தை யிழந்து வருகிறீர்கள் அயல் நாட்டு நாகரிக மோக வாழ்க்கையில் வீழ்ந்து உங்களிற் பலர் சுயமதிப்பை யிழந்து நிற்கிறீர்கள். உங்கள் இயற்கை யழகை மறைக்கும் வகையில் பொன்னாலும், மணியாலும் சமைத்த பூணாரம் பல பூண்டு பொம்மைகளாக விளங்க விரும்புகிறீர்கள். உங்களை இன்று உலகம் எவ்வாறு கருதுகிறது? உங்கள் ஆடவர்கள் உங்களை எவ்வாறு மதித்து வருகிறார்கள்? அடிமைகள்; அபலைகள்; அறிவற்றவர்கள்; வெளியுலக நிலை யறியாத கண் மூடிகள்; உணர்ச்சி யற்றவர்கள்; போக சாதனங்கள் என்று மாத்திரமே கருதப்படுகிறீர்களல்லவா? இதைவிட இழிதகைமை வேறுண்டா? சுமார் முப்பது கோடிக்கு மேற்பட்ட இந்திய மக்களில் பாதிப்பேர் எனவே பதினைந்து கோடிக்கு மேற்பட்ட மக்கள் நீங்களே (பெண்களே) யென்பதை எண்ணிப் பாருங்கள். தங்கள் உடலிலும் உயிரிலும் பாதியாக



விளங்கும் உங்கள் துணையின்றி ஆடவர்கள் எதைச் செய்ய மாட்டுவார்கள்? இந்திய சமுகத்தில் பாதிப் பேரை அஞ்ஞானத்தில் ஆழ்த்தி அபலைகளாக இருத்தி ஆடவர்கள் மாத்திரம் நாட்டின் நலத்திற்கு என்ன சாதித்துவிடப் போகிறார்கள்? உங்கள் துணையின்றி எக் காரியம் நிகழும்? வெளியில் சுதந்திரமற்ற பொம்மைகளென உங்களைக் கூறுகிறார்களன்றி, உண்மையில் குடும்ப நிர்வாகத்தில் நீங்கள் அரசிகளாக விளங்குவதை யாரால் மறுக்க முடியும்? மங்கையராகிய நீங்கள் மனம் வைத்தால் எதையும் சாதிக்க மாட்டுவீர்கள். ஆக்கவும் அழிக்கவும் வல்ல சக்தி உங்களிடத்தில் அமைந்திருக்கிறது. எனவே சக்தி சொரூபிகளாக விளங்குகிறீர்கள். முக்கால முணர்ந்த முனி புங்கவரும் கடவுளின் சக்தியைப் பெண் தன்மையாகவே வர்ணித்திருக்கின்றனர். திருமால் மார்பில் மங்கையைத் தாங்கினாரெனவும்; பிரமன் நாவினில் நாமடந்தையை வைத்துளாரெனவும், பரமசிவன் பாதியுடலிற் பார்வதியைக் கொண்டுளாரெனவும் முன்னோர்கள் கூறிய வர்ணனைகளின் உட்கிடை யென்ன? முத்தொழில் புரியும் முன்னோர்களுக்கும் அத் தொழில் புரியும் ஆற்றல் பெண்மையின் பெருந் துணையாலேயே வாய்க்குமென்பது உட் கருத்தன்றோ? எனவே உங்கள் பெருமையை எண்ணிப் பாருங்கள். பெண்களின்றி ஆண்களில்லை; ஆண்களின்றிப் பெண்களுமில்லை. ஆகவே ஆடவரும் பெண்டிரும் ஒன்று கூடியே வாழ்க்கைச் சகடத்தை யிழுக்க வேண்டும். ஒரு நாட்டின் நன்மையும் அந் நாட்டு மக்களாகிய ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலாராலுமே சாதிக்கப்பட வேண்டும்.

கடந்து முடிந்த ஐரோப்பிய மகா யுத்தத்தைக் கவனித்தீர்களா? ஜர்மனி, ருஷியா, பிரான்சு, இங்கிலாந்து தேயங்களில் ஆடவர்கள் போர்க்களம் புகுந்தகாலையில், அந்நாட்டு மகளிர் முன்வந்து போருக்கு உதவி புரிந்தும், நாட்டிடைக் காலியான உத்தியோகங்களி லமர்ந்தும், பலதுறைக் கைத்தொழில்களைக் கைப்பற்றியும் செய்துவந்த ஊழியம்—உதவி யாரால் மறக்க முடியும்? துருக்கியும், எகிப்தும், சீனாவும், ஜப்பானும் இன்று முன்னேறி வருவதற்கு அந் நாட்டு மகளிர் செய்து வரும் முயற்சி கண்கூடு. ஐரோப்பாவில் குடியரசுக்கு அடிகோலிய பிரான்சு தேசம், சர்வாதிகாரம் படைத்த முடி மன்னர்களின் ஆட்சியை வீழ்ச்சி யடையச் செய்த சுதந்திர யுத்தத்தில், முழு வெற்றி பெறுவதற்குக் காரணமாயிருந்த ஜோன் ஆப் ஆர்க் என்ற ஒரு பெண் மணியின் வீரத்தை இன்று உலகில் புகழாதவர் யார்? எனவே இந்தியப் பெண்மணிகளாகிய நீங்கள் விழித்தெழ வேண்டும். இன்று உங்கள் நாட்டின் விடுதலைக்கென நடைபெறும் முயற்சிகள் யாவற்றிலும் நீங்கள் பங்கு பெற்று வேலை செய்ய வேண்டும். ‘அடுப்பூதிக்குப் படிப்பேன்?’ என்று கூறிய ஆடவர்களும் சில வருடங்களாகப் பெண்

கல்விக்குத் துணை புரிந்து வருகின்றனர். உங்களிற் பலர் இன்று சர்வகலாசாலையிற் புகுந்து பண்டிதைகளாக வெளிவந்திருக்கிறீர்கள். நாட்டு மொழிகளில் புலமை வாய்ந்த புத்திரிகளும் பலர் காணப்படுகிறார்கள். பத்திரிகை யாசிரியைகளாகவும் பலர் பாடுபட்டு வருகிறீர்கள்.

இடைக்காலத்தில் இந்தியப் பெண்கள் உலகை வந்து கவர்ந்த அஞ்ஞான மென்னும் மேகக் கூட்டங்கள், காந்தியடிகளாரின் சாந்த இயக்கமென்னும் சண்டமாருத வீச்சினால் இப்போது கலைந்து வருகின்றன. சுதந்திர ஜோதி என்னும் விஞ்ஞான சூரியன் உங்கள் நாட்டிடைக் காய முற்பட்டுவிட்டான். உங்கள் சோதரிகளிற் பலர் விழித்துக்கொண்டனர். உங்கள் தேசமெங்கும் மாதர் மகா நாடுகள் பல நடந்து வருகின்றன. பெண்கள் விடுதலை எங்கும் பேசப்படுகிறது. ஆடவரும் பலர் உங்களுக்குத் துணை புரிய முற்பட்டிருக்கின்றனர். புனா போன்ற இடங்களில் பெண்களுக்கெனத் தனிச் சர்வகலாசாலையும் தோன்றியுளது. நாடெங்கும் பெண் பாடசாலைகள் நாட்டப்படுகின்றன. கவியரசி சரோஜினி, கஸ்தூரி பாய், கமலா பாய், வசந்தா தேவி, போபால் பீகம், ஆசண்ட ருக்மணி, முத்துலக்ஷ்மி, ராதாபாய் போன்ற உங்கள் சோதரிகள் இந்திய மாதருலகத்தின் முற்போக்குக்கும், நாட்டின் நலத்திற்கும் உழைத்து வருகின்றனர். இன்று சட்டசபைகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் வாக்களிக்கும் உரிமை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அச்சபைகளின் அங்கத்தினராகவும் உங்களிற் சிலர் அமர்ந்திருக்கின்றனர் சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற வட்ட மேஜை மகாநாட்டிலும் உங்கள் சகோதரிகளிருவர் உங்கள் சார்பாக ஸ்தானம் வகித்திருக்கின்றனர். அகில இந்திய காங்கிரஸ் மகா சபையும் ஒருமுறை சரோஜினி தேவியாருக்குத் தலைமை வழங்கி இந்தியப் பெண்கள் உலகத்திற்குப் பெருமை கொடுத்துளது. காங்கிரசின் சாப்பாகக் கண்டுள்ள இந்திய சேவாதளத்திலும் பல மாது சிரோமணிகள் சேர்ந்து தேச சேவை செய்து வருகின்றனர். உடன் கட்டையேற்றும் வழக்கத்தை யொழிக்கவும், தேவ தாசித் தொழிலை யொடுக்கவும், பாலிய மணத்தைத் தடுக்கவும் சட்டங்கள் தோன்றி மாதருலகத்திற்கு மகிழ்ச்சி யூட்டி வருகின்றன. கலப்பு மணங்களும், காதற் கலியாணங்களும், கைமை யகற்றும் மறு மணங்களும் நாட்டிடை தோன்றிப் பெண்களுக்கு நன்மை விளைத்து வருகின்றன.

பாரத தேசமெங்கும் சுதந்திர பேரிகையின் ஒலி ஒலித்துக் கொண்டிருக்கிறது. பலவித இயக்கங்களால் உலகமே இன்று கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. பொதுவுடைமைக் கொள்கையும், சமதர்ம இயக்கமும் வெள்ளம்போல் உலகெங்கும் பரவி வருகின்றன. தொழி



லாளரின்—ஏழைகளின்—உழைப்பாளிகளின் கூக்குரல் எங்கும் செவிடுபடுகிறது. இத்தனைக் கோலாகலங்களினிடையில் இன்னும் பாரதப் புதல்விகளாகிய உங்களிற் பலர் உணர்ச்சியற்று உறங்கிக்கொண்டிருக்கின்றனரே! இச்சமயத்தைக் கைவிட்டால் மறு சமயம் வாய்ப்பதரிதாகும். உலக எழுச்சியின் வேகத்தைக் கவனியாது வாளாயிருப்பீர்களானால், நீங்கள் பின்னால் தள்ளப்படப்போவது நிச்சயம். எனவே காலப் போக்கைக் கவனித்து விழித்தெழுந்து வேலை செய்யுங்கள்! சமயத்தின் பெயராலும், சாதியின் பெயராலும், வழக்கத்தின் பெயராலும் உங்கள் சுதந்திரத்தைப் பிணித்துள்ள அக்கிரமமான தளைகளையறுத்தெறியுங்கள். பேய்கள், பிசாசுகள், பில்லி சூனியங்கள், குட்டிச்சாத்தான்கள், சிறு தெய்வங்கள், மாந்திரீகங்கள், சோதிடங்கள், சாமியாடிகள், சகுனங்கள், ஜாதி உயர்வு தாழ்வுகள், தீண்டாமை இது போன்றவற்றின்மீது நீங்கள் வீணில் கொண்டுள்ள மூட நம்பிக்கைகளை விட்டொழியுங்கள். கல்விப் பயிற்சியாலும், விஞ்ஞான சாத்திர ஆராய்ச்சியாலும் உங்கள் அறிவை—புத்தியைக் கூர்மையாக்கிக்கொள்ளுங்கள். இனி ஜன சமூகங்கள் ஒன்றுக்கொன்று பிரிந்து நிற்கவும், உலகில் நாடுகள் தனித்தனி பிரிந்து வாழவும் முடியாதென்பதைச் சிந்தை செய்யுங்கள். அதற்கேற்ப உங்களைச் சீர்திருத்திக்கொள்ளப் பின்னடையாதீர்கள். உங்கள் சமய வெறியை, வைதீகப் பித்தைச் சற்றுத் தளர்த்தி நாட்டின் ஒற்றுமைக்கு வழி கோலுங்கள். ஆசார சீர்திருத்தத்தில் துணிந்து இறங்கும் ஆடவர்களுக்கு நீங்கள் முட்டுக்கட்டைகளாக விராமல், அவர்கள் முயற்சிக்கு அரண் செய்துவாருங்கள். நாட்டின் நலத்திற்கான உழைப்புகளில் ஈடுபடுமாறு உங்கள் சகோதரர்களையும், புத்திரர்களையும் ஊக்கிவிடுங்கள்.

சிவாஜி வீரம் படைத்ததற்கும், பிருதிவி ராஜன் பெயர் வாய்ந்ததற்கும், கிருஷ்ண தேவராயர் கீர்த்தி பெற்றதற்கும், லோகமானிய திலகர், தாதாபாய் நௌரோஜி, லாலா லஜபதிராயர், சித்தரஞ்சனதாசர், பண்டித மோதிலால் நேரு போன்றவர்கள் தேச ஊழியர்களாகத் திகழ்ந்ததற்கும், அலி சகோதரர்கள் அஞ்சா நெஞ்சத்தோடு நாட்டுக்குழைக்க நாட்டங் கொண்டதற்கும், தற்போது மகாத்மா காந்தியடிகளார் உலகில் இத்தனைப் பெருமையுற்றதற்கும் அவரவர்களின் அன்னைமார்கள் சிறு வயதில் ஊட்டிய நற் போதனைகளே காரணமல்லவா? இன்று உங்கள் மடிகளில் தவழ்ந்து விளையாடும் பால் மணம் மாறாப் பாலகர்கள் நாளை வீரர்களாகவும், சூரர்களாகவும், ராஜ தந்திரிகளாகவும், விஞ்ஞானப் புலவர்களாகவும், தேசத் தலைவர்களாகவும், பெரும் மேதைகளாகவும், உலக நன்மையாளராகவும் ஆகக் கூடுமென்பதை யாரால் மறுக்க முடியும்? எனவே உங்கள் குழந்தைகளைப் பிற் காலத்தில்

அத்துணைப் பெரியோர்களாக்குவதற்கு இன்று முதற்கொண்டே ஆயத்தம் செய்யுங்கள். இன்று நீங்கள் வீட்டுக்குள் சிறு குழந்தையின் மனத்தில் ஊன்றும் ஒரு விதை, முளைத்து வளர்ந்து நாளை இமயத்தின் சிகரத்தில் ஏறிப் படர்ந்து, புஷ்பித்து உலகெங்கும் மணம் வீசப்போகிற தென்பது நிச்சயம். "சோம்பேரிகளாகவும், பலவீனர்களாகவும், அறிவாற்றலில்லாத கோழைகளாகவும் பல குழந்தைகளைப் பெறுவதைவிட, அவற்றிற் கெதிரிடையான நற்குணங்கள் வாய்ந்த நாட்டுக்குப் பயன்படும் சில குழந்தைகளைப் பெறுவது மேல்" என்ற ஒரு பெரியாரின் வாக்கியத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.

உங்களில் இளமையும், இனிமையும் வாய்ந்த பாலிய சகோதரிகள் பலரை கைமை யென்ற காரா கிருகத்தில் (சிறையில்) அடைத்து, வாழ்நாள் முழுதும் வாழ்க்கையின் பலனைச் சிறிதும் பெறாத நிலையில் துன்புறுத்தி வருகின்றீர்கள். உங்கள் பாரத நாட்டில் இத்தகைய விதவை வாழ்க்கையில் இன்று நலிவெய்தும் பேதைப் பெண்கள் எத்தனை லக்ஷம் பேர் என்பதை நினைத்துப் பாருங்கள். அவர்களுக்கு ஒரு விடுதலை வேண்டாமா? ஆடவர், தம் மனைவியர் இறந்துபடின் மீண்டும் மீண்டும் பல மனைவியரை மணந்து வாழ்க்கை நலமெய்தத் துணிகையில், பெண்களுக்கு மாத்திரம் ஏனோ அவ் வுரிமை இல்லாது போயிற்று! 'கற்பு' என்பது பெண்களுக்கு மாத்திரம் அல்லவே; ஆடவர்களுக்கும் அஃது உரியதேயாகும். மகாத்மாஜீ யவர்களும் பாலிய விதவைகளுக்கு மறு மணம் புரிந்து அவர்களுடைய கைமை வாழ்க்கையை நீக்கி நாட்டுக்கு நன்மை புரிய வேண்டுமென வற்புறுத்தி வருகிறார். சாத்திரங்களும் மாதர் மறுமணத்தை மறுக்கவில்லை யென்பதற்குச் சாட்சியங்கள் பலவுள. ஆகவே பாரதச் செல்விகளே! உங்கள் உடன் பிறந்த சோதரிகள் பலாது இத் துன்ப வாழ்க்கையை நீக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். உங்களில் பலரிடத்துக் காணப்படும் படுதா (கோஷா) வழக்கத்தையும் விட்டொழியுங்கள். கோஷா முறையில் வெகு பழமை வாய்ந்த துர்க்கி ஸ்தானத்தில் இன்று ஸ்திரீகளின் நிலையைக் கவனியுங்கள். அம்முறை ஒழிந்ததன் பயனாய் துருக்கிய மாதுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தையுற்று நோக்குங்கள். பாரத முஸ்லீம் வனிதா ரத்தினங்களே! இராஜபுத்திர மாதுசிரோமணிகளே! உங்களிடையிலுள்ள கோஷா முறையை யொழித்து வெளிவந்து நாட்டுக்குழைக்க நாட்டங்கொள்ளுங்கள். பாரத தேவி உங்கள் உழைப்பை எதிர்நோக்கி நிற்கிறாள். உங்கள் சகோதரிகளை எழுப்புங்கள். உங்கள் (பெண்கள்) விடுதலையை நீங்களே சாதிக்க வேண்டுமென்பதை மறவாதீர்கள்.



'மாதர் விடுதலை' என்ற மாத்திரத்தில் பெண்கள் ஆடவர்களுக்கு முரண்பட்டு எதேச்சாதிகாரிகளாகவேண்டு மென்பது கருத்தன்று. பிறவியைக்கொண்டு ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்ச்சிகளைக் கூறாது, சரிநிகர் சமானமாக யாவரும் ஒற்றுமையுற்று வாழ வேண்டுமென்பதே கருத்தாம். பெண்களே இல்லங்களுக்கு அரசிகளாதலால் இல்வாழ்க்கைக்குரிய செட்டு, குழந்தைகளைப் பெற்று வளர்த்தல், அடிசில் சமைத்தல், சுகாதார வசதிகளைக் காத்தல், நோய் நீக்கல், மருத்துவம் புரிதல், அறத்தைக் காத்தல் நாட்டு நலம் பேணல், உலகியலுணர்ந்து நடத்தல் முதலிய முறைகளை நீங்கள் கற்க வேண்டும். உங்களிற் பலர் அன்னை பாரதியின் நிலையை யறியாது, பட்டாடைகளின் மீதும், பகட்டான நகைகளின் மீதும், அயல் நாட்டுப் பொருள்களின் மீதும் ஆசை கொள்ளுகிறீர்கள். அதனால் உங்கள் தாய்நாட்டுச் செல்வம் வீணே அழிகிற தென்பதைச் சிந்தித்தீர்களில்லை. பருத்தியாலான கத்தர் ஆடை உங்கள் உடலுக்கும், உயிருக்கும், உணர்ச்சிக்கும் உறுதி பயக்குமென்பதை மறவாதீர்கள். உங்கள் ஓய்வு காலத்தை வீண் வார்த்தைகளில் வாளா கழிக்காமல் கத்தர் நூல் நூற்கவும், மற்றும் பல பயன் தரத்தக்க வீட்டுக் கைத்தொழில்களைச் செய்துவரவும் நீங்கள் தலைப்படவேண்டும். மாதர்கள் மனம் வைத்தால் நாட்டில் மதுபானத்தை மாய்த்துவிட முடியும். முதற்கண் உங்கள் சமூக விடுதலையும், உங்கள் நாட்டின் விடுதலையும் சாதிக்கப்பெற வேண்டுமென்பதை மறவாதீர்கள். எனவே, பாரத வனிதா ரத்தினங்களே! எழுங்கள்! வேலை செய்யுங்கள்! சுதந்திர தேவியின் பவனியிற் கலந்துகொள்ளுங்கள்! அன்னை பாரதியின் ஆசியைப் பெற முயலுங்கள்! நீங்கள் சுகம் பெறுவது நிச்சயம்.

வந்தே மாதரம்.

அறிவானந்தர்.

---

"பாரதி"யின்
வெளி நாடு வருட சந்தா ரூ. 3/-
அல்லது 5 ஷிலிங்
என்பதை கவனத்தி லிருத்திக்கொள்ள
வேண்டுகின்றோம்.

# ‘ரான்ஜன்’ அல்லது ‘எக்ஸ்’ வெளிச்சக் கதிர்.

## (*Rontgen or X-rays*)

(பதார்த்தங்களினுட் புறத்தை யுணர்த்தும் வெளிச்சம்)

திரு· K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)

முற்காலத்தில் (17-ம் நூற்றூண்டில்) ஓர் பிரகாசம் பொருந்திய வஸ்துவிலிருந்து சிறிய அணுக்கள் புறப்பட்டு மனிதர்களின் கண்களில் விழுந்து வெளிச்சத்தின் உணர்ச்சியை உண்டுபண்ணுகின்றன வென்று சர் ஐசக் நியூட்டன்* முதற்கொண்டு நம்பி வந்தனர். ஆனால் தற்காலத்திலோ பிரகாசிக்கும் வஸ்து அதி விரைவான அசைவை யுடையதாய் வெட்டவெளியில் வெளிச்ச அலைகளை யுண்டாக்கி நாலா பக்கமும் அனுப்புகிறதென்றும், இவ்வலைகள் கண்களை யடைந்த மாத்திரத்தில் வெளிச்ச உணர்ச்சி ஏற்படுகிறதென்றும் நம்பப்படுகிறது. இவ்வாறே சப்தமும், ஆகாயத் தந்திகளும் பலவித அலைகளைக் கொண்டு ஓடுகின்றன.

வெளிச்சங்கள் பலவகைப்பட்டன. கண்ணுக்குப் புலனாகும் வெளிச்சங்களென்றும், கண்ணுக்குப் புலனாகா வெளிச்சங்களென்றும் இரு வகையுளது. இவ் விரண்டிலும் அனேக பிரிவுகளுண்டு. கண்ணுக்குப் புலனாகும் வெளிச்சங்களின் (சிவப்பு, ஆரஞ்சி, மஞ்சள், பச்சை முதலிய நிறங்களையுடையவையின்) அலைகளின் நீளம் (Wave length), கண்ணுக்குப் புலப்படா வெளிச்சங்களின் அலைகளின் நீளத்தைவிட மிக மிகக் குறைவானது. இதனாலேயே கண்ணுக்குத் தோன்றா வெளிச்சம் அதி வேகமாகச் செல்லுகிறது. கண்ணுக்குப் புலனாகா வெளிச்சங்களில் அதிகச் சிறப்புடைத்ததும், உலகத்தின் வியப்பைப் பெற்றதுமான “ரான்ஜன்” அல்லது “எக்ஸ்” வெளிச்சக்கதிர், பிரகிருதி சாஸ்திர விரைவான முற்போக்குக்கும், இரண வைத்திய முறைக்கு அவயவங்களின் உட்புறங்களைக் கண்ணாடிபோல் காட்டுவதற்கும், குறைவுபாடமைந்து செய்

* K. G. கிருஷ்ணன்—“பாரதி” டிசம்பர் 1929, பக்கம் 863 பார்க்க.



யப்பட்ட சாமான்களைக் காட்டிக் கொடுப்பதற்கும், இன்னும் பல அரிய செயல்களுக்கும், இன்றியமையாததா யிருக்கிறது. அதின் உற்பத்தியையும், உபயோகங்களையும் பற்றி இவண் சுருக்கமாக ஆராய்வோம்.

### “ரான்ஜன்” வெளிச்சம் கண்டுபிடித்தலுக்கான வளர்ச்சி

நீண்ட கண்ணாடிக் குழலின் இரு புறத்திலும் இரண்டு உலோகக் கம்பிகளை ஒன்றுக்கொன்று நேர்முகமா யமைத்து, மின்சாரத்தை ஒரு கம்பி வழியாக உள்ளிருக்கும் காற்றினுள் ஊடுருவிச் சென்று மறு கம்பியின் வழியாக வெளி வரும்படி செலுத்தி, குழலினுள்ள காற்றைக் கொஞ்சங் கொஞ்சமாக ஓர் சிறு துவாரத்தின் வழியாக வெளிப்படுத்திக் கொண்டே யிருந்தால் அழகான தோற்றங்கள் பல காணப்படும். காற்றை வெளிப்படுத்தாமல் மின்சாரத்தை மாத்திரம் உட் செலுத்தினால், காற்று மின்சாரத்திற்கு வெகு சுலபமாய் வழி விடாததால், மின்சாரம் ஒருபுறத்திலிருந்து மறுபுறம் பாய்ந்தோடும்போது கண்ணுக்குப் புலப்படாது. ஆகவே அதிக சக்தி வாய்ந்த மின்சாரத்தை உட் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், கண்ணாடிக் கூட்டிலுள்ள காற்றைக் குறைத்தால் மின்சாரக் கதிர் ஓடுவது புலனாகும்.

முதலாவது மின்சாரக் கதிர் ஒருபுறக் கம்பியிலிருந்து மறுபுறம் ஓடும்போது சப்தம் உண்டாகிறது. ஆனால் காற்றைக் குறைக்க சப்தம் அடங்கி வெளிச்சக் கதிர் இப்பொழுது கண்ணாடிக் குழல் முழுவதையும் பாவி யோடுகிறது. வெளிச்சத்தின் நிறம் இளஞ் சிவப்பையுடையதா யிருக்கிறது. காற்றை இன்னும் குறைத்தால் மின்சாரம் வெளிவரும் கம்பிப் பாகம் மின்சார வெளிச்சக் கதிர் ஓர்வித நீல நிறத்தை யடைந்து அதினோரத்தில் வெளிச்சமில்லாப் பாகமுண்டாகிப் பிறகு வெளிச்சம் தொடர்ந்து நீளமாயிராது ஓர் நூலில் வெள்ளைப் பாசிகள் கோர்த்ததுபோல் பிரகாசமும், பிரகாசக் குறைவும் இப்படியாக மின்சாரம் உட்புகும் கம்பிவரை செல்லுகிறது. இப்பொழுது கண்ணாடிக் கூட்டின் காற்றை அதிகமாய்க் குறைத்தால் (about 1 m. m· pressure) முன் கூறிய நீல நிறம் பிரகாசமாகி குழலின் பக்கங்கள் ஓர் விதப் பச்சை நிறத்தால் பிரகாசிக்கத் தொடங்குகிறது. பிறகு இந் நிறம் மறைந்து போகிறது. காற்றை இன்னும் அதிகமாகக் குறைத்தால் (about $\frac{1}{50}$ m. m· pressure) குழலில் பிரகாசமே குன்றி, மின்சாரம் உட்செல்லும் கம்பியிலிருந்து வெளிச்சக் கதிர் புறப்படாமல் அப் பாகம் இருளடைந்து, மின்சாரம் வெளியேறும் கம்பியின் பாகத்திலிருந்து வெளிச்சம் புறப்பட்டு கண்ணாடிக்

கூட்டை வெகு பிரகாசமான பசுமை நிறத்துடன் வெளிச்சப்படுத்துகிறது. அதாவது கண்ணாடிக் கூட்டில் காற்று அதிகமாயிருந்தபோது மின்சாரம் உட்செல்லும் கம்பியிலிருந்து (anode) மறு கம்பிக்கு மின்சார வெளிச்சக் கதிர் பாய்ந்தோடுகிறது. ஆனால் கண்ணாடிக் கூட்டில் காற்று மிக மிகக் குறைந்துவிட்டால் ($\frac{1}{50}$ m. m. pressure) மின்சாரம் உட்புகும் கம்பியிலிருந்து வெளிச்சம் உண்டாகாமல், மின்சாரம் வெளியேறும் (Cathode) கம்பியிலிருந்து வெளிச்சக் கதிர்கள் உண்டாகி பல பக்கமும் ஓடுகிறது. கண்ணாடிக் குழல் இத் தன்மை யடைந்த பொழுதுதான் உலகத்தில் பல நன்மைகள் பயக்கும், “ரான்ஜன்” வெளிச்சம் உண்டாக்கப்படுகிறது. கண்ணாடிக்குள் காற்றே யில்லாவிட்டால் யாதொரு வெளிச்சமும் உண்டாகாது.

கண்ணாடிக் கூட்டில் மின்சாரம் வெளியேறும் கம்பியிலிருந்து உண்டாகும் வெளிச்சக் கதிரை “கேத்தோட்” கதிர் (Cathode rays)களென் றழைக்கப்படுகிறது. இக் கதிரின் தன்மையைப் பற்றி பல சாஸ்திர நிபுணர்கள் 1859-ம் ஆண்டிலேயே ஆராய்ச்சிகள் செய்தனர். இக் கதிர் நேர்முகமாக ஓடுகிறதென்றும், ஒரு காந்தக் கம்பியை அருகில்கொண்டு சென்றால் அக் கதிர் நேர் பாதையினின்றும் காந்த சக்தியால் வளைக்கப்படுகிற தென்றும், (இதனால் இக் கதிர் மின்சார அணுக்களடங்கிய தென்றும்), அதிக உஷ்ணமுடைய தென்றும், பலவிதக் குணங்களை யுடையதாகக் கண்டனர். இவ்விதமான “கேத்தோட்” வெளிச்சக் கதிர் யாதொரு கடின வஸ்துவின் மீது தாக்குண்டு அதனின்றும் சிதறியோடும் கண்ணுக்குப் புலப்படா வெளிச்சமே உலகப் பிரசித்தி பெற்றதும், பதார்த்தங்களை ஊடுருவிச் சென்று அவைகளின் உட்பாகங்களைக் கண்ணாடிபோல் காட்டும் வெளிச்சமுமாகிய, “ரான்ஜன்” வெளிச்சக் கதிரெனப்படும்.

## “ரான்ஜன்” அல்லது “எக்ஸ்” வெளிச்சம் கண்டுபிடித்த விதம்

1859-ம் ஆண்டிலிருந்து 1895-வரை முன் கூறிய “கேத்தோட்” வெளிச்சக் கதிரை மாத்திரம் உண்டாக்கி அதின் தன்மைகளை ஆராய்ந்துவந்தனர். 1895-ம் வருஷம் பவேரியா தேசத்தில் ஊர்ஜ்பர்க் என்ற நகரத்தில் வசித்த கான்ராட் ரான்ஜன் (Wilhelem Konrad Rontgen) என்ற சாஸ்திர நிபுணர் ஓர் தினம் “கேத்தோட்” வெளிச்சமுண்டாக்கும் கண்ணாடிக் குழலை கருப்புக் காகிதத்தால் வேறு வெளிச்சங்கள் வந்து சேராவண்ணம் நன்றாய்ச் சுற்றிக் கண்ணுக்குப் புலப்படாத வெளிச்சம் ஏதேனும் உண்டா



கிறதாவென்று கவனித்தார். அதே சமயத்தில் கண்ணுக்குப் புலப்படாத வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும் ஓர்வித உப்பு (Barium platinocynide) தடவப்பட்ட திரையொன்று அகஸ்மாத்தாய் சுமார் 10 அடிக்கப்பால் கிடந்தது. இத்திரை திடீரென்று வெளிச்சத்தால் ஜ்வலிக்கத் தொடங்கினதைக் கண்டு ‘ரான்ஜன்’ ஆச்சரியமுற்றுத் திரையைப் பிரகாசப்படுத்தும் *வெளிச்சம் எங்கிருந்து வந்ததென்று அவர் அறியமுடியவில்லை. ஏன்? பிரகாசப்படுத்தும் வெளிச்சம் அவர் கண்ணுக்குப் புலனாகவில்லை. ஆனால் திரைக்கு முன்னால் ஒரு கடின வஸ்துவை நிறுத்தினால் சாதாரண வெளிச்சத்தை மறைத்தால் எப்படி இருள் உண்டாகுமோ அப்படியே திரையிலும் இருள் உண்டாயிற்று. இப்படியே மறைத்து மறைத்துப் பார்த்துக் கடைசியாகக் கண்ணாடிக் குழாயினுள் உண்டாகும் வெளிச்சம் தாக்கும் கண்ணாடிப் பாகத்திலிருந்து ஏதோ கண்ணுக்குத் தெரியாத வெளிச்சக் கதிர்கள் புறப்படுவதாகக் கண்டார். கண்ணுக்குத் தோன்றாததால் அதை “எக்ஸ்” வெளிச்சக் கதிர் (X-Rays)-களென்று பெயரிட்டார். ஏனெனில் சாஸ்திரக் கணிதங்களில் தெரியாத ஓர் முடிவை முதலாவது “எக்ஸ்” (X) என்ற வெழுத்தால் குறிப்பிடுவது வழக்கம். இவ் வெளிச்சத்தை அப்பொழுது அவர் பெயரைக்கொண்டு “ரான்ஜன்” வெளிச்சக் கதிர்கள் என்றழைத்தனர். இப்போது அநேகமாய் “எக்ஸ்” வெளிச்சக் கதிர்களென்றே யழைக்கின்றனர்.

## தற்காலம் ‘எக்ஸ்’ வெளிச்சக் கதிர்களுண்டாக்கும் விதம்

நாம் முன் கூறியபடி ஓர் கண்ணாடிக் குழலி னிருபக்கங்களில் நேர்முகமாய் இரு உலோகக் கம்பி (அலுமினியத் தகடு)-களமைத்து மின்சாரத்தை ஒரு கம்பியின் வழியாக உட்செலுத்திக் குழலிலடங்கிய குறைவான காற்றினுட் சென்று மறு கம்பி வழியாக வரச் செய்தால் மின்சார வெளிச்சக் கதிர் மின்சாரம் உட்செல்லும் கம்பியிலிருந்து வெளிவரும் கம்பிக்குத் தாவியோடும். ஆனால் குழலிலுள்ள காற்றை அதிகமாய் நீக்கிவிட்டால் (about $\frac{1}{50}$ m. m. pressure of mercury) மின்சார வெளிச்சக் கதிர் மறுபுறமாக ஓட ஆரம்பிக்கிறது. இக்கதிர்களுக்கு “கேத்தோட்” கதிர்களென்று கூறினோம். இப்படிப்பட்ட “கேத்தோட்” வெளிச்சக்

*கண்ணுக்குப் புலனாகா வெளிச்சத்தின் அலையின் நீளம் வெகு வெகு சிறியதென்று கூறினோம். இவ் வெளிச்சம் மேற்கூறிய திரையில் பட்டவுடன் அத்திரையின். உப்புகள் அவ்வெளிச்சத்தின் அலையின் நீளத்தை (**Wave length**) அதிகப்படுத்திவிடுவதினால் கண்ணுக்குப் புலப்படாதிருந்த வெளிச்சம் இப்பொழுது புலப்படும் வெளிச்சமாக மாறிவிடுகிறது. இதுவே அத்திரையின் இரகசியம்.

14780

கதிரை யாதாவதொரு கடினமான உலோக வஸ்துவால் தடுத்தால் அதினின்று சிதறியுண்டாகும் வெளிச்சமே "எக்ஸ்', வெளிச்சக் கதிர்களென்றுங் கூறினோம். ஆதலால் தற்காலத்தில் கண்ணாடிக் குழலின் இரு கம்பிகளுக்கும் நடுவில் "கேத்தோட்" கதிர்களுக்கு நேர்முகமாய், மிகுந்த உஷ்ணத்திற்கு உருகாத*; 'டங்ஸ்டன்' (Tungston), 'பிலாட்டினம்' (Platinum) என்ற உலோகத் தகடுகளை 45° டிக்கிரி கோணலாக அமைத்து 'கேத்தோட்' கதிர்களைத் தடுத்து "எக்ஸ்" வெளிச்சக் கதிர்கள் உண்டாக்குகிறார்கள். இப்படிப்பட்ட கண்ணாடிக் கூட்டில் அநேக சமயா சமயக் கவனிப்புகளனேகம். அவைகளை இவண் கூறுதற்கிடமில்லை.

இப்படிச் சிதறும் வெளிச்சம் கண்ணாடிக்குள்ளிருக்கும் வரை ஓர்விதப் பசுமை நிறமாகத் தோன்றும். ஆனால் கண்ணாடிக்கு வெளியில் செல்லும்போது கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் இவ் வெளிச்சம் "பேரியம் பிலாட்டினோ சைனைட்" என்ற கலப்பு உப்பு தடவிய திரையில் விழுந்தால் அத் திரை பிரகாசிக்கத் தொடங்குகிறது. ஆகவே கை முதலிய அவயவங்களை இப்படிப்பட்ட திரைக்குப் பின்னும் 'எக்ஸ்' கதிர்கள் வரும் பாதைக்கு முன்னும் வைத்துத் திரையை நோக்கினால் கை யெலும்புகள் யாவும் தெளிவாகத் தெரியும். அதாவது 'எக்ஸ்' வெளிச்சம் கைச் சதைக்குள் சென்று எலும்புகளுக்குள் செல்ல முடியாததால் எலும்பு மாத்திரம் நன்கு புலனாகிறது. இப்படித் தெரியும் உட்புறங்களைப் புகைப்படமெடுத்து ஆராய்வது வழக்கம்.

## 'எக்ஸ்' வெளிச்சக் கதிர்களின் உபயோகங்கள்:

"எக்ஸ்" வெளிக்சச் கதிரைப் பலவித பதார்த்தங்களினுட் புகுத்தினால் ஒவ்வொன்றும் ஒவ்வோரளவு வரைதான் வெளிச்சத்தை உட்செல்ல விடுகிறது.

| பதார்த்தங்கள். | ஜலவாயு பதார்த்தங்களைவிட "எக்ஸ்" கதிர்களை உட்செல்லாது தடுக்குந் தடவைகள். |
|---|---|
| கரி பதார்த்தங்கள் | 1,296 |
| பிராண வாயு | 4,096 |
| உப்பு வாயு (Nitrogen) | 2,401 |
| 'கால்சியம்' (Calcium) | 1,60,000 |
| ஈயம் | 450 லட்சம் |

* "கேத்தோட்" வெளிச்சம் மிகவும் உஷ்ணமுடையதால் சாதாரண உலோகங்களை உருக்கிவிடும்.



மனிதனின் தேகம் முக்கியமாய் கரியமல வாயு, பிராண வாயு, உப்பு வாயு, ஜலவாயு முதலிய பதார்த்தங்களால் அமையப்பெற்றது. ஆனால் எலும்புகள் முக்கியமாய் 'கால்சியம்' இனத்தைச் சேர்ந்தது. ஆகவே 'எக்ஸ்' வெளிச்சக் கதிர் தேகத்தின் மற்ற சதைப் பக்கங்களுக்குள் இலேசாய்ச் சென்றுவிடுகிறது. ஆனால் எலும்புகள் ஜல வாயுவைவிட 1,60,000 தடவை அதிகமாய் 'எக்ஸ்' கதிர்களைத் தடுக்குஞ் சக்தியுடையதால் அவைகள் வெளிச்சத்தை இலேசாய் உட்செல்ல விடுவதில்லை.

'எக்ஸ்' வெளிச்சம் வைத்திய முறைக்கு இன்றியமையாததாயிருக்கிறது. தேகத்தின் உட்புறத்தில் இவ் வெளிச்சத்தைச் செலுத்தி கண்ணாடியைப் போல அப் பாகத்தின் குறைவுகளைப் பரிசோதிக்கலாம். குறைவு ஏற்பட்ட உட்புறத்தைக் கவனித்து அதின் சரியான நிலைமை யறிந்து முறைகளைக் கையாட வேண்டும். அறுக்கவேண்டிய தவசியமானால் அப் பாகத்தை வெகு சுலபமாயறுத்து சித்தி பெறலாம். கால்கை எலும்புகள் முறிந்து விட்டால் 'எக்ஸ்' வெளிச்சத்தை அப் பாகத்தில் செலுத்தி கண்ணாடி போலத் தோணும் முறிந்த விதத்தையும், அவ் வெலும்பின் இயற்கை யமைப்பையும் தெரிந்து சரியானபடி சிகிச்சை செய்து குணப்படுத்தலாம். கடந்த மகா யுத்தத்தில் துப்பாக்கிப் பிரயோகங்களால் குண்டுகள் மனிதர்களின் அவயவங்களினுட் சென்று தங்கி சகிக்கவொண்ணாத் துன்பங்களைத் தந்தன. குண்டுகளிருக்கும் சரியான ஸ்தானங்கள் தெரியாமல் அவயவங்களைப் பலவாறு அறுத்து வீணாக அதிகத் துன்பமுண்டாக்கியும் குண்டுகளைக் கண்டு வெளியேற்ற முடியாமல் நோயாளியை இறக்கவைப்பதுமுண்டு. ஆனால் 'எக்ஸ்' வெளிச்சத்தைக்கொண்டு குண்டு தங்கியிருக்கும் தன்மையையும், ஸ்தானத்தையும் செவ்வனே யறிந்து அந்த ஸ்தானத்தில் மாத்திரம் அறுத்துக் குண்டுகளை வெளியேற்றினர். இவ் வெளிச்சம் மகா யுத்தத்தில் அளவற்ற உதவி செய்து வந்ததை ஒருவரும் மறுக்க முடியாது. ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் 'எக்ஸ்' வெளிச்சக் குழலுண்டு.

'எக்ஸ்' வெளிச்சக் கதிர்கள் அநேக உலோகங்களினுள்ளும் செல்லுகின்றன. உலோகங்களின் தன்மைக்குத் தகுந்தவாறு உட்செல்லும் தூரம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ஈயத்தில் | ... | 0.2 | அங்குல தூரம் |
| டின் | ... | 2 | ,, |
| உருக்கு அல்லது இரும்பு | | 3 | ,, |
| அலுமினியம் | ... | 6 | ,, |
| மரக் கட்டை | ... | 16 | ,, |

இவ் வெளிச்சக் கதிர்களைக் கொண்டு, செய்து முடித்த சாமான்கள் உட்புறத்தில் சரியாக இணைக்கப்பட்டோ அல்லது யாதொரு குறைவுகளோ இருக்கிறதா வென்று, பிரித்துக் கெடுத்துவிடாமல் பார்வை செய்து வாங்கப்படுகின்றன. இப்படியே ஆகாய விமானங்களுக்குச் சேர்க்கும் பலகைகள் உட்புறங்களில் வெடிப்புகளிரா வண்ணம் 'எக்ஸ்' வெளிச்சத்தைக் கொண்டு பார்வையிட்ட பிறகு விமானங்கள் செய்கிறார்கள். குண்டுகளையும், மற்ற சண்டை ஆயுதங்களையும் பிளந்து பார்க்காமல் அவைகள் சரியாக அமைந்திருக்கின்றனவா வென்றறிந்து கொள்ளுகின்றனர். இப்படியே தாவர வர்க்கங்களின் வெகு அற்ப உட்புற அமைப்புகளைப் பார்வையிடலாம். சிலர் திருட்டுத்தனமாய் வேறொருவர் செய்த பழைய காலத்து வர்ணப் படங்கள் அழகா இருந்தால் அதில் சிற்சில பாகங்களை மாத்திரம் மாற்றி முழுவதிலும் புதிய வர்ணங் கொடுத்து தாங்கள் செய்ததாகக் கூறி விற்கின்றனர். அப்படிப்பட்ட திருட்டுப் படங்களை "எக்ஸ்" வெளிச்சத்தில் வைத்துப் பார்த்தால் பழைய வர்ணங்களைவிட புதிய வர்ணங்களில் வெளிச்சம் சுலபமாய் உட்செல்லுவதால் பழைய படத்தின் உண்மை யமைப்பைக் காட்டிவிடுகிறது. இப்படி ஐரோப்பாவில்அநேக திருடர்கள் அகப்பட்டிருக்கின்றனர்.

சாஸ்திர ஆராய்ச்சிக்குப் பெரும் உதவியாயுமிருக்கிறது. பெரிய உப்பு ஸ்படிகங்களின் (Crystals) அணுக்களின் உட்புற அமைப்புகளைச் செய்வனே ஆராய "எக்ஸ்" வெளிச்சம் இன்றியமையாததா யிருக்கிறது. இப்படியே சாஸ்திர ஆராய்ச்சிக்குப் புதிய மார்க்கங்களைக் காட்டிப் புதிய ஆச்சரியப்படத்தக்க உண்மைகளை ஸ்தாபித்தும் இன்னும் அநேகம் கண்டுபிடிக்க ஏதுவாயுமிருக்கிறதென்பதில் யாதொரு ஐயமில்லை.

---


**உங்கள் இரண்டு ரூபாய்கள்,**

**"பாரதி"யின்**

வளர்ச்சிக்குப் பேருதவி செய்கின்றதென்பதை உணருங்கள்.


# "பாரதி"யின் குறுக்கெழுத்து பந்தனம்.

நிர். 1.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❀ | ❀ | 1 | 2 | 3 | ❀ | ❀ | ❀ | 4 | 5 | 6 | ❀ | ❀ |
| ❀ | 7 | | | | 8 | ❀ | 9 | | | | 10 | ❀ |
| 11 | | | | ❀ | 12 | 13 | | ❀ | 14 | | | 15 |
| 16 | | | ❀ | 17 | | | | 18 | ❀ | | | |
| | | ❀ | 19 | ❀ | 20 | | | ❀ | 21 | ❀ | 22 | |
| ❀ | | 23 | | 24 | | ❀ | 25 | 26 | | 27 | | ❀ |
| ❀ | ❀ | 28 | | | ❀ | ❀ | ❀ | 29 | | | ❀ | ❀ |
| ❀ | 30 | | | | 31 | ❀ | 32 | | | | 33 | ❀ |
| 34 | | ❀ | | ❀ | | 35 | | ❀ | | ❀ | 36 | 37 |
| 38 | | 39 | ❀ | 40 | | | | | ❀ | 41 | | |
| | | | 42 | ❀ | 43 | | | ❀ | 44 | | | |
| ❀ | 45 | | | 46 | | ❀ | | 47 | | | | ❀ |
| ❀ | ❀ | 48 | | | ❀ | ❀ | ❀ | 49 | | | ❀ | ❀ |

## இடமிருந்து வலம்.

1. அட்டயோகத் தொன்று, 4 விரதம், 7. இரும்பைப் பொன்னுக்குவோன், 9. ஓர் தமிழ்ப் பத்திரிகை, 11. இடியேறு, 12. விஜயன் புத்திரன், 14. அச்சம், 16. பெருகும், 17. வெறுப்பு, 20. தீமை, 22. புது மணம், 25. சரஸ்வதி, 28. பேய், 29. வளார், 34. இனிமை, 36. சுவை, 38. உரிமை, 40. பாண்டு மைந்தன், 41. ஒழிய, 43. சூரியன், 44. ஐங்கிலத்தொன்று, 45. அகந்தை, 4[illegible]. சின் வண்டு, 49. நுழையும்.

## மேலிருந்து கீழ்.

1. இனிய குணம், 2. மதி, 3. பகல், 4. குன்றல், 5. தட்டை, 6. புளிய மரம், 7. எலுமிச்சை, 8. ஓர் நட்சத்திர நாள், 10. விமலை, 11. நாணல், 13. அழகு, 15. கள்ளி, 18. மலடி, 19. தென்னிந்தியாவில் ஓர் பிரதான நகரம், 21. இலக்குமி, 23. மங்களம், 24. கள், 26. ஓரிருடி, 27. தணியாக் கோபம், 30. வங்கநாட்டு மாபெருந் தேசியத் தலைவர், 31. பழங்கதை, 32. விட்டுணு, 33. இரண்டு மாதிரி, 34. நன்மை, 35. பார்வதி, 37. தலை, 39. திரண்ட தன்மை, 41. அறம், 42. குடிசை, 44. சலதாரை, 46. சனி, 47. உடல்.

விடைகளை ஏற்றுக்கொள்ளும் கடாசி நாள்: ஆனிமீ 25உ (7-7-32)

இக்குறுக்கெழுத்து பந்தனத்திற்கு பிழையிலாது சரியான விடை யனுப்புவோருக்கு, "பாரதி"யின் 1930-ம் 1931-ம் ஆகிய இரண்டு வருடங்களின் நேர்த்தியான காலிகோ—சில்ட்—பைண்ட் வால்யூம் இரண்டு பரிசு கொடுக்கப்படும். அல்லது இரண்டு வருடங்களுக்குப் "பாரதி"யை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். இவ் விரண்டும். பிரியமில்லாவிடில் நமது பிரசுரங்களில் விரும்புவதையேனும் பெற்றுக்கொள்ளலாம்.

விடை யனுப்புவோர் கவனிக்க வேண்டிய விதிகள்:


1. இந்த பந்தனத்திலுள்ள கட்டங்களைப் போலவே ஓர் காகிதத்தில் வரைந்துகொண்டு, அதில் விடையைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
2. விடை அனுப்பும் ஒவ்வொருவரும் அதனோடு நாலணாத் தபால் ஸ்டாம்பு அனுப்புதல் வேண்டும். ஒருவரே பல விடைகள் அனுப்ப முயலலாம். ஆனால், விடைகள் ஒவ்வொன்றுக்கும் 4 அணா ஸ்டாம்பு அனுப்பிவைக்க வேண்டும்.
3. விடைகள் எமது காரியாலயத்திற்கு, வரும் ஆனிமீ 25உ (7—7—32)உக்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்.
4. வந்த விடைகளனைத்திலும் சரியானதாகத் தோன்றும் ஒன்றினையே பரிசுபெறத் தக்கதென மதித்து, அதை அனுப்பியவருக்குக் குறிப்பிட்டிருக்கும் பரிசுகளில் விரும்பியதை அனுப்பி வைக்கப்படும். சரியான விடைகள் ஒன்றுக்கு மேற்படுமாயின், விடை யனுப்பியவர்களின் பெயர்களைத் திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்து, அதினின்று கிடைக்கும் முதற் பெயர்தாரருக்கே பரிசு வழங்கப்படும். சரியான விடை யனுப்பிய மற்றவர்களுக்கு நமது சுதந்திரப் பிரசுரத்தின் பிரதியொன்றினை அனுப்பி வைக்கப்படும்.
5. விடையின் நேர்மையும், மற்ற விஷயங்களையும் பற்றி, பொறுப்பாசிரியர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இது சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளப்பட மாட்டாது.
6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி எனையோரும் கலந்துகொள்ளலாம். ஆனால் ஒன்று; பந்தனத்தில் கலந்துகொள்ள, இத்துடன் பந்தனக் கூப்பன் தனியாக அச்சிட்டுச் சேர்க்கப்பட் டிருக்கிறது. விடையுடன் அதனையும் பூர்த்தி செய்து 4 அணா ஸ்டாம்பு வைத்து அனுப்பினாலன்றி போட்டியில் கலந்துகொள்ளும் உரிமையாளராகார்.
7. விடைகள், பெயர், விலாசம் பரிசின் விருப்பம் முதலியன தெளிவாக எழுதப்படல் வேண்டும். விடைகளைப் பொறுப்பாசிரியர், "பாரதி," உத்தமபாளையம் என்ற விலாசத்திற்கே யனுப்பிவைக்க வேண்டும்.

குறிப்பு:— இப் பந்தனத்தை விடுக்க முயல்வோர் முதலில் வழியைத் தெரிந்துகொள்ள வேண்டும். பின்னர் தாமாகவே முயன்று வெற்றி பெறுவார்களாக. இதற்கு ராமநாதன் தமிழ்ப் பெயராகாதி மிகவும் உபகாரமாயிருக்கும்.

---

# திருவிதாங்கூரின் அபிவிருத்தி.

திரு. ஸி. எ. பெருமாள் அவர்கள்.



பொது விபரம்.

இந்தியாவின் தென் கோடியில் காம்பே வளைகுடாவிலிருந்து கன்னியாகுமரி முனைவரை நீண்டு ஒடுங்கி அரபிக்கடலை மேற்கு எல்லையாகவும் மேற்கு மலைத் தொடரை கிழக்கெல்லையாகவும் கொண்டு திருவிதாங்கூர் தனித்ததோர் அழகிய நாடாய் அமைந்து கிடக்கின்றது. இதன் விஸ்தீரணம் 7625 சதுரமைல்; இந் நாட்டின் ஜனத்தொகை 40,06,062 மக்கள். மனிதர் புகவொண்ணாத காடுகளையும் நீர்ப்பாங்குகளையும் புறக்கணித்துவிடின் இங்கு மக்கள் வதியும் பிரதேசங்கள் 5000 சதுர மைலேயாகும். இதன்படி சதுர மைல் ஒன்றுக்கு 801 பேர் வசித்து வருவதாகக் கணக்கிடலாம். உலகத்தில் ஜன நெருக்கம் மிகுந்துள்ளதெனக் கூறப்படும் பெல்ஜியம் நாட்டைவிட இங்கு மிகவும் அதிகமான பேர்கள் வசித்துவருகின்றார்கள். பெல்ஜியம் தேசத்தில் சதுர மைல் ஒன்றுக்கு 636 மக்களே வசித்துவருகின்றனர்.

## இயற்கை எழில்

கந்தருவ நாடு.

இந்நாட்டில் இயற்கை யன்னையின் அழகிய காட்சிகள் யாவும் மலிந்து கிடக்கின்றன. எங்கெங்கு பார்க்கினும் மலைத் தொடர்கள், மரச் சோலைகள்; எங்கும் நீர் நிலைகள், கான் வளங்கள்; எங்கணும் காடுகளும் மேடுகளும் வளங்கொழித்துக் காண்கின்ற காட்சி கண்டார் மனதைக் கவரும் பான்மையது. லார்ட் கர்ஸன் அவர்கள் இந் நாட்டை வந்து பார்த்ததும், "இந்தியாவின் எப்பாகத்திலும் இசையாத இயற்கைச் செல்வங்கள் யாவும் இனிதமையப் பெற்று செய் தொழில் வேலைகளுக்கெல்லாம் செம்மை சான்று ஓர் சித்திரச் செல்வம்போல் சிறந்து விளங்குகின்றது," என நாவாரப் புகழ்ந்தார். அவருக்குப் பின் வந்த லார்ட் கன்னிமாரா அவர்கள் இதனை, "கண் கொள்ளாக் காட்சி தரும் கந்தருவ நாடு," என வியந்தனர்.

*கானகக் காட்சி.*

உண்மையில் இந் நாட்டின் விஸ்தீரணத்தில் பெரும் பாகமும் அடர்ந்த கானகங்களாகவே விளங்குகின்றன. பச்சிளங் தளிர்கள் எங்கணும் படர்ந்து பச்சைப் பசேலென்றிருக்கும் அழகிய கானக் காட்சிகள் எவர் மனதையும் அள்ளி மகிழ்விக்கும். இந் நாட்டு மலைச் சாரலை யடுத்தும் பச்சைப் பசுந் தழைகள் ஆகாயத்தைப் பந்தரிட்டு மறைத்தது போல், ஜில்லென்று குளிர்ந்து விளங்கும் நன்னிழற் சோலைகளில் பூங்கொடி பின்னி ஓங்கி வளர்ந்து நிற்கும் நெடு மரங்கள் ஆயிரக்கால் தூண்கள் போன்று அப் பசுந்தழைப் பந்தரைத் தாங்கி நிற்பதையும் அம்மரத் தடிகளில் அழகிய பூஞ்செடிகள் புஷ்பித்து பல நிறம் இலகுறுவதையும் கண்டு களிக்கும் பாக்கியத்தை உடனேயே பெறுவான். நெடு மரக் கிளைகளில் கருங்குரங்குகள் தாவியோடும், மஞ்சளும் சிவப்பும் கலந்த மலையாளத்து அணில்கள் இணை பிரியாது ஓடி விளையாடும். ஆஹா! அதிகாலையில் காட்டுக் கோழிகள் கூவுதல், மரங்கொத்திகள் சப்தித்தல், சிள் வண்டுகள் ரீங்காரம் செய்தல் ஆகிய இன்னொலியின் கீதங்கள் என்னே, அற்புதம்! அற்புதம்!! ஆனதுபற்றியன்றோ கலையுணர்வூட்டும் கவிதா ரத்தினங்கள் காலைப்பொழுதில் காண்கின்ற இக் கானகங்களின் காட்சியை, "அருணோதயத்தின் ஆலயம்," எனச் சிறப்பித்துக் கூறினர். இத்தகைய அழகு மலிந்து விளங்கும் காட்டுப் பிரதேசங்கள் இந் நாட்டில் 18 நதிகள் பாய்ந்தோடுகின்ற 3544 சதுர மைல் கொண்டதாய் இலங்குகின்றது.

## அரசியல் நிர்வாகம்

*நிர்வாக அமைப்பு.*

தமிழ் நாட்டு மூவேந்தர்களி லொருவராகிய சேரன் வம்சத்தைச் சேர்ந்தவரெனக் கூறப்படும் திருவிதாங்கூரின் அரச பரம்பரையும் அவ்வரசர்களது ஆட்சி முறையும் சரித்திர வரலாறும் பூர்வீக கால முதற்கொண்டே பெருமை சான்றதாகும். அவ் வரலாறுகள் எவ்வித மிருப்பினும் தற்காலத் திருவிதாங்கூர் பிரிட்டீஷ் சர்வாதிகாரத்தின் கீழ் இந்து மன்னரால் ஆளப்பட்டு வருகின்றது. உடன்படிக்கையின்படி உள் நாட்டு விஷயங்களில் மன்னருக்குப் பூரண சுவாதீன மிருந்துவந்த போதிலும் திருவிதாங்கூரின் அரசியல் முறை பெரும்பான்மையும் பிரிட்டீஷ் இந்தியாவையே பின்பற்றி நடைபெற்று வருகிறது. அடிமை இந்தியாவைப் பின்பற்றும் ஒரு நாட்டில் காலதேச வர்த்தமானங்களுக்கேற்றதான பொதுநல அபிவிருத்தியும் சுதந்திர உணர்ச்சியும் எத்தகைய நிலையிலிருக்கு மென்பதை யூகித்து உணர்வது வாசகர்கள் கடனாகும். திருவிதாங்கூர் மன்னரே இந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கும் நீதி முறைகளுக்கும் நிர்வாகப் பொறுப்புக்கும் பூரண அதிகாரியாவார். மன்னரின் கீழ் மந்திரி யொருவர் மன்னராலேயே நியமனம் பெறுகின்றார். மந்திரிக்குத் துணையாக அரசாங்க காரியதரிசிகளிருந்து வருகின்றனர். இவர்களின் கீழ் பற்பல இலாகாக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.



*வரவும் செலவும்.*

இந் நாட்டின் அரசாங்க வருமானம் இரண்டரைக் கோடியேயாகும். இவை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வியாபார முறையிலும் வேலை முறையிலுமாக நான்கு விதத்தில் வசூலிக்கப் படுகின்றது. செலவினங்கள் பெரும் பான்மையும் பொதுமக்களின் நலன்களுக்கெனவே ஒதுக்கப்படுகின்றதெனச் சொல்லப்படுகிறது. இதன் உண்மையை அடியில் வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்துகொள்ளுதல் நலமாகும்.

### 1929-30 ஆகிய ஒரு வருடத்தில்

| வரவு | ரூபாய் | செலவு | ரூபாய் |
|---|---|---|---|
| கலால் | 61,21,000 | இஞ்சினீயரிங் | 44,20,000 |
| நில வரி | 39,69,000 | கல்வி | 42,21,000 |
| சுங்க வருமானம் | 34,96,000 | இந்து கோயில் | 27,86,000 |
| ஸ்டாம்பு | 27,27,000 | அரண்மனை | 13,67,000 |
| உப்பு | 18,76,000 | நீதி இலாகா | 12,04,000 |
| காட்டு இலாகா | 16 65,000 | உபகாரச் சம்பளம் | 11,78,000 |
| வட்டி | 10,26,000 | வைத்தியம் சுகாதாரம் | 10,99,000 |
| ரெஜிஸ்ட்ரேஷன் | 8,84,000 | இதர வகையில் | 47,00,000 |
| நில விற்றுமுதல் | 4,43,000 | | |
| இதர வகையில் | 29,59,000 | | |
| ஆக மொத்தம் | 2,51,66,000 | ஆக மொத்தம் | 2,09,75,000 |

இந்த விவரங்களிலிருந்து செலவுக்கு மிஞ்சிய தொகை காண்பது தெளிவாகும். மிஞ்சிய தொகையில் ஒரு பகுதி ரயில் பாதைக்கும், மின்சார விளக்குகளுக்கும் குளாய்த் தண்ணீருக்கும் நீண்ட கரை பாலத்திற்கும் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இவைகளின் பொருட்டுச் செலவானது 15,51,000 ரூபாய். உலகத்தில் ஒவ்வோர் தேசங்களும் பொருளாதார சாம்பிராஜ்யத்தையிட்டு பெரும் திட்டங்களை யுண்டுபண்ணி போதிய பணமில்லாதிருந்தும் அந்நிய நாடுகளில் கடன் வாங்கித் திட்டங்களை நிறைவேற்றுவதில் கங்கணம் கட்டி வருகின்ற இக் காலத்தில் வறுமை மிகுந்த திருவிதாங்கூர் பொது மக்களது பணத்தை மிச்சம் வைப்பது எவ்வித நேர்மையுடைத்தென்பதை நண்பர்கள் அறிவார்களாக.

**சட்டசபை.**

திருவிதாங்கூரில் நாற்பது வருடங்களுக்கு முன்னால், அதாவது 1888-ம் வருடத்தில் சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் அதில் 8 அங்கத்தினர்களே நியமனம் பெற்றிருந்தனர். அவர்களிலும் இருவர் மட்டுமே உத்தியோகப் பற்றற்றவர்கள். அப்பால் 1921-ம் வருடம் சீர்திருத்த முறைப்படி சட்டசபையில் 50 பேர்கள் அங்கம் பெறலானார்கள். இவர்களில் 28 பேர் தேர்தலும் 22 பேர் நியமனமும் பெற்றவர்கள். பிரிட்டிஷ் இந்தியாவைப் போலன்றி இங்கு அரசாங்க மந்திரியாகிய 'திவான்,' என்பவரே சட்டசபைக்குத் தலைவராயிருந்து வருகிறார். உப தலைவர் எனப்படுபவரும் அரசாங்க உபகாரச் சம்பளம் வாங்கும் ஒருவரே நியமிக்கப்படுகிறார். பொதுவாக தலைவரும் உப தலைவரும் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாதலாலும், அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரும் அரசாங்க சார்பிலேயே பதவி வகித்து வருவதாலும் சட்டசபையில் காலத்திற்கேற்ற சீர்திருத்தங்கள் தலைவரால் அங்கீகரிக்கப்படுவதும் நிறைவேறுவதும் துர்லபமாகவே யிருந்து வருகின்றன. சட்டசபைக்கு வரவு செலவு சம்பந்தமான பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதெனக் கூறப்படுவது உண்மையாயின் அந்த முறையில் பரம ஏழைகளின் சார்பாக வசூலிக்கப்பட்டு வரும் 16 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் உப்பு வரியையும், ஒரு பகுதி சிறு தொகையினரை ஊட்டி வளர்க்கும் தேவசம் செலவான 27 லட்சத்து 86 ஆயிரம் ரூபாயையும் ஒழிக்கவோ அல்லது குறைக்கவோ சிறிதளவாவது பிரயத்தனம் செய்வதற்கு சட்டசபை முன்வந்திருக்க வேண்டும். ஆனால் இதற்கு நேர்மாறாக இத் தொகைகள் ஆண்டாண்டு தோறும் அதிகப்பட்டு வருவது கவனிக்கத் தக்கனவாகும்.

**நகர சபைகள்.**

சுயாட்சி ஸ்தாபனங்கள் என்று பெருமையுடன் சொல்லப்படும் நகர சபைகள் இந் நாட்டில் ஏற்பட்டு அதிக காலம் ஆகவில்லை. என்றாலும் தற்போது நாடெங்கும் 19 நகர சபைகளிருந்து வருகின்றன. இவைகள் பரிபாலித்து வரும் நகரங்களின் மொத்த விஸ்தீரணம் $112\frac{3}{4}$ சதுர மைலும் ஜனத் தொகை 3,26,633 மக்களுமெனப் பெறும் நகர சபைகளில் அங்கத்தினர்களும் தலைவர்களும் பொதுவாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களேயாயினும் இவர்கள் செய்துவரும் ஒவ்வொரு சிறு செலவினங்களையும் சீர்திருத்தங்களையும் அரசாங்கம் அங்கீகரித்ததின் பிறகே நடைமுறையில் கொண்டுவரலாம். இந் நகர சபைகளிலும் திருவனந்தபுரத்து சபைத் தலைவர் அரசாங்க மூலமே நியமனம் பெறுகின்றார். இவைகளின் நிர்வாக முறைகள் சாதாரணமாக நன்கு மதிக்கப்பட்டு வருவதாயினும் திருவனந்தபுரத்தை விட்ட இதர நகரங்கள் போதிய வருமானமின்றி மிகவும் திகைக்கின்றன. எண்பதி



னாயிரம் மக்களைக்கொண்ட திருவனந்தபுரத்துப் பொது வேலைகளுக்கு அதாவது குழாய்த் தண்ணீர், மின்சார விளக்கு, டெலிபோன் அமைப்பு, ரோடுகளின் விஸ்தாரம் ஆகிய திட்டங்களுக்கு அரசாங்கம் 25 லட்சம் ரூபா செலவு செய்ய முன்வந்துள்ளது. ஆனால் இரண்டரை லட்சத்துக் கதிகமான மக்கள் வசித்து வரும் இதர நகரங்களுக்கு அரசாங்கம் யாதொரு உதவியும் செய்வதற் கிணங்காததால் இந் நகரங்களில் மலிந்து விளங்கும் வறுமை நோய், வேலை யில்லாத் திண்டாட்டம், சுகாதாரமின்மையால் வளர்ந்து வரும் தொத்து வியாதிகள் ஆகியவைகளை ஒழிப்பதற்கு இவைகள் போதுமான வருமானமின்றி பெரிதும் தவிக்கின்றன.

## பொருளாதார நிலைமை

**விளை பொருள்.**

திருவிதாங்கூர் நீர் வளமும் நில வளமும் சிறந்ததோர் நாடெனக் கூறினோம். ஆண்டு ஒன்றுக்கு இந் நாட்டில் 66 அங்குல கன அளவு மழை சென்ற 80 வருட காலமாகப் பெய்து வந்திருக்கின்றன. தென் திருவிதாங்கூரில் 40 முதல் 60 இஞ்சும், வட பாகத்தில் அதாவது பீர்மேடுப் பாகங்களில் 160 முதல் 280 இஞ்சு கன அளவு மழையும் பெய்கின்றதால் விளை பொருள்கள் சீதோஷ்ண நிலைக்கேற்றவாறு பற்பல விதங்களில் உற்பத்தியாகின்றன. நிலப்பான்மையும் விதவிதமான கனிவர்க்கங்களுக்கும் கந்தமூலங்களுக்கும் ஏற்றதா யிருப்பதுமன்றி பற்பல தானியமணிகளுக்கும் மற்றும் ஏனைய கிருஷிகளுக்கும் தகுந்ததாய்க் காண்கின்றது. மா, பலா, மாதளை, கொய்யா, கொடிமுந்திரி, ஆரஞ்சு, அத்தி, அன்னாசி முதலிய கனி வகைகளும் சேம்பு, சீனி, மரச் சீனி முதலிய கிழங்கு வகைகளும் நெல், சோளம், கம்பு, பயறு முதலிய தானியமணிகளும் தென்னை, கமுகு, வாழை முதலான கிருஷிகளும் இங்கு மிகச் செழிப்புடன் தழைத்தோங்குகின்றன. இதுமட்டுமன்றி மலைப் பாங்குகளில் உற்பத்தியாகும் வாசனைத் திரவியங்களான இஞ்சி, மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய் வகைகளும் காப்பி, தேயிலை, ரப்பர் முதலான மலைக் கிருஷிகளும் ஏராளமாய் உற்பத்தியாவதோடு 3544 சதுர மைல் காட்டுப் பிரதேசங்களில் 700 விதமான காட்டு மரங்களும் 180 மைல் நீளங்கொண்ட கடற்கரைகளில் எண்ணிறந்த மீன் வகைகளும் உண்டாகி இந் நாட்டைச் செழிக்க வைக்கின்றன.

நீரும் நிலமும் நேர்பட அமைந்திருந்தும் இந் நாட்டு விவசாயம் இன்னும் பண்டை நிலைமையிலேயே யிருந்து வருகின்றது. நிலங்களைப் பண்படுத்தும் நவீன முறைகளைக் கையாளாததால் நாளா-

**விவசாயம்.**

விருத்தியில் நிலங்களின் உரக்கால்கள் வளங் குறைந்து கொண்டே வருகின்றன. பூர்வீக முறைப்படியே விவசாயிகள் உழுது பயிரிட்டு வருகின்றார்கள். ஆதலால் நிலங்களின் விளைவும் குறைந்து விவசாயிகள் போதிய பலனின்றி எங்கணும் தவிக்கின்றனர். இத்துடன் அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் நெல் விலையின் குறைவால் உள் நாட்டு விளைவாதிகளுக்கு அகவிலை மிகவும் குறைந்து விவசாயிகள் வருடா வருடமும் நஷ்டமடைந்து வருகின்றனர். அரசாங்கம் உள் நாட்டு விவசாயத்தை சீர்திருத்துவதின் பொருட்டு மக்களுக்கு விவசாயக் கல்வியும் நாட்டின் நாலா பக்கங்களில் விவசாய ஆராய்ச்சிக் கழகங்களும் பரிசோதனைப் பண்ணைகளும் கூட்டுறவு அமைப்புகளும் பொருளுதவியும் இறக்குமதித் திட்டங்களும் ஒழுங்கான விதத்தில் அளித்து பாதுகாக்க முன்வருமாயின் இந் நாட்டு விவசாயிகளுக்கு யாதொரு விதமான குறைவும் ஏற்படுவதற்குக் காரணமிராது.

**கைத்தொழில்**

இங்கு பலவிதமான கைத்தொழில்கள் நடைபெறுவதற் கேற்றதான சாதனங்கள் மலிந்து கிடக்கின்றன. அவ்விதமிருந்தும் மக்கள் வேலை யில்லாது எங்கணும் திண்டாடுகின்றனர். இயற்கை வளத்தினால் ஏராளமாக உற்பத்தியாகும் மூலப் பொருள்களைக் கொண்ட ஒரு நாடு தனது பொருள்களை யெல்லாம் அப்படியே அன்னிய நாடுகளுக்கு அனுப்பி வைத்து தான் தொழிலின்றி வறுமையுற்று வருமேயாயின் அந் நாட்டு மதியீனத்தால் நிகழ்ந்து வரும் பொருளாதாரச் சீர்குலைவுக்கு யார் உத்திரவாதமாகு மென்பதை யோசித்துப் பாருங்கள். போதுமான தொழிற்கல்வி யின்றியும் கூட்டுறவு இல்லாமையாலும் ஆராய்ச்சி யனுபவங்களுக் கேதுவான சாதனங்களும் மூலதனமும் இல்லாதிருந்தும் மக்களின் ஆசைப் பெருக்கால் அங்கங்கே சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளான காகித உற்பத்தி, நூல் நூற்றல், எண்ணெய் ஆட்டுதல், மாவரைத்தல், சீனி யெடுத்தல், நெருப்புக் குச்சி செய்தல், ஓடு உண்டாக்குதல் போன்றவைகள் தகுந்த வித அரசாங்க உதவியின்றி தத்தளித்தவாறே நடைபெற்றும் நடந்தவாறே அடைபட்டும் வருகின்றன. ஆனால் ஐரோப்பியர்கள் இங்கு பெரும் மூலதனங்களையிட்டு காப்பி, தேயிலை, ரப்பர் முதலியவைகளைக் கிருஷி செய்வதோடு, உலோகப் பொருள்கள் நிறைந்த இந் நாட்டு மண்ணையும் வாரி வாரித் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்து பெரும் பணம் திரட்டிக்கொண்டு வருகின்றார்கள். உள் நாட்டு மக்களோ வென்றால் ஆதரவின்றி, கூட்டுறவில் நம்பிக்கையின்றி, போதிய மூலதனமுமின்றி இருக்கிற தொழில்களையும் நாளடைவில் பாழ்படுத்தி வருடா வருடம் 'இன்ஸால்வெண்ட்,' ஆகிக்கொண்டே வருகிறார்கள்.



## கல்வி வளர்ச்சி

**கல்வி நிலை.**

திருவிதாங்கூர் கல்வியபிவிருத்தியிற் சிறந்ததோர் நாடென இந்தியாவெங்கும் கூறப்படுவது உண்மையே. இங்கு தாய் மொழிக் கல்வி, ஆங்கிலக் கல்வி, உயர்தரக் கல்லூரிக் கல்வி என்ற மூன்று விதங்களில் மக்களுக்குக் கல்வி யளிக்கப்பட்டு வருகிறது. தாய்மொழியில் ஆரம்பக் கல்வி யாவருக்கும் இலவசமாகவே அளிக்கப்படுகின்றது. பெண் பாலர்களுக்கு எல்லாவிதக் கல்விக்கும் பாதிக் கட்டணமே விதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கல்வியின் பொருட்டுச் செலவு செய்து வரும் தொகை தனது வருமானத்தில் 100-க்கு 17 பங்காகும். இந் நாடெங்கும் 3641 கலாசாலைகளில் 5,45,225 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். அதாவது இந்நாட்டில் இவ்விரண்டு சதுர மைலுக்கோர் கலாசாலை யிருந்துவருகின்றதெனக் கணக்கிடலாகும். 8 கல்லூரிகளும் 246 ஆங்கிலக் கலாசாலைகளும் 3332 தாய்மொழிப் பாடசாலைகளும் இதர கல்விச்சாலைகளு மிருந்துவருகின்றன. அரசாங்கம், மக்களுக்குக் கல்வியளிப்பதில் எடுத்துவந்துள்ள சிரமம் போற்றத்தக்கதாயினும் பொதுவாக நாட்டிடைப் பரந்துவரும் கல்விமுறை நாட்டுக்குப் பெரும் பயன் அளியாது மக்களை அடிமை வாழ்வுக்கு உட்படுத்திவிட்டதென்றே கூறலாம். ஆங்கிலக் கல்வி பயிலும் யாவரும் அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருத்தலால் படித்த வகுப்பார்களிடை வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமை நோயும் வளர்ந்து கொண்டே வருகின்றன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானவர்கள் வித்தியா பட்டம் பெற்று அப்பால் வேலை கிடைக்க மார்க்கமின்றி கைப்பொருளையு மிழந்து கடனும்பட்டு, நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டேயிருக்கின்றனர்.

**மொழி வளர்ச்சி**

தொழிற் கல்வியும் வியாபாரக் கல்வியும் போதிய அளவு அளியாது அரசாங்கம் அடிமை உத்தியோகக் கல்வியை ஊட்டுவதிலேயே கவனம் செலுத்திவந்ததால், இத்துணை கஷ்டங்கள் விளைய ஏதுவாயது. என்றாலும் பொதுவாக இந் நாட்டு அரச பாஷையாகிய மலையாள மொழி கற்றோர், பலரின் ஆதரவைப் பெற்று நாளொரு வண்ணமும் வளரும் விதம் மிகவும் பாராட்டற்குரியது. மலையாள மொழியில் ஆதி நூல்கள் ஒன்றும் அதிகம் கிடையாது. சமீபகாலத்திலேதான் அதன் வளர்ச்சியின் பொருட்டு பல கல்விமான்கள் முன் வந்தனர். கிறிஸ்து சமயப் போதகாசிரியர்களிற் சில பண்டிதர்களும் இம் மொழியை வளர்க்கத் தலைப்பட்டனர். தமிழ் மொழியை வளர்த்துதவிய 'டாக்டர்

போப்' (Dr. Pope), தெலுங்கு மொழியைக் கைதூக்கிவிட்ட 'பிலிப் ப்ரௌன்' (Philip Brown) ஆகிய பாதிரிகளைப்போன்று 'கால்ட்வெல்' (Caldwell) பாதிரியார் மலையாள மொழியில் பல நூல்களை வெளியிட்டுள்ளார். இம்மட்டுமன்றி அரசாங்க சார்பிலும் இம்மொழி வளர்ச்சியின் பொருட்டு பல உதவிகள் கிடைத்துள்ளன. இதன் பயனாக இப்பொழுது எண்ணிறந்த கலை நூல்கள் காவிய நூல்கள் வேதாந்த சித்தாந்தங்கள் தர்க்க நூல்கள் முதலியவைகளும், மாதவாச்சாரி, வாகபதச்சாரி, ஆட்டூர் நம்பி, திருப்பாயூர் நம்பூதிரி ஆகிய பிரபல வைத்திய பண்டிதர்களின் நிடனம், அஷ்டாங்க ஹிருதயம், ஸகஸர யோகம், ரோகநிடனம், யோகமித்திரம், வித்தியாமாலிகா ஆகிய சிறந்த வைத்திய நூல்களும், வாடச்சேரி நம்பூதிரி, தாழக்குழத்துப் பாட்டத்திரி ஆகிய வான சாஸ்திரிகளின் உயரிய தந்திர சங்கரஹம், ஜாதகபதாதி, பிரம்ம ஜாதகம், லீலாவதி, பிராஸன ரீதி போன்ற கணித நூல்களும், புலவர் பெருமான்களான குஞ்சன் நம்பியார், கேரள வர்ம வலிய கோயில் தம்பிரான் முதலியவர்களின் காவியங்களும், ராகவன் நம்பியார், குஞ்சிக்குட்டன் தம்பிரான், ராஜராஜ வர்மா, வள்ளத்தோல் நாராயண மேனன், கூடங்கல்லூர் கொச்சுண்ணித் தம்பிரான், திவான் பகதூர் கோவிந்த பிள்ளை முதலியவர்களின் நாடக நூல்களும், சாகித்திய குசலன் ராமன் பிள்ளை, வலியகோயில் தம்பிரான், சந்து மேனன் முதலியவர்களின் நாவல் நூல்களும், ராஜ ராஜ வர்ம ராஜாவின் விஞ்ஞான நூல்களும் நாட்டிடைத் தோன்றி மலையாள மொழியைச் சிறப்பிக்க ஆரம்பித்துவிட்டன. இதுமட்டுமன்றி இந்நாட்டில் 63 வர்த்தமானப் பத்திரிகைகளும் 95 மாத வெளியீடுகளும் வெளியாகிவருகின்றன. இவை யாவும் மலையாளம் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலேயே நடைபெறுகின்றன. ஆனால் இந்நாட்டில் நாலிலோர் பங்கு மக்களுக்குமேல் வசிக்கும் தமிழர்களுக்குமட்டும் ஓர் தனித் தமிழ்ப் பத்திரிகை முதற்கொண்டும் காணப்படுவதில்லை!

## பெண்கள் முன்னேற்றம்

பெண் கல்வி.

திருவிதாங்கூரில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தகும் அபிவிருத்தி பெண் மக்களின் வாழ்க்கையைப் பற்றியதாகும். பெண் கல்வியில் திருவிதாங்கூர் இந்தியாவில் முதன்மைபெற்றுப்பதை யாவரும் அறிவார்கள். இந் நாட்டில் பெண் மக்களுக்கு ஆங்கிலக் கல்வி யூட்டுவதற்கு முதற்காரணமாயிருந்தவர்கள் அந்நிய நாட்டு கிறிஸ்து சமயப் போதகாசிரியர்களே யாவார்கள். ஸ்ரீமதி 'மெட்' என்னும் ஓர் ஆங்கில மாதே நாகர்கோவிலில் 1819-ம் வருடம் முதன்முதலில் ஓர் ஆங்கிலப் பெண்பாடசாலையை நிறுவினார்கள். இத்துறையில் அரசாங்கம் கவலை செலுத்த முன்வந்தது 1864-ம் ஆண்டிலேதான். என்றாலும் அதன் அபிவிருத்தி மிகவும் போற்றற்குரியது. தற்போது கலாசாலைகளில் பயின்றுவரும் மாணவிகளின் தொகை 215,190. அதாவது சென்ற வருடத்திலிருந்து 11,490 பேர்கள் அதிகப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. இவர்களில் கல்லூரி மாணவிகள் 236-ம் ஆங்கிலக் கலாசாலைகளில் 12,165-ம் ஆவார்கள். எஞ்சியவர்கள் தாய்மொழிக் கலாசாலைகளில் பயின்றுவருகின்றவர்கள்.



சமவுரிமை.

சமுதாய விஷயங்களிலும் குடும்ப வாழ்விலும் திருவிதாங்கூர் பெண் மக்கள் பூரண உரிமையை அடைந்துள்ளனர். நாட்டின் பெரும் பகுதி மக்களாகிய நாயர் சமுதாயப் பெண் மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சமவுரிமை பெற்று தமக்கும் நாட்டுக்கும் பெரும் பணி செய்து வருகின்றார்களெனக் குறிப்பிடலாம். அவர்களுக்கு குடும்ப சொத்தில் பூரண உரிமை வழங்கப்படுகிறது. விவாக விஷயங்களில் அவர்களுக்குப் பெரும் கட்டுப்பாடுகள் கிடையாது. விதவைக் கோலம் என்று சொல்லப்படும் பாழும் கொடு நரகம் இவர்கள்பால் காணப்படுவதில்லை. ஆடவர்களைப்போன்று இவர்கள் வாழ்வின் எல்லா நலன்களையும் குறைவற அனுபவித்து வருகின்றனர். அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வகித்தும் பொதுக் கூட்டங்களில் தலைமை வகித்துப் பிரசங்கங்கள் புரிந்தும் பொதுநல ஊழியங்களில் மும்முரமாக நின்று அரும்பணி யாற்றியும் வருவது மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

இளைய மகாராணி.

திருவிதாங்கூரின் பெண் மக்கள் உரிமையையிட்டு, திருவிதாங்கூர் இளைய மகாராணி சேது பார்வதி பாய் அவர்கள் கல்கத்தாவில் கூடிய அகில இந்திய பெண்கள் சமூக மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது: "கேரள நாடாகிய எனது தேசத்தில் குடும்ப வாழ்வில் தலைநாயகமாயிருப்பவர்களும் முக்கியமான எல்லா விஷயங்களிலும் சம உரிமையுடையவர்களும் பெண் மக்களேயாவார்கள். மலையாளப் பிரதேசமாகிய எங்கள் நாட்டில் பெரும்பான்மையான குடும்ப சொத்துக்களும் பெண்களின் பெயரிலேயே யிருந்து வருகின்றன. பெண்களே இவைகளுக்குத் தலைவிகளாயிருந்து அனுபவித்து வருகிறார்கள். அவைகளை வைத்து நடத்துகின்ற அருந் திறத்திலும் பரிபாலன விஷயங்களிலும் ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த எத்தனையோ பெருமாட்டிகளை எடுத்துக்காட்டாகக் கூறவேண்டுமாயினும் எங்கள் பாரம்பரையிலேயே வேண்டியவர்களைத் தெரிந்தெடுக்கலாம்." பொதுவாகத் திருவிதாங்கூரை வந்து பார்க்கும் அந்நிய நாட்டார்கள் திருவிதாங்கூரில் பெண் மக்கள் காற்றைப்போலே எங்கணும் சம சுதந்திரத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள் எனக் கூறிச் செல்வதும் உண்மைக்கு மாறானதன்று.

## சமயப் போக்கும் சாதித் திமிரும்

*சாதிக் கொடுமை.*

திருவிதாங்கூரில் இந்து மதத்தின் பேரால் நடைபெற்றுவரும் ஆபாசங்கள் மிகவும் அதிகம். இந்து மதம் இங்கு மூன்று வித வேலைகளைச் செய்துகொண்டு வந்திருக்கின்றது. முதலில் அது சாதிப் பகைமையை மிகப் பலமாக நிலைநாட்டியுள்ளது. இரண்டாவதாக அரசாங்க தோரணையில் ஆலயங்களை உரிமை வகித்து மக்களுக்கு சாம்பிராஜ்ய பதவிகளை மூடக் கொள்கைகளின் மூலம் அளித்து வருகின்றது. மூன்றுவது அது அரசாங்க ஆதரவில் அநீதத்தையும் அதிகாரத் திமிரையும் வளர்க்கக்கூடியதான சில தர்மங்களைக் காலப் போக்குகளுக்கும் நீதி நிர்வாக முறைகளுக்கும் ஒவ்வாத நிலைமையில் செய்துவருகின்றது. சாதியகங்காரமும் சாதிப் பகைமையும் இந்நாட்டைப்போல் இந்தியாவில் எங்கணும் காண இயலாது. மனித வகுப்புகளை மிருகங்களிலும் கேவலமாக வைத்து நடத்துவதில் திருவிதாங்கூர் ஒன்றே மிகவும் பிரதானமாய் விளங்குகின்றதெனக் கூறலாம். எழுபத்திரண்டு தனிப் பிரிவுகளைக் கொண்ட ஆயிரத்திற் கதிகமான கிளை வகுப்புகள் ஒருவருக்கொருவர் வெறுப்பும் பொறாமையும் குரோதமுங் கொண்டு தன்னலப் புலிகளாய் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் முற்போக்குக்கும் ஒற்றுமை யுணர்ச்சிக்கும் அரசாங்கம் இன்றுவரையும் ஒன்றுமே செய்திலது. பிராமண ஆதிக்கமும் நாயர் அதிகாரமும் நாட்டைப் பாழ்படுத்திவருகின்றன. வைதீகப் பித்தர்களினால் ஏழைகள் நாயினுங் கடைகெட்ட வாழ்வு நடாத்தி வருகின்றனர். அரசாங்கமும் மூதாதை வழக்கத்தில் முழு நம்பிக்கை கொண்டு 'மாமூல்ப்பிரகாரம்,' நடைபெறுவதிலேயே திருப்திகொண்டு வந்ததினால் வைதீக சித்தாந்தத்தில் பெரும் பற்றுளங்கொண்ட திருவிதாங்கூர் இந்து மன்னர் நாளடைவில் தமது இந்து பிரஜைகளில் மூன்றிலோர் பகுதியைப் புறமதம் புகுத்தி தமது இந்து சமயத்திற்கே ஓர் பெரும் இழிவைச் சம்பாதித்துக்கொண்டார். என் செய்வது? சாதிக் கொடுமையால் விளைந்த பலன் இதுவேயாகும்.

*சமய வழிபாடு.*

அரசாங்க நிர்வாகத்தில் இந்நாட்டிடை யிருந்துவரும் இந்து ஆலயங்கள் 1463. இவைகளில் பிரதானமானவைகள் 340. இவ்வாலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் யாவும் (பண்டார வகை) அரசாங்க நிலங்களாகவே கருதப்படுகின்றன. இவைகளின் வருட வருமானம் ஏகதேசம் 16 லட்ச ரூபாய் என மதிக்கப்படுகிறது. அதாவது நாட்டின் நிலவரியில் 100-க்கு 40 பங்கு எனச் சொல்லப்படுகிறது. ஆலயங்கள் சம்பந்தமான நிர்வாக உரிமைகள் யாவும் 'தேவசம் டிபார்ட்



மென்ட்,' என்று கூறப்படும் ஓர் தனி இலாகாவுக்கே அளிக்கப்பட்டு சட்ட சபை அவ்விஷயங்களில் குறுக்கிட முடியாவண்ணம் அரண்மனை நிர்வாக உத்தியோகஸ்தர்களின் பொறுப்பில் நடந்தேறிவருகிறது. என்றாலும் தேவசம் இலாகா அரசாங்கத்தின் பொது வருமானத்தினாலேயே நடைபெற்றுவருவது கவனிக்கத்தக்கது. 1930-ம் வருடம் தேவசம் இலாகாவுக்கென அளித்த மொத்தச் செலவு 27,86,000 ரூபாய். அதாவது நாட்டின் வருமானத்தில் 100-க்கு 13¼ பங்கெனப்படும். இவ்விதம் பொதுமக்கள் வருமானத்தை யெடுத்து நிர்வாகம் நடத்திவரும் இத்துறையில் தேசத்துப் பொது மக்களுக்கோ அல்லது இந்துக்கள் என்று சொல்லப்படுகின்றவர்களுக்கோ யாதொருவிதமான உரிமையும் கிடையாது. நாட்டிலுள்ள இந்துக்களில் பெரும்பான்மையோருக்கு ஆலயப் பிரவேசன உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் ஒரு சிறு கூட்டத்தார்களுக்கே கோயில் செலவு யாவும் பயனளித்து வருகிறது. முன்னிருந்த நிலைமையிலிருந்து இத்துறையில் இன்றளவும் யாதொருவிதமான மாற்றமும் சம்பவிக்கவில்லை.

*ராஜீய தர்மம்.*

ஆண்டுதோறும் அரசாங்க சார்பில் இந்நாட்டில் நடைபெற்றுவரும் தர்மங்களுக்குப் பெருவாரியான தொகை செலவாகிவருகிறது. சென்ற ஆண்டில் இதற்கெனச் செலவாகியது 3,38,550 ரூபாவாகும். இச்செலவைப்பற்றி ஆராய்வது மிகவும் நலமாகும். இத் தொகை யாவும் தனிப் பிராமணர்களுக் கென்றே செலவு செய்யப்படுகிறது. "அக்கிரசாலைச் செலவு," என்று சொல்லப்படும் திருவனந்தபுரத்தில் தினமும் இரண்டுவேளை பிராமணர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் உணவின் பொருட்டாக 1,78,799 ரூபாயும் நாட்டின் இதர பாகங்களில் பிராமணர்கள் சாப்பாட்டிற்காக 53,493 ரூபாயும் பிராமண தட்சணைகளுக்கு 98,921 ரூபாயும் திருவிதாங்கூர் நாட்டை விட்ட வெளியிடங்களில் 5,531 ரூபாயுமாகும். நெற்றி நீர் நிலத்தில் விழ இரவும் பகலும் படாத பாடு பட்டும் பாழும் வயிற்றுக்கில்லாது பட்டினி கிடந்தும் அரசிறை தவறாது செலுத்திவருகின்ற தரித்திர நாராயணன்களான ஏழை மக்களின் பொதுப்பணம், மக்களை மாக்களென்று கருதுவதற்குக் காரணமாயிருந்து வரும் பிராமணர்களை மட்டுமே ஊட்டி வளர்க்கின்றது. இத்துடன் அரசாங்க சார்பில் ஏழைகளின் இரத்தம் தோய்ந்த பணத்தில் கட்டி முடிக்கப்பெற்ற சத்திரங்களில் எல்லா மக்களுக்கும் உரிமையில்லை; கிணறுகளில் உரிமையில்லை; குளங்களில் உரிமையில்லை; ரோடுகளிலும் உரிமையில்லை. தேவசம் இலாகாவின் ஆதீனத்தில் சமய வழிபாடின் பெயரால் நடைபெற்றுவரும் இவ்வனீதங்களைக் கேட்பதற்குச் சட்டசபைக்கும் யாதொரு உரிமையும் அளிக்கப்படவில்லை.

## பொது அபிவிருத்தி

இவ்வாறாக நாட்டின் ஒப்பற்ற நீர் நில வளங்களுக்குத் தக்கவாறு காலதேச வர்த்தமானங்களுக்கிசைந்த அளவில், மக்களின் பொதுவான வாழ்க்கைத் துறைகளில் குறிப்பிடத் தகுந்ததான அபிவிருத்தி யொன்றும் அரசாங்க சார்பில் இன்னும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இயற்கை வளம் சீர் சிறந்திருந்தும், பாரம்பரையான இந்து அரசாங்கம் தேசத்தைப் பரிபாலித்து வந்தும், கல்வி கேள்விகளிற் சிறந்த பல பேதாவிகள் நாட்டிடை மலிந்து விளங்கியும் நாட்டு மக்களின் பொதுவான வறுமை குன்றினதாகத் தெரியவில்லை. பிணியுற்று வருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் ரோடுகளோரங்களில் கிடந்து அல்லலுறுவதைத் தினமும் காண்கின்றோம். வயிற்றுக்கில்லாத பல்லாயிரம் பிச்சைக்காரர்கள் தெருத் தெருவா யலைந்து திரிவதைப் பார்த்துப் புண்படுகின்றோம். குடியிருக்க இடமில்லாத எத்தனையோ அனாதைகள் கடைகளிலும் கம்பளங்களிலும் கிடந்துறங்குவதைக் கண்ணுறுகின்றோம். சுருங்கக் கூறின், மக்களின் வறுமை தீரவில்லை; வாணிபம் செழிக்கவில்லை; விவசாயம் ஓங்கவில்லை; கைத்தொழில் சிறக்கவில்லை; உண்மைக் கல்வி பரவவில்லை; உரிமை வேட்கை வளரவில்லை; உத்தம நெறிகளான சமத்துவ உணர்ச்சி, சகோதர பான்மை, ஏழைகள்பால் இரக்கம் ஆகியவை பொது மக்கள்பால் இன்னும் போதியவாறு பரிணமிக்கவில்லை.

பொது நலம்.

என்றாலும் ஒப்பற்ற திறம்பட அரசு நடாத்திய சேது லக்ஷ்மி பாய் மகாராணி ரீஜண்ட் அவர்கள் தமது ஏழு வருட அரசாட்சியில் பெண்ணுலகம் புகழத்தக்கதான பெரும் சீர்திருத்தங்களை மகாராணி ரீஜண்ட் தங்களை நாட்டில் உண்டுபண்ணியது மிகவும் வியக்கற்பாலது. அவர்களது அரும் பணியையிட்டு மிகவும் சுருக்கமாக ஆசிரியர் ராமானந்த சாட்டர்ஜி அவர்கள் தமது 1929-ம் வருட மே மாத 'மார்டன் ரெவ்யூ'வில் விளக்கியிருப்பது காணத்தக்கது: "திருவிதாங்கூர் மகாராணி ரீஜண்ட் சேது லக்ஷ்மி பாய் அவர்கள் ஒப்பற்ற ஓர் மாது சிரோமணியாவார். 1924-ம் வருடம் தனது 28-வது வயதுப் பிராயத்தில் திருவிதாங்கூரின் அரசியலை மிக நெருக்கடியான சமயத்தில் ஒப்புக்கொண்டனர். அவர்களது பெருந்தன்மை, பரிசுத்த நிறைவு, பரோபகார லட்சியம் ஆகிய உயர் குணங்களின் பலனைத் தமது குடிமக்களின் நேசபாவத்தை மிக இலகுவில் சம்பாதித்துக்கொண்டார்கள். அவர்களது அரசியலின் பிரதானமான சில சீர்திருத்தங்களை இங்கு குறிப்பிடுவது திருவிதாங்கூரைவிட்ட வெளிநாட்டு வாசிகளுக்குப் பெரும் பலனளிக்குமென்று நம்புகிறோம். அவர்கள் தமது மகுடாபிஷேகத்தின்போது சாதி சமய



வேற்றுமைகளைப் புறக்கணித்து யாவர்க்கும் அரச கொலுவில் பிரவேசனம் அளித்தார்கள். திருவிதாங்கூர் சரித்திரத்திலேயே நடந்திராவாறு ராணியார் அவர்கள்தான் முதன் முதலில் இந்துவல்லாத ஒருவருக்கு மந்திரி (திவான்) பதவியை யளிக்க இசைந்தனர். அரசாங்கக் கோயில்களில் நடைபெற்றுவந்த மிருக பலியை அடியோடு நிறுத்தி அரசாங்கப் பாதுகாப்புகள் ஏற்படுத்தினர். வைக்கம் சத்தியாக்கிரக இயக்கத்தின்போது மகாராணி எவ்வளவு தந்திரமாகவும் திறமையாகவும் நடந்து இயக்கத்தைச் சலனப்படுத்தி வைத்தார்களென்பது இந்தியாவெங்கும் நன்கறியும். விவசாய நீர் பாசன வசதி, திருவனந்தபுரத்தில் குழாய்த் தண்ணீர், இருப்புப் பாதைப் பெருக்கம், மின்சார விளக்கிடுதல் ஆகிய பல துறைகளிலும் அரசாங்கம் தகுந்த நிபுணர்களை வைத்து வேலை செய்யுமாறு ஏவினர். அரண்மனைக்குச் சொந்தமான நிலங்களுக்குச் செலுத்தவேண்டும் நெல் முறையை நீக்கிப் பணமுறையை யளித்ததும் ஓர் முக்கியமான சீர்திருத்தமாகும்." இத்துடன் மகாராணி ரீஜண்ட் ஆலயங்களில் பணிசெய்துவந்த தேவதாசிகளை ஒழிக்க முன்வந்து சட்டமியற்றியதும் போற்றற்குரியதோர் அருஞ் செய்கையாகு மென்பதையும் நாம் சேர்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வாறான சீர்திருத்தங்களுடன் மகாராணி ரீஜண்ட் அவர்களின் அரசியல் சில மாதங்களுக்கு முன் முடிவுற்றது. இப்பொழுது சித்திரைத் திருநாள் ராமவர்ம மகாராஜாவின் மகுடாபிஷேகம் இனிது நிறைவேறியுள்ளது. மன்னர் பதினெட்டு வயதுப் பிராயமே யாயினும் அவருக்கு அரசியல் கல்வியளித்த ஆங்கில ஆசிரியராகிய மிர். பி. ஸி. டட் அவர்களின் முயற்சியாலும் மைசூர் அரசாங்கத்தின் உதவியாலும் அரசியல் நிர்வாகத்தில் அருந் திறமை வாய்ந்துள்ளார் எனக் கருதப்படுகிறது. மக்களும் மன்னரிடம் பூர்ண நம்பிக்கை கொண்டு எதிர்காலத்தில் பெரும் சீர்திருத்தங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களில் நாமும் ஒருவரெனக் கூடி இக்கட்டுரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறோம்.

---

அன்பர்களே! "பாரதி"க்கு உங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற உதவிகள் யாவும் பொன்னே போல் போற்றத் தக்கவையாகும். எனினும், ரத்தினக் கற்களால் பொற்றகட்டில் பதிக்கும் தன்மையவான பேருதவிகளும் பெருமிதமும் தந்தருளுவது அவஸ்யமாகும். பிரிய நண்பர்களே! இவ்வாண்டில், நீங்கள் ஒவ்வொருவரும் சிற்சிலரையேனும் சந்தாதாரர்களாகச் சேர்த்துதவினால், 'பாரதி'க்கு உதவும் உங்கள் கடன் ஒருவாறு முற்றுப்பெற்றதாகு மென்போம்.

# பாரத நாட்டின் பண்டைக் கலைகள்.

(ஓர் ஆராய்ச்சி.)

I

திரு. O. P. தேசிகன் அவர்கள்.



“தனிப்பட்ட நபர்களைப்போலவே தேசீய சமுதாயங்களும் தாங்கள் மிகவும் உத்கிருஷ்டமானதோர் பரம்பரையின் வழித் தோன்றியவர்களென்றும், தமது முன்னோர்களின் மகத்தான பண்டைப் பெருமைக்குத் தாங்களும் உரிமை பாராட்டுவதற் குரியவர்களே யென்றும், அத்தகையோரின் அழியாத கீர்த்தியை இவ்வுலகில் எங்கணும் பரவச் செய்து, அதனை நீடூழி நிலைத்திருக்குமாறு செய்விப்பது தமது அருங் கடனென்றும், இதுபோன்ற உணர்ச்சியினின்றும் பெரிதும் ஆக்கமும், உரமும் பெறுவர். ஓர் நாட்டினர் தமது உள்ளத்திலே மகிழ்ச்சியுடன் சிந்தித்துப் பார்க்கக்கூடிய கீர்த்தியும், பண்டைப் பெருமையும் வாய்க்கப் பெற்றிருப்பது முற்றிலும் இன்றியமையாததாகும். பண்டை நாட்களில் வாழ்ந்துவந்த மக்கள் தம் அரிய, பெரிய வீர நிகழ்ச்சிகளையும். கஷ்ட நிஷ்டூரங்களைத் தாங்கி நிற்கும் ஆற்றலையும் தியாக உணர்ச்சியையும் தமது அரிய பராக்கிரமச் செயல்களின் பயனாகவடைந்த வெற்றிச் சிறப்பினையும் குறித்து மனதாற் சிந்திக்குந்தோறும்—அத்தகைய நினைவானது தற்காலத்திலுள்ளோரின் வாழ்க்கை நெறியை ஓர் ஒழுங்குக்குட்படுத்தி, அதனை ஏற்றமும், உயர்வும், பொருந்தியதாகச் செய்வித்து, பின்னும் உயர் நிலையையும், மேம்பாட்டையு மெய்துமாறு செய்ய வல்லதாயிருக்கிறது” என்று ஸாமுவேல் ஸ்மைல்ஸ் என்னும் மேனாட்டு அறிஞர் ஓரிடத்தில் கூறியுள்ளார். (Smiles Character P. 27.)

ஆதலின் பண்டைப் பெருமையால் சிறப்புற்ற நாமும் நமது மூதாதையர்களான ஹிந்துக்களின் தேசீய சரித்திர வரலாறுகளையும், மாண்பு மிக்க அம்மனிதர்களது அரும், பெருந் திறலையும், பண்டை யுலகில் நாகரீகத்திலும், இதர துறைகளிலும் சிறப்புற்றுத் துலங்கிய அவர்களது தேசீய, சமுதாய, நாகரீகப் பொருளாதார,



ராஜீயக் கலாபிவிருத்தியின் சரித்திரத்தையும், உலக வாழ்வில் முந்நாட்களில் ஆசியா கண்டத்திலுள்ள நாடுகளில் மட்டுமேயன்றி நெடுந்தூரத்திலுள்ள ஐரோப்பிய தேசங்களிலும் ஏனைய நிலப் பகுதிகளிலும் தமது நாகரீக ஜோதியைப் பரப்பி ஒளி வீசித் திகழ்ந்த நமது பூர்வீக மூதையர்களது அரிய உபதேசங்களையும், உயர் நலஞ் சார்ந்த உண்மை நெறிகளையும் குறித்து ஒருவாறு ஆராய்ந்து அறிவது மிகவும் விசேஷமும் முக்கியத் தன்மையும் வாய்ந்ததாகும் என்று நாம் கூறத் தேவையில்லை.

## பாரத நாட்டின் பண்டைப் பெருமை

பனிவரையே முடியாகப், பல நதியே அணியாகக், கருணையதே உடையாகக் கொண்ட நமது தாய்நாடு,—மக்கட் பரப்பிலே, ஐந்திலோர் பகுதியைத் தன்னுள் அடங்கப் பெற்றதும், ஐரோப்பா கண்டத்திலே விஸ்தீரணப் பெருக்கிலும், ஜனத் தொகையிலும் மிகப் பரந்ததான ருஷியா தேசத்தைப் போன்ற இரு மடங்கு ஜனத்தொகையால் சிறப்புற்ற பாரத நாடு—முப்பத்தாறு கோடி மக்களின் தாயகமாயிலங்கும் அன்னை பாரத தேவி, இதுபோழ்து தன் சிறப்பிழந்து, பொலிவு குன்றி, வாட்டமடைந்து, தனது முக மண்டலத்தில் விசனக் குறி தோன்ற வீற்றிருக்கிறாளாயினும், அவளது முப்பத்தியாறு கோடி மக்களில் மிகப் பெரும்பாலோர் பட்டினியாலும், பசியாலும் உடல் வாடி, நோய் வாய்ப்பட்டு, வலி குன்றி, ஆவி சோர்ந்து, பயங்கரமான வறுமையால் பீடிக்கப்பட்டு, நினைத்தற்கரிய அக்ஞான இருளும் சூழ்ந்து பரிதபிக்கத்தக்க நிலையிலிருக்கிறார்களாயினும், நமது நாடு தன்னிலை மாறி, அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்டு, மூடப் பழக்கங்களால் கட்டுண்டு, பெருமை குன்றியிருப்பினும், உலக நாகரீகத்தின் அருணோதய காலத்திலிருந்து, நெடுங்கால சரித்திர விசேஷத்தால் பழமையுற்ற நமது பாரத தேசம், நாகரீகச் சிறப்பிலும் உயர் கலைகளைப்பற்றிய அறிவிலும் மிகவும் உயர்ந்ததோர் ஸ்தானத்தை வகித்துவந்துள்ளது.

அன்னை பாரத தேவியானவள் ஸர்வாலங்கார பூஷிதையாய், திவ்ய மங்கள ஸ்வரூபியாய், தேஜோமயமாய்த் திகழ்ந்து, மந்தஹாஸமான வதனத்துடன், இனிய புன்னகை தவழ, பாரத நாட்டின் அரியாஸனத்தில் வீற்றிருந்து தனியரசு செலுத்தும் பாக்கியம் பெற்றிருந்த பண்டை நாட்களில், அவளுடைய மக்கள் ஆன்மீக அறிவிலும், பாரமார்த்திக ஆராய்ச்சியிலும் மட்டுமேயன்றி, உலக வாழ்க்கையின் இன்பத்தை நுகர்வதற்கேற்ற ஒவ்வொரு

துறையிலும் முன்னேற்ற மடைந்து, அவற்றை வாழ்க்கையினூடே அனுபவத்தில் பயனுறச் செலுத்துந் திறனுடையவர்களாய், தாய் நாட்டில் மட்டுமேயன்றி வெளி நாடுகளிலும்கூட ஞானச் சுடரொளியையும் பரப்பி மக்களுக்கு அறிவு விளக்கம் செய்து, பாரத நாட்டின் மேன்மையைக் குன்றின்மேலிட்ட தீபமெனப் பெருமையுறச் செய்தனர். துணிவும் ஆற்றலும் ஒருங்கே வாய்ந்த அவளது தீரப் புதல்வர்கள் கலங்களேறிக் கடல் கடந்து நாடு பல கண்டு, பாரத நாட்டின் அறிவுக் கலைகளையும், விளைபொருள் பண்டங்களையும், உற்பத்திச் சரக்குகளையும், நாகரீகச் சிறப்பினையும், உலகத்தின் ஓர் முனையிலிருந்து மற்றோர் முனைக்குத் தம்முடன் கொண்டு செல்லும் சாமர்த்தியம் வாய்ந்திருந்தனர்.

உலக வாழ்க்கையின் சுவையையும் இன்ப நலங்களையுமனுபவித்தற் கின்றியமையாத ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் வல்லவர்களாய், அவ்வித ஆராய்ச்சியினால் அதிசயிக்கத்தக்க முன்னேற்றத்தை நமது முன்னோர்கள் எய்தியிராவிடில், உலகத்தின் ஆசாரிய ஸ்தானத்தை யேற்க வல்லவர்களும், பண்டை யுலகிலே மிகவும் சிரேஷ்டர்களாகக் கீர்த்தியுடன் வீற்றிருக்கும் பெரியார்களும் நமது நாட்டில் எங்ஙனம் தோன்றியிருக்கக் கூடும்? “கலை ஞானம், படை, தொழில், வாணிபம்” ஆகிய ஒவ்வொரு கலை நுட்பத்தையும் ஹிந்துக்கள் நுணுக்கமாய் அறிந்திருப்பது மாத்திரமேயல்லாமல், அந்தத் தொழிலில் அனுபவ ஞானமும் வாய்ந்திருந்ததை யறிவிக்கும் சான்றுகள் கணக்கிலடங்கா.

உலக நாகரீகம் மேம்பாடடையவும், மனித வர்க்கம் முன்னேற்றத்தை யெய்தவும், பண்டை இந்தியா அளித்த நன்கொடைகளைப்பற்றிச் சிறிதே சிந்தித்துப் பாருங்கள்! ஏனெனில் பண்டை நாட்களில் நமது நாட்டிலேதான் பற்பல உயர்தரக் கலைகளும் பல்கிப் பெருகியிருந்தன. பாரத நாட்டிற்கு இணையற்ற கீர்த்தியைத் தேடிக் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்த பெரியார்கள் தோன்றியிருந்தனர்.

## ஹிந்து நாகரீகத்தின் உயர் நிலை

மருத்துவக் கலையின் மேன்மையிலும், ஔஷத முறைகளிலும், மனித அங்க விபாக சாஸ்திரப் பயிற்சியிலும், தன்வந்தரி, சரகர், சுச்ருதர், ஆத்ரேயர், ஜீவகர், ஆசாரிய வாக்படர்போன்ற வைத்திய சிரேஷ்டர்களையும், பாஷாந்தர வித்பத்தியிலும், இலக்கண நூற்புலமை, மொழி யமைப்பு இவற்றிலே தன்னிகரற்ற ஸூத்ரங்களையியற்றி எக்காலத்திலும் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லையெனப் பிரசித்திபெற்று விளங்கும் பாணினி முனிவரையும், இசைக் கலை



யிலும், பரத நாட்டிய நுட்பங்களிலும் பரத, வாத்ஸாயனர்களையொத்த உயர்தரக் கலை வல்லுனர்களையும், ரஸாயன சாஸ்திர ஆராய்ச்சியில் பதஞ்சலி, நாகார்ஜுன முனிவர்களையும், மிகப் பிரசித்திபெற்ற வராஹமிஹிரரையும், ஆரிய பட்டரையும் போன்ற வான சாஸ்திரிகளையும், அரசியற் துறையில்,—ராஜீய நூல்களின் இனத்திலே மிகவும் உயர்ந்தனவாகக் கருதப்படக்கூடிய அர்த்த சாஸ்திரம், சுக்கிர நீதிசாரம், யுக்தி கல்பதரு, கர்மந்தக நீதிசாரம் ஆகிய உயர் நூல்களை யியற்றி உலகப் பிரசித்தியடைந்த இணையற்ற ராஜதந்திர சிரேஷ்டர்களும், அனுபவ அரசியல் நிபுணர்களுமாகிய ஆசாரிய விஷ்ணு குப்தரென வழங்கும் மகா மேதாவியான சாணக்கியரைப் போன்றவர்களையும், தத்துவ விசாரணையிலும், பாரமார்த்திக அறிவின் உயர்விலும் கீர்த்தி வாய்ந்த வசிஷ்ட, வாமதேவ, ஜாபாலி, அத்ரி, ப்ருகு, குத்ஸ, கௌதம, காசியப, ஆங்கீரஸ, பாரத்வாஜாதி ரிஷிகளையும், மனித வாழ்க்கையை ஓர் ஒழுங்குக்குட்படுத்தி, அதற்கான அழகிய சட்ட திட்டங்களை வகுத்து, மக்களை மாக்கள் நிலைமையினின்றும் உயர்த்துவதற்குதவி புரிந்த மனு, யாக்ஞவல்க்ய, பாராசர, ஆபஸ்தம்பாதி தர்ம சாஸ்திரிகளையும், சூத்ரக்காரர்களையும், போர்த் திறனிலும், போர்க் கலைகளிலும் உலகமுள்ளளவும் நிலைத்து நிற்கும் மகத்தான கீர்த்தி வாய்ந்த பீஷ்ம, துரோண, அஸ்வத்தாம, கிருபாசார்ய, அர்ஜுனனைப்போன்ற தனுர் வேத ஆசார்யர்களையும், வில் வீரர்களையும், வால்மீகி, வியாஸர், கவி காளிதாசன், பவபூதி, பாரவி, தண்டி, பர்த்ருஹரி ஆகிய கவி ரத்தினங்களையும், மனு, மந்தாதா, சிபிச் சக்ரவர்த்தி பரீக்ஷித், ராஜரிஷி ஜனகர், மஹாபலி, ஸகரன் சக்ரவர்த்தி, சந்திரகுப்தன், அசோகன் முதலிய சக்ரவர்த்திகளையும், சதுரந்தர்களையும், ஸார்வபௌமர்களையும், புத்தர் பெருமான், மஹாவீர வர்த்தமானர் முதலிய சமயாசாரியர்களையும், வேதாந்த வைசேஷிக, சார்வாக, லோகாயத மதங்களையும், ஒப்புயர்வற்ற பகவத்கீதை யென்னும் நிஷ்காமிய கர்ம நூலையும் தோற்றுவித்த பண்டைப் பாரத நாடு, கலாபிவிருத்தியின் சரித்திரத்தில் எய்தியிருந்த மேன்மையைக்குறித்து எடுத்தெழுத முயற்சிப்பது கடல் நீரின் அளவைச் சிறிய உளக்கொன்றினால் அளந்தறிய முயற்சிப்பதற்கொப்பானதே யாகும்.

தத்துவ விசாரணையிலும், பாரமார்த்திக அறிவிலும் கிரேக்க தத்துவ ஞானிகளின் உயர்ந்த கோட்பாடுகளை யொத்ததான முடிவுகளைப் பறையறிவித்த தத்துவ சாஸ்திர ஆசிரியர்களையும், மத சிரேஷ்டர்களையும், முனிவர் பெருமான்களையும் நாம் எங்குக் காண முடியும்? எந்த அரிய சாஸ்திர நுட்பங்களுக்கும், நூல்களுக்கும் ப்ளேட்டோவும் (Plato), தேல்ஸும் (Thales), பைதாகோரஸும் (Pythagoras) பெரிதும் கடமைப்பட்டு, அதனுடைய முடிவுகளைத்

தழுவித் தமது சித்தாந்தங்களைப் போதித்து வந்தனரோ, அத்தகைய சாஸ்திரங்கள் தோன்றியது எவ்விடம்? இன்றளவும் ஐரோப்பாக் கண்டத்தாரின் வியப்புக்கும் புகழ்ச்சிக்கும் பாத்திரர்களாயிருக்கும் அத்தகைய அரிய மதியூகம் வாய்ந்த வானசாஸ்திரிகளையும், கண்ணைக் கவர்ந்து உள்ளத்தை யீர்த்துத் தமது அற்புதமான வேலைப்பாடுகளின் பயனாக நமது வியப்புக்கும் புகழுரைகளுக்குமுரியவர்களாம் அந்த அருமையான சிற்பிகளையும், நிர்மாணகர்களையும் நாம் வேறு எங்கு காணலாம்? உள்ளத்தைக் களிப்பிலிருந்து, கண்ணீர்ப் பெருக்குக்கு மாற்றுவிக்கவும், கண்ணீரிலிருந்து புன்னகைக்குமாக ஊசலாடச் செய்யவும், இராகங்களின் தன்மைக்கேற்ப மக்களின் மனோவுணர்ச்சியினைப் பலவாறு ஆட்டுவிக்க வல்ல காயக சிரேஷ்டர்களையும் (சங்கீத விற்பன்னர்களையும்) இந் நாட்டிலேயன்றி வேறு எங்கு காணலாகும்?" என்று ஒரு மேனாட்டு அறிஞர் நமது கலைகளின் மேன்மையை வியந்து பாராட்டியுள்ளார்.

மாக்ஸ் முல்லர் என்னும் ஜர்மனிய மேதாவியானவர், "மக்களின் மனோ தத்துவ ஆராய்ச்சியின் சரித்திரத்திலே, நம்மைப்பற்றியும், நமது ஆத்மீக வாழ்வைப்பற்றிய ஆராய்ச்சி யறிவிலும், இந்தியா உலகிலே மற்ற நாடுகளுக்குப் பிற்பட்டதானதோர் பதவியையெய்தியிருக்கவில்லை. உங்களது ஆராய்ச்சித் திறமையை மனித வர்க்கத்தின் முன்னேற்றத்தைக் குறித்த எந்தத் துறையை நோக்கிச் செலுத்துவீர்களாயினும், அது பாஷையாயினும், சமயமாயினும், புராண வரலாறாயினும், மதக் கொள்கைகளாயினும், ஆசார அனுஷ்டானங்களாயினும் அல்லது ஆரம்ப திசையிலுள்ள கலை வர்க்கங்களாயினும்,—இவைகள் ஒவ்வொன்றையும் குறித்து அறிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தியாவையே நாடிச் செல்லவேண்டும். ஏனெனில் மனித வர்க்கத்தின் சரித்திரத்தில் மிகவும் அருமையானவும் அறிவு புகட்டக் கூடியனவுமான—விலை மதித்தற்கரிய—உண்மை ஞானமனைத்தும்—இவ்வரிய பொக்கிஷக் குவியல்கள் யாவும் இந்தியாவிலேதான் மிகவும் பத்திரமாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன" என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## வடமொழியின் மேன்மை

ஹிந்துக்களின் உயர்தரக் கலை நுட்பங்களையும், நூற் பெருக்கத்தையும் குறித்து ஒருவாறு ஆராய்ந்தறிய வேண்டுமாயின், அதற்கு வடமொழிப் பயிற்சி இன்றியமையாததாகும். ஏனெனின் பூர்வீக ஹிந்துக்களின் அருமையான கிரந்தங்களனைத்தும் அம்



மொழியிலேயே யியற்றப்பட்டுள்ளன. இந்நிலவுலகமெங்கணும் நின்றுலவும் மொழிகளில் நெடுங்காலப் பண்டை வழக்கால் சிறப்புற்றிலங்கும் தொன் மொழிகள் மூன்றேயாகும். அவைகள் முறையே கிரேக்க, லத்தீன், ஸம்ஸ்க்ருத பாஷைகளேயாம். மொழி நூல் வல்லோரும், பாஷாந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பிரசித்தி பெற்ற அறிஞர்களும் ஆரிய மொழியாம் ஸம்ஸ்க்ருதம் "லத்தீன் பாஷையைவிட மிகவும் விரிவானதென்றும், கிரேக்க பாஷையினும் மொழி நயத்திலும் சுவை நலத்திலும் சிறந்ததென்றும், இவ்விரு மொழிகளைக் காட்டிலும் பூரணமானதென்றும்" கருதுகிறார்கள்.

"கால தேச வேறுபாடுகளாலும், அரசாங்கப் புரட்சிகளாலும், பற்பலவிதமான மாறுதல்களை யடையப் பெற்றுள்ளதாயினும், இணையற்ற வளம் பொருந்தியதும், அற்புதமான அழகு வாய்ந்ததும், விதம் விதமான புதுமைகளைக் கொண்டுள்ளதுமான ஸம்ஸ்க்ருத மொழியைத் தோற்றுவித்து, அதனைத் தனது தாய் மொழியாகப் பெற்றிருப்பது இந்தியாவின் அரிய பாக்கியமேயாகும். ஐரோப்பிய இலக்கியங்களில் சிறந்தனவாகப் போற்றப்படும் கிரேக்க பாஷையின் மேன்மையும் (மாதுர்யமும்), உரோம பாஷையின் உத்வேகம் இவை யிரண்டிற்கும் ஆதாரமாயுள்ள தாய்மொழி அஃதேயாம். தத்துவ சாஸ்திர விசாரத்தைக் கருதுமளவில், அதனுடைய தொன்மை எத்தகையதெனில், பிதோகோரஸின் ஆராய்ச்சிகளும், பிளேட்டோவின் அரிய சித்தாந்தங்களும் (முடிபுகளும்) சர்வ சாதாரணமாகவும், நேற்றுக் காலையில்தான் செய்யப்பட்டனவாகக் காணப்படும். நம்முடைய கற்பனா சக்திக்கும் புலனாகாத அத்தகைய உயர்ந்த அறிவு செறிந்து விளங்கும் காவியங்கள்—கவிதைகள்; சாஸ்திர ஆராய்ச்சிகளோ, எப்படிப்பட்ட வானசாஸ்திரக் கணித முடிபுகளையும் பிரமிக்கச் செய்யும் அவ்வளவு பழமை வாய்ந்தன; பிரம்மாண்டமான அதனுடைய இலக்கியப் பரப்போ, அதனுடைய பரிமாணத்திலும் இதர அம்சங்களிலும் அதிசயோக்தியாலன்றி மற்றபடி எளிதில் வருணிக்கக் கூடாதவாறு, அத்தனை உயர்வு பொருந்தியதாகவும், தனக்கென்று தனிமையாக ஓர் ஸ்தானத்தை வகித்திருப்பதுமாகும். பிறமொழியின் உதவியின்றி தானே தனித்து நிற்கும் இயல்புள்ள அவ்வளவு சிரேஷ்டமான மொழியைத் தனக்குரிமை யாகப் பாராட்டக்கூடியது இந்திய நாடு ஒன்றுதான்." என்று W. C. டேலர் (Taylor) என்னும் அறிஞர் வடமொழி இலக்கியங்களின் மேன்மையைப்பற்றி யுரைக்குங்கால் வியந்து . பாராட்டியுள்ளார். ஸம்ஸ்க்ருதம் என்ற வார்த்தையே "ஸம்யக் + க்ருத: = செம்மையாக அமைக்கப்பட்டது என்ற காரணப் பெயர்பற்றி ஏற்பட்டதாகும்.

ஒரு தேசத்தின் உண்மைப் பெருமையை யுயர்த்துவதற்கு அந்நாட்டு இலக்கியங்களிலும் வேறு உண்மையான சான்றுகள் வேண்டியதில்லை.

இலக்கிய நூல்கள் ஒரு தேசத்தாரின் அறிவுணர்ச்சியை மட்டுமேயன்றி, அதனுடைய மக்களூடே பரந்து கிடக்கும் ஜீவ சக்தியின் வெளித் தோற்றமும் ஆதர்சமுமாகும். அது தனது தாய் நாட்டின் விற்பத்தி, ஞானம், நாகரீகம், வெற்றித் திறன், கலாபிவிருத்தி முதலியவற்றின் அழியாத சாசனமாகும். அத்தேயத்தார் நினைப்பதையும் செயலாற்றுவதையும், உபதேசிப்பதையும் விளக்கும் அரும் பெருஞ் சாதனமுமாகும். உலக மக்களின் சமுதாயத்தில் அதனுடைய நாகரீகச் சிறப்பையும், உயர் நிலையையும், நிலைநிறுத்துவதற்காக வமைந்த சான்றும் அஃதேயாம்.

## பாணினி—மொழி நூலாராய்ச்சியின் ஆதி புருஷன்

வடமொழி அத்துணை மேன்மையையும், அபிவிருத்தியையும் அடைந்திருப்பதற்கு, அம்மொழியின் சிறப்புக்கு அணி செய்யும் இலக்கண நூல்கள் இன்றியமையாதனவா யிருத்தல் வேண்டும். சென்ற நூற்றாண்டில் மொழி நூலாராய்ச்சி வல்லுனர்களிடையே சிறந்து விளங்கிய மாக்ஸ்முல்லர் என்னும் அறிஞர் கூறுவது: "இலக்கண சாஸ்திரத்தை யபிவிருத்திக்குக் கொண்டுவந்தவர்கள் கிரேக்கர்களும், ஹிந்துக்களுமாகிய இரு ஜாதியினரேயாவார்; ஆனால் இத்துறையில் கிரேக்கர்கள் அடைந்துள்ள அபிவிருத்தியை, பாணினியின் அதிசய "வியாகரண சூத்ரங்களுடன்" சீர்தூக்கிப் பார்ப்பதென்றால், அது மிகவும் ஆரம்பதசையிலிருப்பதாகவும், பரம சாமான்யமானதாகவும் காணப்படும்—ஏனெனில் இதுவரையில் உலகம் கண்ட 'வியாகரண' நூலாசிரியர்களில் பாணினியே மிகச் சிறந்தவர்; இணையற்றவர்."

உண்மையில் பாணினியின் வியாகரண சாஸ்திரமே தற்காலம் "கம்பாரெடிவ் பிலாலஜி" என வழங்கும் பாஷாந்தர ஆராய்ச்சிக்குத் திறவுகோலாக அமைந்திருப்பதாகக் கூறவேண்டும். வடமொழியைச் சென்ற 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் மேனாடுகளில் "கண்டுபிடித்தனர்;" அதன்பின்னரே ஐரோப்பிய அறிஞர்களது மூளையில் வடமொழி யிலக்கணத்தைப் பயிலுவதன் மூலம் ஒரு பாஷையிலுள்ள பல்லாயிரக்கணக்கான வார்த்தைகளையும், மிகவும் குறைந்த அளவில் சிற்சில 'தாதுக்களுக்குள்ளாக' அடக்கிவிடுதல் சாத்யமாகும் என்பது உதயமாயிற்று. நவீன ஐரோப்பிய மொழி நூலாராய்ச்சிக்கு அஸ்திவாரமான இக்கொள்கை தோன்றி சிறிது காலமே யாயினும், ஹிந்துக்கள் இத்துறையில் சுமார் 3000 ஆண்டுகளுக்கும் முன்னரே,—பாணினியின் காலத்திற்கும் நெடுங்காலம் முன்னிருந்தே பிரசித்தி யுற்றிருந்தனர். அன்றியும், கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்துவந்த பாணினியானவர், தன் காலத்தில் வழங்கி வந்த வடமொழியை மிக மிகச் சாமானியமான தாதுக்களாக வகுத்து, அதற்கென 'சூத்திரங்களை'யியற்றி வைத்துள்ளார்.



இச்சிறிய கட்டுரையில் பாரத நாட்டின் இலக்கியப் பரப்பிலும், நூற் பெருக்கத்திலும் உயர் சிகரமாக—அரும் பெருஞ் ஜோதியாக விளங்கும் உயர் நூல்களனைத்தையும் குறித்து எடுத்தெழுதுவதென்பது முற்றிலும் இயலாத காரியமாகும். எனினும் இவ்வுலகிலே மிகவும் சிரேட்டமான காவியங்களில் அரை டஜன் பெயர்களைக் குறிப்பிடுவதாயின், அவைகளில் குறைந்தது இரண்டாயினும் ஹிந்துஸ்தானத்தினின்றும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதாகு மென்பதில் சிறிதும் ஐயமில்லை. அவைகளே இராமாயண, மஹாபாரத காவியங்களாகும். மக்களது சமூக வாழ்க்கையை ஓர் நெறிப்படுத்துவதிலும், அவர்களது சமய வாழ்க்கையின் போக்கை ஓரளவு நிர்ணயிப்பதிலும் ஐரோப்பாவில் உரோம, கிரேக்க இதிஹாச நூல்கள் எவ்விதமான உயர் துணையாக அமைந்தனவோ, அம்மாதிரியாகவே ஹிந்துக்களது சமய, சமூக, பாரமார்த்தீக, தினசரி வாழ்க்கையின் போக்கை உருவகப்படுத்துவதில் இவ்விரு காவியங்களும் நமது நாட்டில் எத்தகைய அருந்துணையாக விருந்துள்ளனவென்றும், அவை கோடிக் கணக்கான மக்களால் எத்தகைய புனிதத்தன்மை வாய்ந்தனவாகப் பாராட்டிப் போற்றப்படுகின்றனவென்றும் கூறுவது உயர்வு நவிற்சியே யாகும். இராமாயண, மஹாபாரத காவியங்களின் அரிய போதனைகளும், உயர்ந்த கருத்துக்களும் மிகவும் உன்னதமாக விருப்பது போலவே அவைகளுடைய அளவும், பரிமாணமும் பிரம்மாண்டமானதாகும்.

## ராமாயண, மஹாபாரத காவியங்கள்

இராமாயணம் ஏழு காண்டங்களாகவும் 48,000 சுலோகங்களும் அடங்கியுள்ளது. மஹாபாரதமோ அதனினும் பெரிது. அது 18 பருவங்களாகவும், 2,200.200 சுலோகங்களாலும் ஆக்கப்பெற்றது. இவ்விரு காவியங்களின் அரும் பெரும் சிறப்பும், மேன்மையும் ஐரோப்பியக் காவியங்களிலே பிரஸித்தி பெற்ற இலியட் (Iliad), ஏனீட் (Aeneid) என்பவைகளுடன் ஒப்பிடுங்கால் தெற்றென விளங்கும். ஹோமர் என்னும் கவியால் இயற்றப்பட்ட "இலியட்"டில் 16,000 வரிகளேயுள்ளன. அது 16 புத்தகங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. வர்ஜில் கவியின் "ஏனீட்" 10,000 வரிகளுக்குட்

பட்டது. அது 12 புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இராமாயணம் ஹோமரின் 'இலியட்'டைப்போல் மூன்று மடங்கு பெரியது. இராமாயணத்தைவிட நான்கு மடங்கு பெரியது மஹாபாரதம்.

"கிரேக்கர்களைப்போலவே ஹிந்துக்களிடையேயும், இராமாயணம், மஹாபாரதமென வழங்கும் இரு பெரு காவிய நூல்களே நிலவிவருகின்றதாயினும், இவ்விரண்டையும் 'இலியட்' அல்லது 'ஒடிஸ்ஸி'யுடன் ஒப்பிட்டுக் கூறுவதென்பது உலகத்திலே மிக மிகப் பிரம்மாண்டமான ஹிமாலயப் பனிச் சரிவுகளினின்றும் உற்பத்தியாய், கணக்கற்ற உபநதிகளால் பெருக்கடைந்து, விசாலமான பிரதேசத்தில் பரவி, பற்பல கிளைகளாகப் பிரிந்து, ஆழமான அருவிகளாகப் பெருக்கெடுத்தோடும் ஸிந்து, கங்கா நதிகளை, அட்டிகாவிலுள்ள சிறு நீரோடைகளுடனும், தெஸ்ஸாலிப் பிரதேசத்து மலையருவிகளுடனும் ஒப்பிட்டுக் கூறுவதற்குச் சமமேயாகும்" என்று புரொபஸர் மோனியர் வில்லியம்ஸ் (Monier Williams) என்பவர் எழுதியிருக்கிறார்.

அவரே பிறிதோரிடத்தில், "வடமொழி நூற்பரப்பில் இராமாயணத்தைவிட இன்பம் பயப்பதான கவிதை நூலொன்றை நான் கண்டதில்லை. அதனுடைய சுத்தமும், தெளிவும், எளிய நடையும், ஆங்காங்கு செறிந்து கிடக்கும் உண்மைக் கவிதையுணர்ச்சியின் அற்புதச் சுவையும், வீர நிகழ்ச்சிகளின் வருணனைகளும் மனதை யீர்க்கும் உருக்கமான மொழிகளும், இயற்கையின் கபீரக் காட்சிகளும், மனித உள்ளத்தை யாட்டுவிக்கும் உணர்ச்சிகளின் முடிவற்ற போராட்டங்களின் முரண்பாடுகளையும் ஆசிரியர் மிகவும் நன்றாகக் கிரகித்துத் தம்முடைய ஆழ்ந்த அனுபவ ஞானத்தை விளக்கியிருப்பதும், இவை யனைத்தையும் நோக்குமிடத்து, இராமாயண காவியத்தை, எந்த தேசத்திலும், எந்தக் காலத்திலும் உற்பத்தியான (தோன்றியுள்ள) கற்பனை கிருஷ்டி நூல்களிலே முதன்மை வாய்ந்ததாகக் கருதி மிகவும் உன்னதமான தோர் ஸ்தானத்தில் வீற்றிருக்குமாறு செய்துள்ளன. அஃதோர் அகன்ற—விசாலமான—இன்ப மூட்டும் நந்தவனத்தைப் போன்றது. இங்குமங்கும் முட்புதரும், செடி கொடிகளு மடர்ந்ததாகக் காணப்படினும், மலர்களும், கனி வளமும் செறிந்து, ஜீவநதியால் நீர்ப் பாய்ச்சப்பெற்று, அதனூடே முட் பரந்து, இருள் நிறைந்து ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கும் விருக்ஷங்களால் பயங்கரத் தோற்றத்துடன் விளங்கும் வனங்களும்கூட இனிய காலடிப் பாதைகளால் அங்கு மிங்கும் கடக்கப்பட்டு, அழகுடன் விளங்குகின்றன" என்று விமர்சனம் செய்திருக்கிறார்.



## ஹிந்துக்களின் கணித சாஸ்திர ஆராய்ச்சி— தசாம்ச கணிதம்

அனுபவ சாஸ்திரங்களில் ஹிந்துக்களின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். நாகரீக உலகமானது தசாம்ச கணிதத்தையும், கணித சாஸ்திரத்தையும், பீஜ கணிதத்தையும் முதன் முதலாகத் தோற்றுவிப்பதற்குக் காரண பூதர்களான ஹிந்துக்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது—அவர்களிடமிருந்தே கணித சாஸ்திரம் ஏனைய இடங்களுக்குப் பரவியிருப்பதாகக் கூறவேண்டும். "ஹிந்துக்கள்தான் தசாம்சக் கணிதத்தையும், பூஜ்யத்தை (சூன்யம்) யும் கூடக் கண்டுபிடித்தவர்கள். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய நான்கு முக்கியமான வழிகளையும் அவர்கள் நன்கறிந்து அதில் தேர்ச்சி பெற்றிருந்தர்."

## பீஜ கணிதம் (***Algebra.***)

ஹிந்துக்கள், பீஜ கணிதத்தை மிகவும் உயர்ந்த அளவுக்கு அபிவிருத்தி செய்திருந்தனர். "அரேபிய நூலாசிரியர்கள், பூர்வீக ஹிந்துக்கள் பீஜ கணிதத்தைப்பற்றி வரைந்த நூல்களை கி. பி. எட்டாவது நூற்றாண்டில் மொழிபெயர்த்தனர். அவற்றைப் பைஸா நகரத்து லியோனர்டோ (Leonardo of Pisa) அராபியர்களிடமிருந்து தெரிந்துகொண்டு மேனாட்டில் பரவச்செய்தானர்."

"நவீன ஐரோப்பியர்கள் எந்த இடத்திலிருந்து பீஜ கணிதத்தைப்பற்றிய அறிவைப் பெற்றுள்ளரென்பதில் இப்பொழுது யாதொரு சந்தேகமு மிருப்பதற்கில்லை; அராபியர்கள் கணித சாஸ்திரத்தை நேரடியாகவேனும், அல்லது பிற நாட்டாரிடமிருந்து தாம் கற்றறிந்ததையேனும்தான் நமக்குப் புகட்டியுள்ளனர்" என்று கோல்ப்ரூக் [Colebrook) என்பவர் கருதுகிறார். "அராபியர்கள் இக் கலையைத் தாமாகக் கண்டுபிடித்தவர்களன்று. பிறரிடமிருந்து அறிந்து கொண்டவர்களே. பிற்பட்ட ஆராய்ச்சி இவ் விஷயத்தைத் தெளிவுபடுத்தி, இம் முடிவையே வலியுறுத்துகிறது; ஏனெனில் அல்ஜீப்ரா என வழங்கும் பீஜ கணிதம் மிகவும் உயர்ந்த அளவில் இந்தியாவிலேதான் அறியப்பட்டிருந்தது. தற்கால ஐரோப்பாவில் அராபியர்கள் அதைப் பரவச் செய்து, முன்னுக்குக் கொண்டுவருவதற்கு, வெகுகாலத்திற்கு முன்னதாகவே அந்நாட்டில் அது பெரிதும் வியாபகமடைந்திருந்தது—தற்காலம் வழக்கத்திலிருந்துவரும் எண்களுக்குக்கூட அப்பெயரை

வழங்கியவர் ஹிந்துக்களே. ஏனெனில் இலக்கங்களின் பெயர்களனைத்தும் வடமொழியை யாதாரமாகக் கொண்டனவாகும்.

## க்ஷேத்ர கணிதம் (*Geometry*)

க்ஷேத்ர கணிதமும் முதன் முதலாக இந்தியாவிலேயே கண்டு பிடிக்கப்பட்டது என்று கூறுவது மிகையாகாது. பூர்வீக ஆரிய மக்கள் வைதீக குண்டங்களையும், யாகசாலைகளையும் ஓர் குறிப்பிட்ட அளவுக்கும், விதி முறைகளுக்கு மிணங்க நிர்மாணிக்கவேண்டிய அவசியமே இந்த சாஸ்திரத்தை யுற்பத்தி செய்வதற்கு முக்கிய காரணங்களி லொன்றாக விருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது. காலஞ்சென்ற வங்காள தேசபக்தரும், ஆசிரியருமான R. C. டட் என்பவர் "பூர்வீக இந்திய நாகரீக வரலாறு" (History of Civilization in Ancient India) என்ற தமது அருமையான நூலில், ஹிந்துக்கள் க்ஷேத்ர கணிதத்தின் (Geometry) முக்கிய அம்சங்களைக் குறித்து எழுதுங்கால், "கிறிஸ்து ஜனிப்பதற்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே கண்டுபிடித்து, அதை கிரேக்கர்களுக்குப் போதித்தனர்" என்று வரைந்துள்ளார்.

அன்றியும், கணித சாஸ்திரத்தில் (Trignometry) "டிரிக்னமெட்ரி" என்னும் பிரிவையும் முதன் முதலாக வெளிப்படுத்தியவர்கள் ஹிந்துக்களே யென்பது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட விஷயம். "சூர்ய ஸித்தாந்த" மென்னும் அரிய நூலில் டிரிக்னமெட்ரியைப் பற்றிய விவரங்களைக் கண்டு அதிசயித்த மேனாட்டினர், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்புகூட தாம் அத்தகைய முன்னேற்றத்தை யெய்தியிருக்கவில்லையென்று வியக்கிறார்கள். சல்வ சூத்திரங்களில் க்ஷேத்ர கணிதத்தின் 47-வது பிரச்னை (புத்தகம்) I மிகச் சுலபமாகத் தீர்க்கப் பட்டிருப்பதாக (Geometrical theorem of the 47th proposition Book I) டாக்டர் திபாட் (Thibaht) என்பவர் கருதுகிறார். இது வரையில் பிதா கோரஸ் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டதாகக் கருதப் படும் அப் பிரச்னையை அவரது நாட்களுக்கு இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஹிந்துக்கள் தீர்த்து, முடிவு கட்டியிருப்பதால், இவ்விஷயத்தில் தாம் பெற்றிருந்த அறிவை இந்தியர்களிடமிருந்தே கிரகித்திருக்கவேண்டுமென்பது வெளிப்படை.

## லீலாவதி—ஹிந்துக்களின் கணித நூல்

இந்திய கணித சாஸ்திரத்துக்கு "லீலாவதி" என்று பெயர் வழங்கிவந்தது. அது கணித சாஸ்திரத்தின் சாமான்ய தர்மங்களையே யன்றி, அவற்றை வட்டி, பரிவர்த்தனை முதலிய அனுபவ கிரியைகளில் பயன்படுத்துவதைப்பற்றியும் உரைக்கிறது. இவைகளெல்லாவற்றைக்காட்டிலும் உலகிலே ஹிந்துக்களின் எண்மானமே மிகவும் உயர்ந்த அளவிற்கு எட்டக்கூடியதாக யிருப்பதாலும், அதனிலும் சிறந்த முறை யொன்று இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படாததொன்றே ஹிந்துக்களின் கணித ஆராய்ச்சியின் மேன்மையை விளக்குவதற்குப் போதுமானதாகும்.



## இசைக்கலை—(சங்கீதம்)

சங்கீதம், நாட்டியம், சிற்பம்போன்ற உயர்தரக் கலைகளில் இந்தியா எத்தகைய நிலைமையை யெய்தியுள்ளது என்பதைக் கவனிப்போம். ஹிந்துக்களின் இசைக் கலை மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். நான்கு வேதங்களில் சாம வேதமென்பது இசைக்கே உரியதாதலின் "ஸாமகான" மென்றே அழைக்கப்படுகிறது. அன்றியும் "கந்தர்வ வேத"மென்று இசைக் கலையைத் தனியாக பூர்வீக ஹிந்துக்கள் வகுத்தனர். கடந்த 3000 ஆண்டுகளாக அதனுடைய அபிவிருத்தியானது தங்கு தடையின்றி முன்னேற்றமடைந்தே வருகிறது. இந்திய சங்கீதம் மிகவும் நுட்பமானது. அது பார்வைக்கு மிகவும் சிக்கலானதாகக் காணப்படினும், பசு பக்ஷி யடங்கலையும் தனது போஹ வயப்படுத்தும் அற்புத ஆகர்ஷண சக்தியைப் பெற்றுள்ளது.

ஹிந்துக்கள் மக்களது மனோவுணர்ச்சியை 32-ஆக வகுத்திருக்கின்றனர். இம்மனோ விகாரம் அல்லது உணர்ச்சி ஒவ்வொன்றையுந் தழுவியே பற்பல "இராகங்களையும், இராகிணிகளையும்," மேளங்களையும், மேள கர்த்தாக்களையும் அமைத்தனர்.

உண்மையில் ஹிந்துக்களின் சமூகக் குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொரு சுபாசுப நிகழ்ச்சி முதல் இறைவன் முன் நிகழும் திருவிழாக்கள் ஈறாக இசையின்றி ஒரு சடங்கும் பூர்த்தியாவதில்லை யென்றால், இசையுணர்ச்சி எவ்வளவு இன்றியமையாததாக நமது நாட்டில் கருதப் படுகிறதென்று நாம் விளக்கத் தேவையில்லை. அன்றியும் இசை நுட்பத்தை யறிவிக்கும் கருவிகளாம் வாத்தியங்களின் அமைப்பையும், பெருக்கத்தையும் கவனிக்கும்போது இவ்வுண்மை புலனாகும். அனுபவக் கலைகளிலும், கைத்தொழில் சாஸ்திரங்களிலும் ஹிந்துக்கள் எத்தகைய முன்னேற்றத்தை யெய்தியிருந்தன ரென்று சிலர் வினவலாம்.

## பூர்வீக இந்தியாவில் நிர்மாண வேலைகள்

"எஞ்சினீரிங்" என்று வழங்கிவரும் நிர்மாணத் தொழிலை யெடுத்துக்கொள்ளுவோம். சுமார் 50 வருடங்களுக்கு முன்பு கூட

ஐரோப்பிய நாடுகளில் "மலைகளைக் குடைந்து" அதனூடே போக்குவரத்துக்குரிய சாதனங்களைச் செலுத்துவதற்கேற்ற "டன்னலிங்" வேலைப்பாடின் தன்மை எப்படிப்பட்டதென்று தெரியாது. ஆனால் இந்தியாவிலோ, 2000 ஆண்டுகளுக்கு முன்பாக, "எல்லோரா" மலைக் குகைகள் எனப் பிரசித்திபெற்று விளங்கும் பிரதேசமானது, ஓர் குன்றின் அடிவாரத்தில் ஒன்றரை மைல் அகலத்திற்குப் பாறைகளைக் குடைந்து, அவற்றினின்றும் கோயில்களைச் செதுக்கி வைத்திருக்கும் ஆச்சரியமான வேலைப்பாட்டைக் கருதுகையில் வியப்பையும், பிரமிப்பையும் ஒருங்கே யளிக்க வல்லது. தெற்கே பல்லவர்களின் குகைக் கோயில்களும், மஹாபலிபுரத்திலுள்ள இரதங்களும் இத்தன்மையனவே. அவை யாவும் பாறைகளைக் குடைந்து அவற்றினின்றும் அற்புதச் சிற்ப அழகு வாய்ந்த கட்டிடங்களை நிர்மித்த அரிய சிற்பிகளின் திறனை விளக்குகின்றன.

## ராஜதேவஸ்தம்பம்

அன்றியும் ஐரோப்பியத் தொழிற்சாலைகளிலும், உலைக்களங்களிலும் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்புகூட வார்ப்பிக்க முடியாத பிரம்மாண்டமான இரும்பு ஸ்தம்பங்கள், இந்திய உலைக்கூடங்களில் மிகச் சாதாரணமாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன் வார்ப்பிக்கப் பட்டன. ஓர் பெரிய யுத்தக் கப்பலின் பாய்மரத் தண்டைப்போன்ற அவ்வளவு பிரம்மாண்டமானதாக விருக்கும் ராஜதேவஸ்தம்பமானது இந்தியர்களின் உழைப்பிற்கும், அரிய வேலைப்பாடுகளுக்கும், தொழில் சிறப்பிற்கும் சிறந்த சின்னமாக இன்றளவும் கம்பீரமாக விளங்குகிறது. 16 நூற்றாண்டுகளாக மழையிலும், வெய்யிலிலும், காற்றிலும், பனியிலும் அடிபட்டிருக்கின்றதே யாயினும், அது இன்றளவும் துருப் பிடிக்காமலே புத்தம் புதியதாக விளங்குகிறது. இதினின்றும் ஹிந்துக்கள் இரும்பில் "துரு" யேறவொட்டாமல் தடுக்கக்கூடியதோர் அரிய முறையை யறிந்திருக்கவேண்டு மென்பது வெளிப்படை.

ஆனால் சாஸ்திர முன்னேற்றத்திலும், தொழில் துறையிலும் மேம்பாடடைந்திருக்கும் ஐரோப்பாவோ, இம்முறையைத் தெரிந்து கொள்ள எத்தனை யாண்டுகள் செல்லுமோ?

(தொடரும்.)

---

கடிதமெழுதும் நண்பர்கள், பதிலறிய விரும்பினால்
தயவு செய்து ஸ்டாம்பு வைத்து அனுப்புவதோடு, தம் தம் சந்தா
நம்பரையும் குறிப்பிடுமாறு வேண்டுகின்றோம்.

# வாலிபர்களுக்கு!

திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள்.

தமிழ் சிங்கங்களே, உங்களுக்கு ஒரு வார்த்தை. வையகத்தில் நீங்கள் தலைவர்களாவது நிச்சயம். பெரிய பதவியை யடைவீர்கள். சிலர் ரிஷிகளாகலாம். பலர் ஸ்ரீ ராமரைப் போல் புவியை அரசு புரியலாம். துரோணாச்சாரிகள் உங்களில் தோன்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. சிலர் பீமசேனனைப் போல் இடும்பனைக் கொன்று அவன் தங்கையை மணஞ் செய்து கொள்வீர்கள். ஒருவேளை சந்திரகுப்தன் தோன்றி சாணக்கியனை சிநேகிதம் பிடித்து கிரீக் நங்கையை விவாகஞ் செய்து பிதுருக்களுக்கு திருப்தியை யளிக்கலாம். சுக்கிர நீதியைப் போல் காலத்திற்குகந்த சாஸ்திரம் செய்யும் வன்மை உங்களிடம் புலனாகி, சகமெல்லாம் உங்களின் பாத கமலங்களில் விழும்; அல்லியரசாணி மறுபடியும் தோன்ற முடியாது என எவன் சொல்லமுடியும்? யமனுடன் சகஜமாய் சண்டை போடும் சாவித்திரி தோன்றி, செத்துவிட்ட சத்தியத்தை மறுபடியும் தாண்டவமாடச் செய்வாள். "திரிமூர்த்திகளா யிருந்தால் எனக்கென்ன? சத்தியத்திற்கு விரோதமானால், எனது வன்மையால் அவர்களைக் குழந்தைகளாக்கி விடுவேன்" என்னும் அருந்ததிகள் தமிழ் நாட்டில் தோன்றுவார்கள்.

இப் பெரிய நிலைகளை அடைய ஒரு நிபந்தனையையே நீங்கள் பற்ற வேண்டுமென ஈசன் எங்கும் கர்ச்சனை செய்கிறார். அந்த நிபந்தனையான சட்டத்தை யறிந்தால் சூரியன் காலையில் உதிப்பது எப்படி நிச்சயமோ அதுபோலவே, நீங்கள் ஜயம் பெறுவதும் நிச்சயமாகும். நாள் முழுவதும் கஷ்டமுடன் வேலை செய்தால் உங்களை அறியாமல் நித்திரை தேவியானவள் ஆனந்தமளித்து இன்ப சாகரத்தில் மூழ்கச் செய்வது போல், ஜயமென்பது பேரிகை யடித்து உங்களைச் சந்தோஷத்திலாக்கும். நிபந்தனையான சூட்சமத்தை நீங்கள் புசித்தால் பசி என்னும் வேதனை யறியாமல் நாளெல்லாம் உற்சாகத்துடன் வேலை செய்யும் வீரர்களாவீர்கள். உஷ்ண காலத்தில் திண்டாடும் ஜீவராசிகள், ஐப்பசி மாதத்தில் நிச்சயமாய் அமுதமான மழையை அடைந்து எங்கும் பசுமையையும், புன்னகையையும் பார்ப்

பது போல் நீங்களும் எங்கும் எப்பொழுதும் காணாத ஒரு அற்புதத் தோற்றத்தைக் காண்பது நிச்சயம்.

நான் சொல்லும் நிபந்தனை ஒரு சட்டமாகும். அது உலகத்தைப் பாதுகாக்கும் ஒழுக்கமாகும். இயல்பைக் கொல்லாமலிருக்கும் ஒரு சக்தியாகும். காடு முட்புதர்களை அழிக்கும் அது ஒரு அனலாகும். அஃது இருளைப் போக்கும் சூரியனைப்போலாகும். நன்மைகளை நிலைக்கச் செய்வதும் அதுவே. புன்மைகளை ஓடச் சொல்வதும் அதுவே. அஃதால் அறிவிலி அலறுவான்; அட்டகாசம் நடுங்கும்; அநியாயங் கலங்கும்; அநீதி அழியும்; பொய் பதுங்கும்; பித்தலாட்டம் ஓட்டம் பிடிக்கும்; வஞ்சகன் கீழே வீழ்வான்; கபடன் காணாமலாய்விடுவான்; சுருங்கச் சொல்லில் அந்த நிபந்தனை செய்யாத செயலில்லை. அதுவே உலகத்தைச் சிருஷ்டித்தது. அதனை எப்பெயர் கொண்டும் அழைக்கலாம். அதைப் பாதுகாப்பவன் எம்பெருமானே அவனே யாகும். புதிய சிருஷ்டிக்காக அவனே அதை அழிப்பான்.

இந்த அபூர்வமான அரிதான நிபந்தனையைப் பெரியோர்கள் ஆதியில் சுலபமாய்ச் சொல்வதில்லை. வெயிலில் அவஸ்தைப் படுபவனுக்கே நிழல் அருமை தெரிவதுபோல், உண்மைக்கு விடா முயற்சியுடன் உழைப்பவர்களுக்கே இதன் உயர்வு புலனாகும் என அவர்கள் மற்றவர்களுக்கு அறிவிப்பதில்லை. கட்டாந்தரையில் விதைகளை விதைக்க அவர்கள் விரும்பவில்லை. முட்புதரிலும், வழி நடுவிலும், நீரிலும், ஆற்றிலும் அவர்கள் தான்யத்தை விதைப்பதில்லை. குழந்தை கையில் அவர்கள் கத்தியைக் கொடுக்க விரும்பவில்லை. இதைப் பரம ரகசியமாய் வைத்து அருகதர்களுக்கே இதை அளிப்பார்கள். இல்லையேல் இதனால் ஆதாயமழிந்து ஆபத்தாகுமென எண்ணினார்கள். இதை உத்தேசித்தே அவர்கள் பரம ரகசியமெனச் சொல்வது வழக்கம். இந்தப் பரம ரகசியத்தையே நான் சொல்ல விரும்புகிறேன்.

சில மொழிகளிலே இத் தர்மத்தை மொழிந்தால் அது தீ உருத்திர வடிவமாகவேண்டு மென்னும் சொற்களாகவேயாகும். உருத்திர வடிவமென்றால் மற்றவர்களுக்கு பயமளிப்பதாகும். இது உலகத்தை நடுங்கச் செய்யும். இது சீவராசிகளைக் கலங்கச் செய்யும். இது தெய்வீக குணங்களில் சிறந்ததாகும். இது தேவாம்சமான குணமாகும். பரம புனிதமான பரப்பிரமமும் உருத்திர வடிவமாகும்.

பகவான் பயத்தினாலேயே காற்று அசையும்; அனல் எரியும் என கடோபநிஷதம் கூறும். நான் அசையவில்லையேல் பகவான் என்னை அழித்துவிடுவார் எனப் பயந்தே காற்றுக் ககனமெல்லாம் அசைந்து திரிவான். எந்த இடத்திலாவது காற்று சற்று சூன்யமாகி அமைதியானால் கோர வடிவமான பகவான் புயல் காற்றாகி எங்கும் காற்றை நடுநடுங்கச் செய்து ஓட்ட ஓட்டமாய் ஓடச்செய்து புவியெல்லாம் நிறையச் செய்வான். மரங்களதிகரித்து உல்லாசமாய்க் காற்றுச் செல்ல முடியவில்லையானால் அனலாய்த் தோன்றி, காட்டை யழித்து விடுவான். காட்டை இப்படி யழித்து நடுங்கும் காற்றுக்குச் சரணமுமளிப்பான். இப்படியே அவன் பயத்தால் அனலை எரியச்செய்து, அழிக்கவும் செய்வான். கோரமான சூரியனாகி ஜலத்தைக் குடிப்பான். கரும் மேகமாகி சூரியனை மறைத்து ஜலத்தைப் பாதுகாப்பான். புவியிலே செயற்கை மண்டப மதிகரித்தால் பூகம்பமாகி அதை அழிப்பான். கோரமான பெரும் வெள்ளமாகி உலகமெல்லாம் சத்து நீங்கிய மண்ணுக்கு உறமளிப்பான். பெரும் கடலாகி கலங்கும் காலனாய் பூகோளத்தைப் புனிதஞ் செய்வான். இக்கொடுமையான கோர வடிவத்தாலேயே இயல்பின் சட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவான்.



இக்கொடுமையான சுபாவம் அவனுக்கில்லையேல் இயல்பு சட்டம் நிறைவேறாதது ஒருபுறமிருக்க, ஈசனையும் ஒருவரும் உபாசிக்கப்போவதில்லை. ஆதியில் தர்மங்கள் தோன்றியதற்கும் அவன் பயமே காரணமாகும். இதை எண்ணித்தான் 'ஈஸ்வர பயம் தர்மத்தி னாரம்பம்' எனச் சொல்வது. ஈசனின் பயங்கரப் பொருளையும் ஈசன் என உபாசிப்பது இதனாலேயாகும். இமயமலை உயரத்தில் பயங்கரமாகும். கங்கை குளிர்ச்சியில் கலக்கமளிப்பான். யமுனை பார்ப்பதற்குக் கருமையாகி கலங்கிடச் செய்வான். காவேரி ஆடி பதினெட்டில் பெருகிப் பயமளிப்பான். இக்கோர ஸ்வபாவத்தைக் கண்டு இச்சடப் பொருள்களைச் சனங்கள் உபாசிப்பது யாவரு மறிந்த விஷயம்.

சாவு என்னும் யமனாகி, நோய்கள் என்னும் அவன் தூதர்கள் உலகத்தில் சஞ்சாரஞ்செய்து அவன் கொடுமையான பசி என்னும் புலி ஒவ்வொருவனையும் சதாகாலமும் கொல்லவில்லையேல் உலகம் என ஒன்றிருக்குமா எனச் சிந்தனை செய்யவும். நாம் இப்படி எந்த வகையில் பார்த்தபோதிலும் மற்றவர்களுக்கு பயமளிக்கவும் என்னும் ஸ்வபாவமே அவனுக்குப் பரமன் என்னும் புனித நாமத்தை அளித்தது.

பகவத் கீதையைப் புனித நூல் என நாம் எண்ணுகிறோம். அர்ச்சுனனும் அறிஞன் எனச் சொல்வது வழக்கம். ஆனால் அவன் கிருஷ்ணன் சொற்களை எப்பொழுது மதித்தான் என கவனித்தால், கொடூரமான விசுவ ரூபத்தைக் கண்ட பிறகே நெஞ்சு கலங்கி அவன் சொற்படி நடக்க விரும்பினான். "எனக்கு ரோமம் சிலிர்க்கின்றதே! உன்னை வணங்குகின்றேன். கையில் கதை சக்கரத்தைக் காண்கி

றேன். நீ கோர வடிவமுள்ளவன். உன் பயமுள்ள பற்களைக் கண்டு புவி நடுங்கும். உன்னைப் பார்த்து அந்தராத்மா அலருகின்றது. என் திடம் தளர்கின்றது. உன் கோரமான பற்களின் நடுவே புவியெல்லாம் அகப்பட்டு பொடிப் பொடியாகின்றது. சுடர் விட்டெரியும் உன் திருவாயில் புவியிலுள்ளவர்கள் யாவரும் வீழ்கின்றார்கள். நெருப்பிலே ஈசல் விழுந்து அழிவதுபோல் விழுந்து அழிவதற்கு யாவும் உனது முகத்தில் சாயும். எல்லாப் பக்கங்களிலும் வாயைத் திறந்து கரும் நாவுடன் மனித சமூகத்தை உறிஞ்சி எதையும் புசித்து உனது தேஜஸானது தரணியெல்லாம் நிறைந்து உனது சுடர் ஒளியால் புவியெல்லாம் எரியும். நீ நன்கு புலனானால் உன் கோரமே கோரம்" என அவர் பயங்கர ரூபத்தைக் கண்டு, "கிருஷ்ணா! ராட்சதர்கள் உன்னைக் கண்டு கலங்குகிறார்கள். சித்தர்கள் சிதறுகிறார்கள், இக்கோர வடிவப் பெருங் குணத்தை அறியாமல் அன்பினால் அலட்சியமாயிருந்துவிட்டேன்" எனக் கதறினான்.

உடனே ஸ்ரீ கிருஷ்ணன், "நான் மனிதர்களை யழிக்க வந்துள்ள காலனாகும். ஒருவரையும் விடாமல் நான் அழித்துவிடுவேன். உன்னைத் தவிர வேறு எவரும் இக் கோர வடிவத்தைக் காணவில்லை. யக்ஞம், வேதம், தானம், கிரியை, உக்ர தவம், ஆழ்ந்த கல்வியானாலும் என்னைக் காணமுடியாது. புனிதமாயுள்ளவர்களே இதைக் காணமுடியும்" எனச் சொல்லி தெய்வாம்சத்தின் நிபந்தனையைப் புலனாக்கும் இக் கொடுமையான உண்மையைப் புலனாக்கினார். அர்ச்சுனனும் பணிந்தான்.

தெய்வத்தை தினந்தோறும் பூஜை புரியும் நீங்கள், இந்த தெய்வ குணமான அச்சத்தை விளைவிக்கும் ஸ்வரூபத்தை அடைய வேண்டும். நெஞ்சு திடுக்கிட எதையுஞ் செய்ய வேண்டும். உங்கள் செயலைக் கண்டால் உலகம் அலற வேண்டும். புவி கலங்கி பரிதவிக்க வேண்டும். நடந்தால் புவி யதிர வேண்டும். பேசினால் சனங்கள் கலங்க வேண்டும். செவியுற்றால் 'இந்த நாசகாரி என்ன செய்யப்போகிறானோ' என ஜனங்கள் அச்சமாக வேண்டும். பார்த்தால் பரமசிவனைப் போல் மன்மதனை எரித்துவிட வேண்டும். காயம் நோக்கினால் 'காலன் வந்துவிட்டான்' என எங்கும் கலக்கமாக வேண்டும். கொடுமை கொடுமை கொடுமை என இருள் தன் கர்ப்பத்துடன் கலக்க வேண்டும். புசிப்பதற்கு இல்லையே என வாயைப் பிளப்பதற்குள் பூமண்டலத்தை எல்லாம் சுகமாய்ப் போஜனஞ் செய்ய வேண்டும். பெண்ணெனவும், பிள்ளை எனவும், தாய் எனவும், தந்தை எனவும், புருஷன் எனவும், மனைவி எனவும், பெரியார் எனவும், சிறியார் எனவும், கடவுள் எனவும், சைதான் எனவும், புஸ்தகம் எனவும், புனிதம் எனவும், சத்தியம் எனவும், அசத்தியம் எனவும், ஒழுக்கம் எனவும்,



ஒழுக்கமில்லை எனவும் எண்ணினால் உருத்திர வடிவமாகி புவியை நடுக்கமுடனாக்க வேண்டும். அப்பொழுதுதான் தெய்வ அம்சமான குணங்களைப் பெறலாம்

கொடுமையான குழந்தைக்கே தாய், பால் அளிப்பாள். கொடுமையுள்ளவனாகி, தாய் தந்தை, சகோதர சகோதரி, கோபிகைகளையெல்லாம் சதாகாலம் நடுங்கச் செய்தவனே ஸ்ரீ கிருஷ்ணனானான். அவர்களால் மரியாதையையு மடைந்தான். கொடுமையான ஆச்சாரியனே கல்வியை யளிக்க முடியும். காலிப்பயல்களே பெருங் கல்விமான்களாக முடியும். ஏனெனில் அவர்களுக்கே குருநாதர்களும் நன்றாகக் கற்பிப்பார்கள். கொடுமை யளிக்கும் மனைவிகளே பெண்பிள்ளைகளைச் சுகமாய்ப் பாதுகாத்து பிச்சை எடுக்காமல் கடைக்காலத்தில் வாழ முடியும். கோரமான புருஷர்களே பெண்மணிகளைக் காக்க முடியும். அதனால்தான் அவர்களையே அபலைகள் விரும்புவது. அச்சத்தை யளிக்கும் தாய் தந்தைகளே குணக் குழந்தைகளைத் தோற்றுவிப்பார்கள். கொடுமை செய்து அச்சத்தை அனவரதமும் அளிக்கும் குழந்தைகளையே பெற்றோர்கள் அந்திய காலத்தில் விரும்புவார்கள். இன்னும் சுருங்கச் சொல்லில் உலகத்தில் நடைபெறுவதெல்லாம் அன்னியர்களுக்கு அச்சமளிக்கும் ஸ்திரீ புருடர்களின் சரிதைகளாகவே யாகும். லண்டன் மகா சனங்களுக்கு அச்சத்தை அடிக்கடி அளித்த கிளைவ் என்பவனே ஐரோப்பியர்களுக்கு பாரத பூமி என்னும் லட்சுமியை யளித்தான். அலெக்ஸாந்தர் தந்தையையும் அச்சத்தால் கீழே விழச்செய்தான். நிழலைக் காட்டி யம வடிவெடுக்க குதிரையையும் பயமுறுத்தி வசமாக்கினான். புவியை அலறச் செய்து அதற்குத் தலைவனுமானான். ஜூலியஸ்ஸீசர் என்பவன் எதிரிகளை எப்படியாவது பயமுறுத்த வேண்டும். ஆனால் அவர்கள் மரணத்திற்கு அஞ்சுவதில்லை. அழகான முகம் கோர வடிவமுடனாவதைக் கண்டு கலங்குகிறார்கள். அதனால் ஈட்டியினால் முகங்களைக் குத்தி சித்திர வதை செய்யுங்கள் என்றான். ஏராளமான எதிரிகள் இக்கோரச் செயலுக்கஞ்சி ஓட்டமெடுத்தார்கள். ஜூலியஸ்ஸீசர் ஏகச் சக்கிராதிபதியானான். ஆதியில் டார்டாரிகள் இந்தியாவில் ஒரே நிமிஷத்தில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொலைபுரிந்து அச்சமுண்டாக்கிய பிறகே அழிக்க முடிந்தது. நெஞ்சு திடுக்கிடும் வேலைகளைச் செய்து இரண்டு கால் சிங்கங்களைக் குரு கோவிந்த சிங்கன் சிருட்டித்தான். சிவாஜி எங்கும் கலக்கத்தை யுண்டுபண்ணி பட்டாபிஷேகம் செய்துகொண்டான். திப்பு சுல்தானின் பயமளித்த செயல்களே ஸ்ரீ சங்கராச்சாரியரை அவருக்கு ஸ்ரீமுகமும் ஆசீர்வாதமும் செய்யச் செய்தது. அச்சமளித்தால் சனாதனம் உங்களுக்குப் பூர்ண கும்பமுடன் அபிஷேகஞ்

# "பாரதி"யின் விகட வருத்தல்.

நிர். 1.

பங்கு) குரங்குகுருதி (திங்ரும்ப
பங்கு

---

ருன்றகு
ருன்ம்ரு

---

றரகு
றப்ப

---

ருப்ருதி
தின்ங்ன்

---

பரப்

---

## விடையும் வழியும் வேண்டும்.

விடைகளை ஏற்றுக்கொள்ளும் கடாசி நாள்: ஆனிமீ 25உ (7–7–32).

நிபந்தனைகள்: 'பாரதி'யின் குறுக்கெழுத்து பந்தனத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளே இதற்குமாகும். ஒருவரே பந்தனத்திற்கும் விகட வருத்தலுக்கும் விடை தர முயலலாம். விடை ஒவ்வொன்றுக்கும் 4 அணு ஸ்டாம்பு வைத்தனுப்ப வேண்டும். பந்தனத்தில் கூறப்பெற்றவாறே இதற்கும் பரிசு கொடுக்கப்படுகிறது.

குறிப்பு:

சென்ற மாதத்தில் வந்த பந்தனத்திலும், விகட வருத்தலிலும் அச்சுப் பிழை நேர்ந்து விட்டதுபற்றி வருந்துகின்றோம். அடுத்த பந்தனங்கள் இவ்விதம் நேராதவாறு மிகவும் கவனத்துடன் பிரசுரமாகுமென உறுதி கூறுகின்றோம்.

—போ. ஆ.

---

செய்யும். பகவானும் அப்பொழுதே உங்களுக்குத் தன் புனிதமான சொரூபத்தைப் புலனாக்குவான். புவியிலுள்ள எல்லா இன்பங்களையும் பெறலாம். அத்தகைய அச்சமளிக்கும் அஞ்சா நெஞ்சு வேண்டுமெனத் தமிழ் இளஞ் சிங்கங்களான வாலிபர்களின் இருதய நிலயத்திலிருக்கும் பகவானை நாளும் துதிசெய்கிறேன். நீங்களும் என்னுடன் சேர்ந்து அந்த உருத்திரனை உபாசனை செய்யவும். இதுவே நான் உங்களுக்குச் சொல்லும் ஒரு வார்த்தையாகும்.

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

---

# இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில்.

திரு. என். வெங்கடரமணன் அவர்கள்.

இக்காலத்தில் செல்வமும், சீரும் பெற்று, நாகரீகத்தில் சிறந்து விளங்கும் ஐரோப்பியர்கள் பலரும் ஆடை யணிவதற்கும் அறியாமல் இலைகளையும், மரப் பட்டைகளையும் தரித்து, வீடு வாசலின்றி அலைந்து திரிந்துகொண்டிருந்த அக்காலத்திலேயே செல்வத்திற் சிறந்து, கைத்தொழிலில் மிகுந்து, வேளாண்மையில் விருத்தியடைந்து, வாணிபத்தில் வளர்ந்து, நகர வாழ்க்கையிற் பொலிந்து, நாகரீகம் வாய்ந்து நமது இந்திய நாடு விளங்கிய தென்பதை யாரே மறுக்க வல்லார்? இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய நாடு கப்பல்களின் மூலமாய் அயல்நாடுகளுடன் வாணிபஞ் செய்து உலகில் தனிச் சிறப்புற்று விளங்கியது. இந்திய வர்த்தகர்கள் ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகளோடேயன்றி, ஆப்பிரிக்கா முதலிய அன்னிய கண்டங்களைச் சேர்ந்தவர்களோடும் வர்த்தகம் புரிந்து வந்திருக்கின்றனர். இந்தியரின் வர்த்தக ஸ்தாபனங்கள் சுமத்ரா, ஜாவா, சீனா, மலேயா, அரேபியா முதலிய நாடுகளிலும் ஏற்பட்டிருந்தன வெனச் சரித்திரம் கூறுகிறது. பொதுவாக இந்தியரும், சிறப்பாகத் தமிழரும் கடல் கடந்து வியாபாரம் புரிந்து ஊதியம் தேடிவந்தன ரென்பதற்குச் சந்தேகமில்லை. "திரை கடலோடியும் திரவியந் தேடு" என்ற தமிழ் நாட்டுப் பழமொழி எதை விளக்குகிறது? தமிழ்ச் சங்க நூல்களில் காவிரிப்பூம் பட்டினம்போன்ற துறைமுகங்களினின்றும் மாக்கலங்களின் மூலமாய் தமிழர் செய்த வாணிபங்களைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதும் சான்றன்றோ? மூன்று பக்கங்களிலும் நாலாயிரம் மைல்களுக்கு மேற்பட்ட தூரம் கடலால் சூழப்பெற்ற இந்திய நாட்டில் வதிந்த மக்கள் கடலில் கப்பல்கள் மூலமாய்ச் சென்றுவர முயலாமலிருப்பது முடிந்த காரியமோ? கப்பல் வியாபாரத்தால் கன திரவியங் கிடைத்ததைக் கருதிய இந்திய மக்கள் பெரும்பாலார் கடற் கரையை யடுத்து வசிக்கவும், கடல் யாத்திரை செய்யவும் முற்பட்டதில் அதிசயமில்லை. அதனாலேயே இந்தியாவின்

கடற் கரையை யடுத்துப் பற்பல துறைமுகப் பட்டணங்கள் ஏற்பட்டுள்ளன. அக்காலத்தில் அத் துறைமுகங்களில் கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் பல வேலை செய்துவந்தன. இக்காலத்திய சாஸ்திரீய—நவீன சாதனங்கள் இல்லாமலேயே அக்காலத்தில் இந்தியர்கள் திறமையாகக் கப்பல்களை நிருமித்தும், கடலில் கப்பல்களை நடத்தியும் பெருமை பெற்றனர். பாரத மக்கள் டக்காவினின்றும் பட்டு வஸ்திரங்களையும், மசிலிபத்தினின்றும் மஸ்லின் துணிகளையும், குஜராத்தியினின்றும் பருத்திச் சரக்குகளையும், கச்சியினின்றும் வெள்ளிச் சாமான்களையும், டில்லியினின்றும் தந்தத்தாலான சாமான்களையும், மால்வாவினின்றும் மயக்க மருந்துகளும், கோலகொண்டாவினின்றும் வைரங்களையும், இலங்கையினின்றும் இரத்தினங்களையும், காசியினின்றும் பித்தளைச் சாமான்களையும், காஷ்மீரத்தினின்றும் உயர்ந்த சால்வைகளையும், இந் நாட்டினின்றும் மற்றும் பல பொருள்களையும் மரக்கலங்களின்மீது அயல்நாடுகளுக்குக் கொண்டு சென்று அவற்றை விற்பனை செய்து, தமக்குத் தேவையான அந்நாட்டுப் பொருள்களை வாங்கிவந்தனர். இந்திய நாட்டு வியாபாரிகளின் உண்டிகளை உலகில் எவரும் விரைவாகவும், சந்தோஷமாகவும் ஏற்றுப் பணஞ் செலுத்தி வந்தனர். பாக்தாத், சாமர்க்கண்டு, ஜான்ஜிபார், ஜாவா பட்டணங்களிலும், ரோம் ராஜ்யத்திலும் இந்திய வியாபாரிகள் வாணிபஞ் செய்து பொருளீட்டி வந்தனர். இந்நாட்டு வியாபாரிகள் பருத்தி, பட்டு வஸ்திரங்களையும், உலோகத்தாலான சாமான்களையும், விவசாயக் கருவிகளையும், மற்றும் பல வியாபாரப் பண்டங்களையும் மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு ஆப்பிரிக்காக் கண்டத்தின் துறைமுகங்களிலும், பாரசீகத்தை யடுத்த கடற்கரைகளிலும் தங்கள் கலங்களை நிறுத்தித் தங்கள் பண்டங்களை விற்று, அந்நாடுகளிலிருந்து தந்தங்களும், பச்சை முதலிய மணிகளும் வாங்கிக்கொண்டு பலநாள் கடற் பிரயாணஞ் செய்து வீடு சேர்ந்தனர். சில சமயங்களில் கடற் கொள்ளைக்காரர்களிடம் சிக்கித் தம் பொருள்களை யிழந்தும், கடலில் எழும் புயல் முதலியவற்றால் தாக்குண்டு மரக்கலங்கள் மூழ்கியும், வேற்றரசர்களின் வயப்பட்டு உயிரிழந்தும், சிறைவாச மிருந்தும், பொருள் நஷ்டமடைந்தும் துன்புறுவதுமுண்டு.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவில் கப்பல் கட்டுந் தொழில் மேலோங்கி நின்றது. ஆங்கிலேயரின் கப்பல்களுடன் இந்தியக் கப்பல்கள் இங்கிலாந்துக்கும் போய் வந்துகொண்டிருந்தன. லண்டனை யடுத்துள்ள தேம்ஸ் நதியில் ஆங்கிலக் கப்பல்களிடையில் கொடிகள் அசைந்தாட இந்திய மரக்கலங்கள் கம்பீரமாக நின்று ஊசலாடிய காட்சியை ஒரு முறை எண்ணிப்பாருங்கள். இந்தியாவில இராஜப்பிரதிநிதியாக விருந்த வெல்லஸ்லி பிரபு அவர்



கள் ஆங்கில அதிகாரிகளுக்கு இந் நாட்டின் நிலைமையைப்பற்றி எழுதியனுப்பியுள்ள அறிக்கையில் "1800-ம் ஆண்டில் கல்கத்தா கப்பல் துறைமுகத்தில் 10,000 டன்கள் சரக்குகளை ஏற்றக்கூடிய கலங்கள் இருந்தன வென்றும், இங்கிலாந்து முதலிய அயல்நாடுகளுக்கும் சரக்குகளை ஏற்றிச் சென்றனவென்றும்" எழுதியிருக்கின்றார். இதை யோசிக்குமிடத்து வங்காளிகள் கப்பல் தொழிலில் மேன்மையுற்றிருந்தனரென்றும், கல்கத்தாவில் கப்பல் கட்டும் தொழில் ஓங்கி நின்றதென்றும் ஊகித்தறியலாம். பதினெட்டாவது நூற்றாண்டில் கல்கத்தா, பம்பாய் முதலிய துறைமுகங்களில் தேக்க மரத்தால் செய்யப்பட்ட கப்பல்கள் ஆங்கில நாட்டில் ஓக்கு மரத்தால் செய்யப்பட்டனவற்றைக்காட்டிலும் உறுதியாகவும், நயமாகவுமிருந்தனவென்று பல அறிஞர்கள் எழுதியிருக்கின்றனர். பம்பாயில் கட்டப்பட்ட கப்பல்கள் இங்கிலாந்தில் கிடைப்பதைவிட சகாயமான விலைக்குக் கிடைத்தனவென்றுங் கூறப்படுகின்றது.

நாம் வருடந்தோறும் தற்போது ஏற்றுமதி இறக்குமதிகளுக்காக வேண்டி ஐம்பது கோடி ரூபாய்களுக்கு மேல் அயல் நாட்டுக் கப்பல் காரர்களுக்கு அளித்து வருகின்றோம். ஏன் எனில் மேலே கூறிய சிறப்புகளுடன் கூடி விளங்கிய இந்தியக் கப்பல்கள் இன்று மறைந்து போனமையாலேயேயாம். நந் தேயத்திலிருந்து நாரும், அதனால் செய்யப்பட்ட கைத்தொழிற் பொருள்களும் அமெரிக்கா ஐக்கிய நாடுகள், பிரேஜில், ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குப் போய்க்கொண்டிருந்தன. சுமார் 30 லக்ஷம் டன்கள் கொண்ட அரிசி இந்தியாவிலிருந்து ஆசியாவைச் சேர்ந்த அயல் நாடுகளுக்கும், ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றது. கோதுமை, பஞ்சு, எள்ளு, தேங்கா எண்ணெய், கடலெண்ணெய், தோல், தேக்க மரம், மரப் பட்டைகள் முதலிய பலவித விளைபொருள்கள் இந் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. வெளி நாடுகளிலிருந்து நூல் துணிகள், கண்ணாடிச் சாமான்கள், கம்பளித் துணிகள், பட்டு வஸ்திரங்கள், நார் பட்டுகள், சர்க்கரை, நெருப்புப் பெட்டிகள், இரும்புச் சாமான்கள், இரயில் சாமான்கள், சாயங்கள், நூல்கள், காகிதங்கள், திராவகங்கள், ஆங்கில மருந்துகள், தோல் சாமான்கள், மோட்டார் கார்கள், சைக்கிள் வண்டிகள், மண்ணெண்ணெய், தங்கம், வெள்ளி முதலிய அநேக பொருள்கள் இங்கு இறக்குமதியாகின்றன. இவ்வாறு செய்யப்படும் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்கள் யாவும் அயல்நாட்டுக் கப்பல்களின் மூலமாகவே செய்யப்படுவதால் ஏராளமான பொருள் வருடந்தோறும் அயல் நாட்டாரையே போயடைகின்றது. 1920-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 334 ரூபாய் பெறுமானமுள்ள மூலப் பொருள்கள் வெளி நாடுகளுக்கு

ஏற்றுமதியாயின. வெளி நாடுகளிலிருந்து இந் நாட்டுக்கு 278 கோடி ரூபாய் பெறும் பண்டங்கள் இறக்குமதியாயின. இவையன்றி கொழும்பு, மலேயா தீவுகள், பர்மா, தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளும், மக்கா யாத்திரை செய்யும் மகம்மதியரும், உத்தியோகம் பற்றி இங்கிலாந்தினின்றும் இந் நாட்டுக்கு வந்து போகும் ஆங்கிலேயரும் கொடுக்கும் கப்பல் சத்தங்கள் (சார்ஜ்) யாவும் அயல்நாட்டுக் கப்பல் சொந்தக்காரர்களையே போயடைகின்றன. இவ்வியாபாரங்களில் ஒரு பாகமாயினும் நந்நாட்டுக் கப்பல்களில் நடைபெறுமாயின் அத்தொகை நந்நாட்டை வந்தடையுமன்றோ?

இன்னும் நமது நாட்டில் கப்பல் கட்டுந் தொழில் முற்றும் அழிந்துபோகாமல் சிறுபான்மை நடைபெற்றுவருகிறது. இந்தியக் கப்பல்களெனப் பெயர் தாங்கி இப்போது இருந்துவருபவற்றை இரண்டு பிரிவாகக் கூறலாம். ஒன்று அயல்நாடுகளில் செய்யப்பட்டு இந்தியாவின் பெயரால் விலைக்கு வாங்கப்பட்டவை. அவைகளில் ஆங்கிலேயர்களே அதிகாரம் பெற்றிருப்பார்கள். மற்றொன்று இருபது முதல் நூற்றைம்பது டன்கள் கொள்ளக் கூடிய இந்திய மரக்கலங்கள். இவைகள் இந்நாட்டிலேயே கட்டப்பட்டு, இந்தியர்களாலேயே நடத்தப்படுபவையாகும். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் நந்நாட்டில் இருபது கோடி ரூபாய் மூலதனத்தோடு பதினைந்து கப்பற் கட்டுந் தொழிற்சாலைகள் வேலை செய்துவந்தன. ஆயினும் நாளடைவில் இரண்டொரு தொழிற்சாலைகள் தவிர மற்றவை மறைந்தொழியலாயின. இவ்விடத்தில் தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் முன்னர் தோன்றிய சுதேசிக் கப்பல் கிளர்ச்சியின் வரலாற்றை வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம். தேசாபிமானத்தின் வேகத்தால் இந்தியர்கள் ஆங்காங்கே முனைந்து ஏற்படுத்திய கப்பல் தொழிற்சாலைகள் பலவும், மூலதனம் வைக்கத் தகுந்த பொருளாளிகள் பலரும், கப்பல் கட்டுந் தொழிலில் ஊக்கமும், அனுபவமும் பெற்ற தொழிலாளர்கள் பலரும், அத்தொழிலுக்கு வேண்டிய ஏராளமான மரங்களைக் கொடுத்துதவக்கூடிய வியாபாரிகள் பலரும் குறைவின்றி யிருந்தும் கீழே காட்டிய காரணங்களால் ஒவ்வொன்றாக மறையத் தலைப்பட்டன. வெளிநாட்டுத் தொழிற்சாலைகள் நந்நாட்டுத் தொழிற்சாலைகளுடன் போட்டியிட முற்பட்டதும், துரைத்தனத்தார் இந்தியரின் முயற்சிகளை அலக்ஷியம் செய்ததோடு, அதிகாரிகள் சிலர் முட்டுக்கட்டைகள் போட்டதும், நமது இந்தியக் கப்பல் கம்பெனிகளின் பங்காளிகளுக்குப் போதிய அனுபவம் இல்லாமற்போனதும், கவர்ன்மெண்ட் சட்டங்களின் பாதுகாப்பு இல்லாமையும், வெளிநாட்டு துரைத்தனத்தார்கள் தத்தம் நாட்டுக் கப்பல்களின் ஏற்றுமதி இறக்-



குமதி வியாபாரங்களுக்கு அனுகூலமான சுங்க வரிகளை விதித்ததும், அதுபோன்ற வசதிகள் நந்நாட்டில் நமக்குச் செய்துகொள்ள இல்லாமற்போனதும் ஆகிய காரணங்களாலேயே நமது கப்பல் தொழில்கள் ஒடுங்கின என்னலாம்.

நமது நாட்டுக் கப்பல் நடத்தும் கம்பெனிகளில் அனுபவமும், தொழில் பயிற்சியுமில்லாத இந்தியர்கள் அதிகாரிகளாயிருந்தனர். அவர்கள் ஐரோப்பிய நாடுகளில் விலைக்கு வாங்கும் கப்பல்கள் பழையவையானபடியால், அடிக்கடி பழுதுபார்க்க வேண்டியவைகளாயிருந்தன. மேலும் இந்திய வியாபாரிகள் இந்தியக் கப்பல்களில் தங்கள் சரக்குகளை அனுப்புவதற்கில்லாதபடி, வெளிநாட்டுக் கம்பெனிகள் முன்னெச்சரிக்கையோடு செய்துகொண்ட ஒப்பந்தங்களில் சிக்கி விழித்தனர். அப்படி யிருந்தும் இந்திய வியாபாரிகளில் பலர் இரகசியமாகத் தங்கள் சரக்குகளை இந்தியக் கப்பல்களில் அனுப்பிவந்தனர். ஆயினும் அதைக் கவனித்த வெளிநாட்டுக் கப்பற்காரர்கள் கப்பல் விகிதத்தைக் குறைத்தும், இந்நாட்டு வியாபாரிகளுக்கு ஏதோ அதிக அனுகூலங்கள் செய்வதாக ஆசை காட்டியும் பலவாறு இந்தியக் கப்பல்களுடன் போட்டியிட்டு, அவற்றின் அழிவுக்கு வழி தேடினர். ஜப்பான் துரைத்தனத்தார் தங்கள் கப்பல் கம்பெனிகளுக்கு ஆக்கந் தேடும் வகையிலும், தந்நாட்டுக் கப்பல்களுடன் அயல்நாட்டுக் கப்பல்கள் போட்டியிடாதவாறும் போதிய பாதுகாப்புகளைச் சட்டங்களின் மூலமாகச் செய்திருக்கின்றனர். அவ்வாறே சுதந்திரம் பெற்றுள்ள ஒவ்வோரு நாடும் தத்தம் தொழில்களையும், வியாபாரங்களையும் காத்துக்கொண்டு வருகின்றன. அதுபோல் இந்தியாவும் அரசியல் சுதந்திரம் பெறுமாயின் அப்பொழுதே இந்நாட்டுத் தொழில்கள் காக்கப்படுவனவாம். இந்தியா சட்ட சபையில் நம் பிரதிநிதிகள் வாதாடியதின் பயனாய், இந்திய கப்பல் கம்பெனிகளின் நிலைமையையாராய்வதற்கென சின்னாட்களுக்கு முன்—வன் சில வருஷங்களுக்கு முன் துரைத்தனத்தார் ஒரு கமிட்டியை நியமித்தனர். எனினும் துரைத்தனத்தார் இது விஷயத்தில் வேண்டிய கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. எங்கோ இரண்டொரு கப்பல்களில் இந்தியர் ஒரு சிலரை மாணவர்களாக ஏற்றுக் கப்பல் தொழிலில் பயிற்சி கொடுக்க முற்பட்டிருக்கும் அளவுக்கு துரைத்தனத்தாரை நாம் பாராட்ட வேண்டுவதே. சர்வதேச மகாநாட்டின் (League of Nations) நிபந்தனைகளின்படி இந்து தேசமும் பிற தேசங்களைப்போல் கப்பற் படையைக் கொண்டிருக்கலாமென்று இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியா சட்டசபையாரும் கையொப்பம் செய்திருக்கின்றனராம். எனவே காருண்யம் வாய்ந்த பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவுக்குச் சமீபத்தில் வழங்கப்-

# வைக்கம் சத்யாக்கிரஹ நினைவுகள்.

திரு. அய்யாமுத்து அவர்கள்.

(73-வது பக்கத் தொடர்ச்சி.)

போரிலே அடியேனுக்கு மிக விருப்பம். தெருவில் யாராவது நான்கு பேர் சண்டையிட்டால் அருகில் சென்று வேடிக்கை பார்ப்பேன். அடி! அடி! என்று என் இளமைப்போதில் கத்துவேன். வாய்ச் சண்டையிடுவோரை, "கையிருக்க வாய்ச் சண்டை கூடா"தென உற்சாகப் படுத்துவேன். சண்டை பிடிப்போரை யாராவது விலக்க வந்தால் கூடாதெனத் தடுப்பேன். சண்டை பிடித்து நன்கு யுதைபட்டு அழுதுகொண்டு வீடு செல்லும் நொண்டிப் பையனைப் பார்த்துக் குலுங்க நகைத்துக் கேலி செய்வதில் எனக்கு வெகு ஆனந்தம். இத்தகைய துஷ்டனான எனக்கு ஜர்மன் சண்டையும் சென்று பார்க்கவேண்டுமென ஆசை இயற்கையாகவே உண்டாயிற்று. பட்டாளத்தில் சிப்பாயாகச் செல்லவேண்டுமென மும்முறை முயற்சித்தேன். ஆள் வாட்டசாட்டமில்லையெனக் கூறிவிட்டார்கள். கடைசியில் ராணுவக் குமாஸ்தா வேலைக்கு ஆள் சேர்த்தார்கள். அதில் சேர்ந்து 1918-ம் ஆண்டின் மத்தியில் மெசப்பொட்டோமியா சென்றேன். சென்றவிடத்தில் சண்டை காணாமல் ஏமாந்துபோனேன். அடுத்தவாண்டில் சமாதான மேற்பட்டது. இந்தியர் கடல் கடந்து உயிரீந்து பிரித்தானியக் கொடியைக் காத்ததற்குச் சன்மானமாக பாழும் டையர் பாஞ்சால நாட்டில் படுகொலை புரிந்தான். ரௌலட் சட்டம் சூட்டப்பட்டது. காந்தியாரின் ஒத்துழையாப் போர் முரசு பாக்தாத்திலுள்ள என் செவிக் கெட்டிற்று. திரும்பிவர முயன்றேன். நோய் கொண்டதாகப் பாசாங்கு செய்தேன். அன்னை மாண்டதாக அபாண்டமான பொய் கூறினேன். ஒன்றும் பயன் தரவில்லை. பத்திரிகைகள் மூலம் போர் நிகழ்ச்சிகளைப் படித்து மனந் தேறினேன். 1920-ம் ஆண்டி னிறுதியில்தான் இந்தியாவில் இறங்க முடிந்தது.

---

போகும் அரசியல் சீர்திருத்தங்களால் நாட்டின் தொழில்கள் பலவும் வளர்ந்தோங்கி இந்தியா சீரும், சிறப்புமடைந்து, பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் சம அந்தஸ்தையேனும் பெற்று, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு இஃது ஓராணிகலனெனத் திகழும் பேற்றை விரைவில் எய்துமென நம்பி எதிர்பார்ப்போமாக.

---



கூட்டங்களில் சென்று கத்தினேன். யுத்த சன்மானப் பதக்கங்களைத் திருப்பி யனுப்பினேன். கதரைத் தூக்கிக்கொண்டு ஊரூராய்ச் சுத்தினேன். "ஆங்கிலக் கொடி வீழ்க," "வந்தே மாதரம்" என்று தெருவெல்லாம் கத்தித் திரிந்தேன். எதிரியான அரசாங்கத்தார் என்னைப் பொருட்படுத்திச் சண்டைக்கு வரவில்லை. எனக்கு எதிரி யில்லாமல் சண்டை செய்யச் சக்தியுமில்லை. எனவே திகைத்துக் கொண்டிருந்தேன். வெகு நாட்கள் சென்ற பின் என் எண்ணம் ஈடேறிற்று. வைக்கத்துப் போர் முரசு 1924-ம் ஆண்டு ஏப்ரல்மீ என் செவி பற்றிற்று. நள்ளிரவில் கோவையினின்றும் ரயிலேறி அதிகாலையில் எர்ணாகுளத்திலிறங்கிப் படகேறிக் கொச்சி சென்றேன். அங்கு "வைக்கம் சத்தியாக்கிரக காரியாலயம்" ஒன்று ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. அங்கிருந்த தோழர் ஒருவர் என்னோடு படகேறி வைக்கம் வந்தார். இரவு 12 மணிக்கு நாங்கள் ஒரு கரையிலிறங்கினோம். தோழர் முன் செல்ல நான் பின் சென்றேன். ஒரு வீட்டைச் சுற்றிலும் பலர் படுத்துறங்கிக் கொண்டிருந்தனர். யானும் எனது பையைத் தலைக்கு வைத்து மணல் தரை மீது உறங்கலானேன்.

காலையில் ஒருவர் என்னைத் தட்டி எழுப்பினார். கண் விழித்துப் பார்த்தேன். எழுப்பியவர் யார் தெரியுமா? அவர்தான் உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர். முகமலர்ச்சியுடன் "சபாஷ்! எப்பொழுது வந்தாய்? உன்னுடன் யார் வந்தது? எனக்குப் பேச்சுத் துணைக்கு ஆள் இல்லையென இருந்தேன். நீ ஒருத்தன் கிடைத்தாய்" என்று சொல்லி வரவேற்றார். கொஞ்ச நேரத்தில் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு முகாமிற்கு வந்தேன். நாயக்கர் காப்பி சாப்பிடலாம் வாவென அண்டையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு கொட்டகைக்குக் கூட்டிச் சென்றார். சுமார் 50 தொண்டர்கள் வரிசையாக வீற்றிருந்தனர். ஒவ்வொருவர் முன்பாகவும் ஒரு பிளேட் வைக்கப்பட்டிருந்தது. நாங்களிருவரும் ஆளுக்கொரு பிளேட் எடுத்துக்கொண்டு கீழே மணல் தரையில் உட்கார்ந்தோம். "சமையல்" தொண்டர்கள் சுடச்சுட அரிசிக் கஞ்சியை எங்கள் கோப்பையில் ஊற்றினார்கள். "பார்த்தாயா! வைக்கத்துக் காப்பி!" என்றார் பெரியார். ஏழை, பணக்காரன், உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற பேத உணர்ச்சி யற்று எல்லோரும் சுகமாக வீற்றிருந்து ஓரேவித ஆகாரத்தைச் சாப்பிடும் காட்சி என்னைத் தூக்கி வாரி ஆனந்தக்கடலில் அழுத்திவிட்டது.

உடனே போர்முனைக்குச் சென்றேன். அங்கு நான்கு தொண்டர்கள் நடுத் தெருவில் நின்று பதிகம் பாடிக்கொண்டிருந்

தார்கள். அவர்கட்கு எதிர்ப்புரம் இரு சேவகர்கள் நின்றுகொண்
டிருந்தனர். "நான் உயர்ந்த சாதிக்காரன" ஆகையால் அவர்களை
விலக்கிக்கொண்டு தங்கு தடையின்றித் தெருவின் மற்றொரு
கோடிக்குச் சென்றேன். ஆங்கும் நான்கு தொண்டர்கள் நின்று
கொண்டிருந்தனர். அத் தெரு வைக்கம் கோவிலைச் சுற்றிச்
செல்வதாகும். பல வியாபாரிகள் ஆங்கு சிறு கடைகள் வைத்துக்
கொண்டிருந்தனர். கிறிஸ்தவர், முகம்மதியர் போன்ற இந்திய
ரும், ஆங்கிலேயர், பாதிரிகள் போன்ற அந்நியரும் தங்கு தடை
யின்றி அப் பாதை வழியே செல்வதில் தடையில்லை. சில பார்ப்
பன அர்ச்சகர்கள் பாதையின் தென் கோடியில் குடியிருந்தனர்.
இவர்களுடைய குழந்தைகள் வாசலருகே மலஜலங் கழிக்கக்
கண்டேன். அவற்றை நாய்களும், பன்றிகளும் சுத்தி செய்து
கொண்டிருந்தன. ஹிந்துக்கள் எனப்படும் மானிடரில் சிலர்
அப் பாதை வழியே சென்றால், அப் பாதை யோரத்தில் அமைந்
துள்ள கோவில் "சுவாமி"க்குக் கேடு விளையும் என்று அத்தேச
வைதீகர்கள் ஆர்பாட்டம் செய்து வந்தது என்னால் அறியமுடியாத
மர்மமா யிருந்தது.

அன்று பகல் ராமசாமியார் அயலூருக்குப் பிரசார நிமித்தம்
சென்றுவிட்டார். அன்றாடம் மாலையில் பொதுக் கூட்டம் நடை
பெறுவது வைக்கத்தில் வழக்கமாயிருந்தது. அன்று மாலைக் கூட்
டத்தில் யான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். கோவை
யில் நடைபெற்ற "மஹாஜன நேசன்" என்ற பத்திரிகாசிரியருக்கு
யான் உதவி செய்துகொண் டிருந்ததுண்டு. இதை நாயக்கர் மூல
மாக அவர்கள் கேள்விப்பட் டிருக்கிறார்கள். எனவே என்னை ஒரு
"பத்திராதிபர்" என்று கூட்டத்தில் அறிமுகம் செய்து விட்டார்
கள். என்பாடு கஷ்டமாகிவிட்டது. எப்படிப் பேசி நமது "பத்தி
ராதிபர்" பெயருக்கு இழுக்கு வராமற் காப்பதெனத் திகைத்
தேன். எனினும் தைரியமாய் எழுந்து நின்றேன். "பத்திராதி
பர்களுக்கு எழுதத்தான் தெரியுமே யொழிய பேசத் தெரியாது.
எனவே நான் நன்றாகப் பேச முடியாவிட்டால் நான் பத்திராதிபர்
வேலைக்கு லாயக்கல்ல வென்று நீங்கள் சொல்லக்கூடா தென்று"
கேட்டுக்கொண்டேன். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.
எனக்கு அவர்கள் சிரிப்பு சற்று உற்சாகமளித்தது. ஆனால் பேச்சு
சற்று தடுமாட்டமாகவே யிருந்தது. எனவே கொஞ்சம் 'சுதியை'
சரிப்படுத்துவது போன்று முதலில் பாரதியின் "வந்தே மாதரம்"
பாட ஆரம்பித்தேன். "அந்நியர் வந்து புகலென்ன நீதி" என்ற
வரியைப் பாடும்போது என் முகம் கடுகடுத்தது. வந்தனைப்பாட்டை
வீராவேசப் பாட்டாகப் பாடி முடித்தேன். எல்லோரும் கைதட்டி
ஆர்ப்பரித்தார்கள். பேச்சைவிடப் பாட்டே நல்லதென்று அடுத்த



படியாகப் பாரதியின் "விடுதலை" என்ற பாட்டைக் கத்தினேன்.
கத்துவதில் எனக்குக் கழுதையும் நிகரல்ல. அதைப் பாடி முடிந்
ததும் ஏதோ பேசியாக வேண்டுமல்லவா? ஏதேதோ பேசினேன்.
பேச்சிடையே ஒரு கேள்வி போட்டேன். "ஈழவர், புலையர்,
பறையர் முதலானோர் இப் பாதை வழி செல்லக் கூடாதெனச்
சட்டம் பேசுகிறார்கள், ஏன் என்று கேட்டால் அவர்கள் "சண்
டாளர்கள்" என்று சொல்லுகிறார்கள். சண்டாளர் என்போர் யார்?
கொலை, களவு, பொய், கள், காமமாகிய பஞ்சமா பாதகங்களைச்
செய்வோரே சண்டாளர்கள். கொலை செய்பவர்களைக் கழுவேற்றி
வருகிறார்கள் அல்லது தீவாந்திர சிட்சை விதித்து வருகிறார்கள்.
கொலை செய்வது ஒரு தனித்த சாதியின் தொழிலல்ல. எல்லாச்
சாதியினும் செய்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தின் சட்டப்
படி தண்டிக்கப்படுகிறார்கள். அவ்வாறே களவும், பொய்யும்,
அடுத்தபடியாகக் கள். ஈழவர்களிற் சிலர் கள் இறக்குகிறார்கள்.
அதைக் கடைகளில் விற்கிறார்கள். குடிக்கவும் செய்கிறார்கள்.
வாஸ்தவமே! எல்லோரும் குடிப்பதில்லை. சிலர்தான் செய்கிறார்
கள், அச் சிலரைச் சண்டாளர்கள் என்று கூறி இப் பாதை
வழியே செல்ல விடாது தடுத்து விடுவதை நான் ஆமோதிக்கி
றேன். ஆனால் நான் நியாயப்படி ஒன்று கேட்கிறேன். யாரும்
கோபித்துக்கொள்ளாதீர்கள். கள் இறக்குவது சண்டாளத்தனம்;
குடிப்பது சண்டாளத்தனம்; குடிக்கவைப்பது சண்டாளத்தன
மல்லவா? உங்கள் அரசர் கள்ளுக் கடைகளை ஏலத்தில் விடுத்து
எல்லோரையும் குடிக்கச் செய்கிறாரே, அவர் சண்டாளரல்லவா?
கள்ளின் மீது வரி விதித்துப் பணம் பெறுகிறாரே, அது சண்டா
ளத்துவமல்லவா? அவர் மட்டும் இப் பாதை வழியே எப்படிச்
செல்ல அனுமதிக்க முடியும்? எனவே அவரும் செல்லக்கூடாது.
மதுபான இலாகா உத்தியோகஸ்தர் எல்லோரும் "சண்டாளர்."
அவர்களும் இப் பாதை வழியே செல்லக்கூடாது என்று சட்டம்
போடட்டும். நாம் சத்யாகிரகத்தை நிறுத்திவிடுவோம்" என்
றேன். அங்கு குழுமி யிருந்த சுமார் இரண்டாயிரம் ஜனங்களும்
இருபது நிமிஷம் ஓயாது கைதட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

மூன்றாம் நாள் காலையில் திருவாங்கூர் தினசரிகளைத் தொண்
டர்கள் ஆவலோடு படித்துக்கொண் டிருந்தனர். ஒருவர் என்னைக்
கூப்பிட்டு "ஹே! கவுண்டர்! நிங்களுடே பிரசங்கம் வந்திருக்கின்னு.
சில பத்திரங்கள் நீங்கள் பிரசங்கத்தே ஆட்சேபிச்சு எழுதியிருக்
கின்னு" என்றார். ஒரு பத்திரிகை எனது பிரசங்கத்தைக் குறித்து
ஒரு தலையங்கம் எழுதியிருந்தது. அதில் "திருவிதாங்கூர் மகா
ராஜாவாகிய பொன்னுத்தம்பிரானைப் பற்றி அவதூறாக யாரும்,
எங்கும், எக் காலத்தும் பேசியதாக இந் நாட்டுச் சரித்திரங்களிலு

யில்லை. நமது அநுபவ வாழ்விலுமில்லை. அப்படியிருக்க பாண்டி நாட்டிலிருந்துவந்த ஒருவன், தன்னைச் 'சத்தியாகிரகி' என்று கூறிக் கொண்டு, நமது பொன்னுத் திருமேனியைச் சண்டாளன் என்று கூறத் துணிந்தது வெறுக்கத் தக்கதாகும். இத்தகைய பேச்சாளர்களை உடனே நாடு கடத்த வேண்டும். இத்தகைய பேச்சுக்களால் வைக்கம் சத்யாகிரகம் வெற்றிபெற முடியாது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

போலீஸ் கமிஷனர் பிட் என்ற ஆங்கில உத்தியோகஸ்தர், எனது பிரசங்கத்தை நேரில் கேட்டிருந்தாராம். அவர் கூட்டத்தில் இருந்தாராம். அவர் கூட்டத்தை விட்டுச் செல்லும்போது தன்னருகிலிருந்த இன்ஸ்பெக்டரிடம் (This Fellow is a "Fire-Brand," we must book him soon") "இந்த ஆள் ஒரு நெருப்பு, இவனைச் சீக்கிரம் ஒட்ட வேண்டும்" என்று சொல்லிப் போனாராம். இரண்டுநாள் கழித்து முகாமிற்குத் திரும்பிய நாயக்கர், "நீ என்ன பெரிய அமளி செய்துவிட்டாய்! பத்திரிகைகளெல்லாம் உன் பிரசங்கத்தையே பக்கம் பக்கமாய்ப் பிரசுரித்துவிட்டன. நான் சென்றிருந்த ஊர் ஜனங்களெல்லாம் "இந்தக் கவுண்டர் யார்? இங்கே அனுப்புங்கள் என்று சொல்லுகிறார்கள்" என்றார். கடிதத்துக்கு மேல் கடிதங்களும் வந்தன. உடனே நாங்கள் ஒரு பிரசாரக் கூட்டம் புறப்பட்டோம். என்னோடு சிட்டேடத்துச் சங்குப் பிள்ளை, சுவாமி சத்யவிரதன், கோழிக்கூட்டு வேலாயுதன், கிருஷ்ண பிள்ளை என நால்வர் வந்தனர் இந் நால்வரில் முற்கூறிய எனதருமைத் தோழர் இருவர் தற்சமயம் உயிருடன் இல்லை. சத்தியாகிரகம் முடியுமுன்னரே சிட்டேடத்து சங்குப் பிள்ளை காலகதியானார். சத்யாகிரகம் முடிந்த சில மாதங்களில் சுவாமி சத்யவிரதன் முடிவெய்தினார். நாங்கள் ஆலப்புழை, கொல்லம், கோணி, கொட்டாரக்கரை முதலிய பிரதேசங்களில் பல வாரங்கள் சுற்றுப்பிரயாணம் செய்து பலமான பிரசாரம் செய்தோம். படகிலும், ரயிலிலும், கட்டை வண்டியிலும், கால் நடையிலும் நூற்றுக் கணக்கான மைல் சுற்றிவிட்டு, சுமார் ஆயிரம் ரூபாய் நன்கொடையுடனும், நாலைந்து 144 தடை யுத்திரவுகளுடனும் வைக்கம் சேர்ந்தோம்.

இரண்டொரு நாள் தாமதித்து ராமசாமியாரும், அடியேனும், சிட்டேடத்துச் சங்குப் பிள்ளையும் டாக்டர் எம். பெருமாள் நாயுடு அவர்களுடைய மோட்டாரில் சுற்றுப் பிரயாணம் புறப்பட்டோம். டாக்டர். எங்கட்குத் தலைவராகவும், வழிகாட்டியாகவும், டிரைவராகவும் விளங்கினார். வழி நெடுகப் பிரசங்கமாரிகள் பொழிந்து கொண்டே நாகர்கோவில் சென்றோம். ஒரே தினத்தில் ஏழு



ஊர்களில் ஏழு கூட்டங்களில் பிரசங்கம் செய்திருக்கிறோம். அன்றைக் கடைசிக் கூட்டம் இரவு 10 முதல் 12 மணிவரை ஒரு மசூதியில் நடைபெற்றது. சகல வகுப்பினரும், மதஸ்தர்களும் எங்களுக்கு உற்சாகமளித்தார்கள். வழி யெங்கும், தோரணங்கள், மேளங்கள், வாத்யங்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்களிற் பார்ப்பனரல்லாதவர்கள் எங்களிடம் அநுதாப முடையவர்களாகவே காணப்பட்டார்கள். நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் திரும்பினோம். அன்று மாலை சிராயிங்கல் என்ற விடத்தில் பொதுக் கூட்டம் ஏற்பாடாயிருந்தது. கூட்டத்திற்குப் புறப்பட மோட்டார் ஏறுந் தருணத்தில் எங்கள் நால்வருக்கும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நாங்கள் உத்திரவைப் பெற்றுக்கொண்டு மோட்டார் ஏறினோம். உத்திரவை நால்வரும் மீறுவதா, யார் மீறுவது என்று விவாதிக்கப்பட்டு, அடியேன் மீறுவதென முடிவு செய்து கொண்டோம்.

மாலை 5 மணிக்குச் சிராயிங்கல் போய்ச் சேர்ந்தோம். கூட்டம் ஒரு மைதானத்தில் ஏற்பாடாயிருந்தது. சுமார் ஐம்பது கிராமங்களிலிருந்து ஓராயிரத்துக்கு மேற்பட்ட ஆண் பெண்கள் கூடியிருந்தனர். ஒரு மோட்டார் பஸ்ஸில் 6 சேவகர்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும், போலீஸ் சூப்ரண்டு ஒருவரும் முன்னெச்சரிக்கையாக வந்திருந்தார்கள். வாரண்டில் சட்டப்படி கையெழுத்திட ஒரு மாஜிஸ்ட்ரேட்டும் பிரசன்னமா யிருந்தார். ஒரு ஐகோர்ட் ஜட்ஜி, வேலியின் பின்புறம் ஒளிந்திருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு "ஈழவ" வாலிப வக்கீல் (அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை) எழுந்து, கீழ்க்கண்டவாறு பேசினார்: "இக் கூட்டத்திற்கு யார் தலைமை வகிக்க ஏற்பாடாயிருந்ததோ அவருக்கும், அவருடைய சகாக்களுக்கும் சர்க்கார் தடை யுத்திரவு பிறப்பித்து விட்டார்கள். எனவே இக் கூட்டத்திற்கு யானே தலைமை வகிக்கிறேன். நீங்கள் எல்லோரும் இருந்த இடம்விட்டுப் பெயராமல் அமைதியாக வீற்றிருப்பதாக உறுதி கூறினால், ஸ்ரீமான் கவுண்டர் தடை யுத்தரவை மீறிப் பேசுவார். அவரைப் போலீசார் கைதி செய்வார்கள். ஆனால் நீங்கள் யாதொரு ஆர்ப்பாட்டமும் செய்யாது கூட்டத்தை யான் கலைக்கும்வரையில் வீற்றிருக்க வேண்டும். உங்களுடைய சம்மதத்தைத் தெரிவிக்கு முறையில் எல்லோரும் வந்தே மாதரம் என்று சொல்லுங்கள்" என்று கூறி முடிக்குமுன், ஐயாயிரம் ஜனங்களும் ஏக காலத்தில் வந்தே மாதரம் எனக் கூவிய சப்தம் வான லோகத்தைப் பிளந்து, "பிதுர்" லோகத்தைத் தாண்டி ஏழு லோகத்தையும் ஆட்டுவது போலிருந்தது. அடியேன் சாவதானமாக எழுந்து மேஜைமீதேறி, "திருவிதாங்கூர் மஹா ராஜாவுக்கு ஜே!" என்றேன். எல்லோரும்

ஏக காலத்தில் சிரித்தார்கள். உடனே சப் இன்ஸ்பெக்டர் என்னை யணுகி "உங்களுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதை மீறிப் பேசக்கூடாது. பேசினால் "அரஸ்ட்" செய்வேன் என்றார். "சட்டத்தை மீறிப் பேசவே உத்தேசம்" என்றேன். உடனே "உங்களை இதோ அரஸ்ட்டு செய்யும் வாரண்டு வைத்திருக்கிறேன். என்று வாரண்டைக் காட்டிக் கையைப் பிடித்தார். "சரி செல்லுங்கள்" என்று மோட்டார் பஸ்ஸில் தகுந்த போலீஸ் பாதுகாப்பு மரியாதைகளுடன், திருவனந்தபுரம் "லாக்கப்புக்கு" கொண்டுவரப்பட்டேன். மூன்றும் நாள் மாஜிஸ்ட்ரேட் மும்பது நாள் கடின காவல் தண்டனையும், பதினைந்து ரூபாய் அபராதமும் விதித்திருப்பதாகவும், அபராதம் செலுத்தத் தவறினால் மற்றொரு வாரம் கடின காவல் என்றும் தீர்ப்பளித்தார்.

திருவனந்தபுரம் சென்டரல் ஜெயில் நகரத்திலிருந்து இரண்டு மைலுக்கப்பால் ஒரு மேட்டில் கட்டப்பட்டுள்ளது. அதன் உயர்ந்த மதிலுக்கு வெளிப்புறத்தில் சந்தன மரங்கள் பயிரிடப்பட்டிருந்தன. ஜெயிலின் உட்புறத்தில் மா, பலா முதலிய மரங்களும், பூச்செடிகளும் ஏராளமாயிருந்தன. ஜெயில மாடியில் முதற் சடங்குகள் நிறைவேறிய பின்னர் கைதி உடை தரித்து, குரங்குக் குல்லாய் மாட்டிக்கொண்டு உட்புரம் சென்றேன். முதல் "பிளாக்கில்" திரு. ஜ்யார்ஜ் ஜோசப் கோஷ்டியார் என்னை சந்தோஷ ஆரவாரத்தோடு வரவேற்றனர். ஆனால் என்னை அவர்களோடு வைக்கவில்லை. அவர்கள் அரசாங்க முதல்தரக் கைதிகள். சொந்த உடை, சொந்த சமையல், பத்திரிகை, படுக்கை முதலிய "ராஜ போகத்துடன்" இருந்தார்கள். அடியேனது காலில் இருப்புக் காப்பு மாட்டப்பட்டது. என்னை ஒரு தனி அறையில் அடைத்தார்கள். கைதிகள் யாரும் என்னுடன் பேசக்கூடாதென கண்டிப்பான உத்திரவிருந்தது. எனினும் அவர்கள் அன்போடும் ஆவலோடும் என்னிடம் பேசினர். ஜெயில் சூப்ரண்டு போத்தன் என்பாரும், ஜெய்லர் ராமகிருஷ்ண அய்யரும் என்னிடம் அன்பாகவே நடந்துகொண்டார்கள். அவர்கள் என்னிடம் எப்போது பேசினாலும் "மிஸ்டர் கவுண்டர்" என்று மரியாதையுடன் அழைத்தார்கள். படிப்பதற்கு சில புஸ்தகங்களும் ஒரு விளக்கும் கொடுத்து உதவினார்கள். வார்டர்களுடைய அன்பினால் சில தினங்களில் மலையாளம் படிப்பதற்குக் கற்றுக்கொண்டேன். காலையில் கஞ்சி, மத்யானம் சாப்பாடு, மாலை சாப்பாடு எல்லாம் திருப்திகரமாகவே இருந்தது. சில சமயங்களில் பாசிப் பயரும் "மரச்சீனி" என்ற மரவள்ளிக் கிழங்கும் வேகவைத்துக் கொடுப்பார்கள். சாப்பிடுவதற்கு அற்புதமாயிருக்கும். ஜமுக்காளம் நெசவும் பழகிக் கொண்டேன். நாளொன்றுக்கு $4\frac{1}{2}$ அடி கணக்காக நெய்துவிடுவேன்.



"அவ்வளவு நெய்ய வேண்டாம். எங்களையும் அப்படியே நெசவு செய்யுமாறு இம்சிப்பார்கள். நாங்கள் 3 அடிதான் நெய்வது" என்று இதர கைதிகள் எனக்குப் போதிப்பார்கள். நான் அவர்களைப் பொருட்படுத்தாமல் சில சமயம் 5 அடியும் நெய்துவிடுவேன். எனது சாமான்களை யெல்லாம் 13—8—0-க்கு ஏலம் போட்டு அபராதத் தொகைக்கு ஈடு செய்து கொண்டார்கள். பழைய சப்பாத்தையும் ஏலம் போட்டுவிட்டார்கள். திருவிதாங்கூர் அரசாங்கத்துக்கு தரித்திரம் அதிகம்போலும்! பாக்கியுள்ள 1—8—0 ரூபாயுக்கு ஒரு நாள் அதிகமாக வைத்திருந்து 32-ம் நாள் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். பிரிட்டிஷ் ஜெயில் வாழ்க்கையுடன் திருவனந்தபுரம் ஜெயில் வாழ்வை ஒப்பிட்டால் பிரிட்டிஷ் ஜெயில்களை "நரக"மாகவும், திருவனந்தபுரம் ஜெயில் "சுவர்க்க"மாகவும் கூசாது சொல்லலாம்.

"சுவர்க்க வாசல்" தாண்டியதும் போலீஸ் இன்ஸ்பெக்டர் தயாராகக் காத்திருந்தார். "என்ன சேதி" யென்றேன். 144 கொடுத்தார். சலாம் போட்டு வாங்கிக்கொண்டு தெருவிற்கு வந்தேன். நாலைந்து மோட்டாரும் திரளான ஜனங்களுமிருக்கக் கண்டேன். யாராவது பெரிய மனுஷரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ என்று எண்ணிக்கொண்டே ஒருபுரமாய் ஒதுங்கிச் சென்றேன். உடனே ஒருவர் என்னைக் கும்பிட்டு மாலையிட்டார். அவரைத் தொடர்ந்து ஐந்தாறு மாலைகள் விழ, ஒருவர் என் கரத்தைப்பற்றி மோட்டாரில் உட்காருமாறு சொல்ல, என்னைத் தூக்கி வாரிப் போட்டாப்போல் இருந்தது. இவ்வளவு மரியாதையை நான் எப்போதுங் கண்டதில்லை. உடனே எனக்கு அநேகர் அறிமுகம் செய்யப்பட்டார்கள். அதில் ஐந்தாறு வக்கீல்கள்! என்னையே மறந்து மோட்டார் சவாரி செய்தேன். மோட்டார் மெள்ளவே வந்தது. முன் பின் ஜனத்திரள்; கடைத் தெரு வந்ததும் கடைக்காரர்கள் ஆளுக்கொரு மாலை போட்டு என்னைச் சமாதி செய்துவிட்டார்கள்.

அன்று மாலை பொதுக் கூட்டம் நடைபெற்றது. யான் பேசவில்லை. எனது மாலைகள் ஏலமிடப்பட்டன. சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அன்று திருவனந்தபுரத்திலிருந்தார். சிரயங்கல் ஆசாமிகள் பலர் கூட்டமாக என்னை யணுகித் தங்களூருக்கு வருமாறு கேட்டார்கள். நான் தலைவர் சி. ரா. வைக் கண்டு கேட்குமாறு கூறினேன். அவர் "அய்யாமுத்துக்கு மறுபடியும் தடையுத்திரவு கொடுத்திருக்கிறார்கள். அவர் உங்கள் ஊரில் பேசினால் மறுபடி அரஸ்ட்டு செய்துவிடுவார்கள். அவரை மறுபடியும் ஜெயிலுக்கனுப்புவதில் என்ன பிரயோஜனம்? வைக்கத்துக்கு அவர் உடனே செல்ல வேண்டும். அங்கிருந்த திரு. ராமநாதன் தமதூருக்குப் போய்விட்

டார். அங்கு முகாமைக் கவனிக்க இவர் சென்றாகவேண்டும்" என்றார். அவர்கள் முகாமைக் கவனிக்க மதுரை நாராயணன் வந்திருப்பதாகக் கேள்வி. இவர் மற்றொரு முறை பேசி அரஸ்டானால் இயக்கம் அதனால் வலுப்பெறும்; அனுப்புங்கள்" என்றார்கள். "அப்படியானால் ஆயிரம் ரூபாய் கொடுங்கள் அனுப்புகிறேன்" என்றார் C. R. அவர்கள். "300 ரூபாய் சேகரித்து வைத்திருக்கிறோம். அதை நாளையே அனுப்பிவிடுகிறோம்" என்றார்கள். சி. ஆர். முடியாது என்று கூறி விட்டார்.

இரண்டொரு நாள் அக்கம்பக்கத்தில் சி. ஆர். சுற்றுப்பிரயாணம் செய்தார். அவருடன் இருந்தேன். பின்னர் அவர் என்னை வைக்கத்துக்குப் போமாறு கூறிவிட்டு ஊர் சென்றுவிட்டார். சிராயிங்கல் அன்பர்கள் ஆசையை மறுக்க என்னால் கூடவில்லை. சிராயிங்கலுக்கு அடுத்தாப்போல் ஒரு சிறிய தீவு இருக்கிறது. அதன் பெயர் இப்போது ஞாபகத்துக்கு வரவில்லை. அது திருவாங்கூரில் இருந்தாலும் பிரிட்டிஷாருக்குச் சொந்தம். அங்கே திருவாங்கூர் சட்டம் செல்லாது. அங்கு இரண்டொரு நாள் தங்கி பிரசங்கம் செய்துவிட்டுப் போமாறு சிராயிங்கல் அன்பர்கள் கூறினார்கள். யானும் இசைந்து அங்கு சென்றேன். அங்கு டச்சுக்காரர்கள் கட்டிய ஒரு பழங் கோட்டை யிருந்தது. சுமார் ஐம்பது வீடுகளுக் கதிகமில்லை. எல்லோரும் மீன் பிடிப்பவர்கள். மாதா கோவில் ஒன்றிருந்தது. பகவதி கோயில் ஒன்று மிருந்தது. அடியேன் பகவதி கோயிலில் முகாம் செய்தேன். இரண்டு மாலைப் போதில் கூட்டம் நடந்தது. சுற்று வட்டாரத்திலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆவலுடன் வந்து சென்றனர். பொதுக்கூட்டத்தில் பணமும் வசூல்செய்யப்பட்டது. மூன்றும் நாள் பண முடிப்புடன் வைக்கம் பிரயாணப்பட்டேன். வைக்கம் முகாம் முன்மாதிரி யிருக்கவில்லை. அது ஒரு பெரிய ராணுவ முகாம் மாதிரி யிருந்தது. பெரிய பெரிய கொட்டகைகள் அமைக்கப்பட்டிருந்தன. நூற்றுக் கணக்கான தொண்டர்க ளிருந்தனர். திருமதி நாகம்மாள் தலைமையில் பெண் தொண்டர்களு மிருந்தனர். முகாம் செலவு தினமொன்றுக்கு நூறு ரூபாய் என்று தெரிய வந்தது. நாயக்கர் அடுத்ததொரு கிராமத்தில் போலீஸ் "லாக்கப்"பில் வைக்கப்பட்டிருந்தார். அவரைப் படகேறிச் சென்று கண்டேன். "பணம் அவஸ்யமாயிருப்பதால் நீ தமிழ்நாடு சென்று வசூல்செய்து அனுப்பிக்கொண்டிரு" என்று ஆக்ஞாபித்தார். அவர் சொற்படியே கோவை, திருப்பூர், சேலம் முதலிய ஊர்கள் சென்று பணம் வசூலித்து அனுப்பினேன். பின்னர் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தமது புதுப்பாளையம் காந்தி ஆசிரமக் காரியாதிகளைச் சென்று கவனித்திருக்குமாறு உத்திரவனுப்பினார். அவர் சொற்படி புதுப்பாளையம் சென்றேன்.



திருவிதாங்கூர் மகாராஜா காலமானார். அவருக்குப் பின் ராணி சேதுலட்சுமி பாய் அரசுரிமை பெற்றார். மகாத்மா காந்தியடிகள் திருவாங்கூர் சென்று வந்தார். ராணியின் பட்டாபிஷேக தினத்தன்று வைக்கம் சத்யாக்கிரக கைதிகள் விடுதலை பெற்றனர். ராணி ஒருவாறு சமரச முடிவேற்படுத்தி, வைக்கம் சத்யாச்கிரகப் போரை ஒருவாறு வெற்றிபெறச் செய்தனர்.

எனது சத்யாக்கிரக நினைவுகளைப் பூர்த்தியாக்கு முன்னர் சில முக்கியஸ்தர்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்காது விட முடியவில்லை. அவர்களில் நாகர்கோவில் காந்திதாஸ் முத்துசாமி என்பார் ஒருவர். அவர் தனது மனைவியுடனும், தாயாருடனும் ஆதிமுதல் இறுதிவரை ஊக்கம் தளராது தொண்டாற்றினார். அவர் முகாம் தொண்டர்களுக்கு சதா நகைப்பையும் ஊக்கத்தையும் விளைவித்த வண்ணமாயிருந்தார். உண்மையில் அவரே வைக்கம் வீரர் எனப் போற்றற் குரியவர். மற்றவர் கோவிந்தன் சாணார் என்பவராகும். அவரும் தமது குடும்பத்துடன் வந்திருந்து பொறுப்புடன் காரியாதிகளை நடத்தி வந்தார். வைக்கத்தில் வெள்ளப் பெருக் கேற்பட்டபோது கோவிந்தன் சாணார் தமது ஏக புதல்வனைப் பறிகொடுத்தார். அடுத்தவர் பாலக்காடு சபரி ஆஸ்ரமம் டி. ஆர். கிருஷ்ணசாமி அய்யரும் அவருடைய பத்தினியுமாகும். மற்றவர் நமது திரு. எஸ், ராமநாதன். அவர் தொண்டர்களுக்கு ஒழுக்கம் கற்பித்து அவர்களுள் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தினார். மதுரை திரு. என். நாராயணன், எம்.ஏ., பி.எல். தமது அருமைத் துணைவியுடன் கேம்பைத் திறம்பட நடத்தினார். அவரது தூய குணத்தையும், தளரா ஊக்கத்தையும், தியாக உணர்வையும் அவரது எதிரிகளும் கண்டு வியந்து போற்றினர். வைக்கம் சத்யாக்கிரகத்தில் சம்பந்தப்பட்டதற்காக சமூக பகிஷ்காரம் முதலிய கொடிய துன்பத்துக்காளானவர் குரூர் நம்பூதிரிபாட் என்பவராகும். சாத்துக்குடி நாயர், வக்கீல் குஞ்சுகிருஷ்ணபிள்ளை, சங்கனாசேரி பரமேஸ்வரம் பிள்ளை, நாகர்கோவில் சிதம்பரம் பிள்ளை முதலானோர் அதிக சிரத்தை காட்டினார்கள். மற்றும் எண்ணிறந்த தோழர்களின் பெயரை விரிவஞ்சிக் குறிப்பிடாது விடுகிறேன். "சமதர்ஸனி" பத்திராசிரியர் பாலகிருஷ்ணபிள்ளை தமது பத்திரிகையை சத்யாக்கிரகத்துக்கே அர்ப்பணமாக்கிவிட்டார். எல்லோருக்கும் மேலாக காலஞ்சென்ற டி. கே. மாதவன் வைக்கம் சத்யாக்கிரகத்தின் உயிர்நாடியாயிருந்தார்.

சத்யாக்கிரகம் வாழ்க!

# தமிழர் மணம்.

பண்டித திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்.

“தமிழர் மணம்” என்னுந் தலையங்கம் எழுதுவான் புகு முன்னர், எனது தமிழர் “பாரதி” ஆசிரியர் துணையுள்ளமைக்கு மகிழ்கின்றேன். அத் துணையானே இத் தமிழர் மணம் தமிழர் மனத்தில் மணம் பெறும். ஆகையால் தமிழர் யார்? மணம் யாது? என்னும் வினாக்களை முதற்கண் விடுப்பாம்.

இதுகாலை, தமிழர் யாவர்? என்று வரையறை செய்து, இன்னார் தமிழர்; இன்னார் அல்லர் என்று காட்டுவதற்கான காரணங்களைக் காண்கிலம். பரந்த பரத கண்டத்தில் பண்டுதொட்டின்றுகாறும் வாழ்ந்துவரும் மக்கள் கூட்டத்தாருள், தலை சிறந்தோர் தமிழரும், ஆரியரும் ஆவர். தமிழரைப்பற்றிய அகன்ற ஆராய்ச்சிகள் பலப்பல படி, பண்டிதர்களால் பகரப்பெற்றுள்ளன. இதுகாலை, தமிழர் ஆரியங் கற்கின்றனர்; கழறுகின்றனர். ஆரியரும் தமிழைப் படிக்கின்றனர்; பகர்கின்றனர். இவ்விருவரும் ஒருங்கே ஆங்கிலம் கற்கின்றனர். அம்ம! தாய் மொழி மறந்து ஆங்கிலங் கற்கின்றனர். ஈண்டு தமிழர் ஆரியர் என்பது அவ்வவ் மொழிகளைப் பயின்று அவ்வவ் நாடுகளில் வாழ்கின்றவரைப் பற்றியதேயாம். சுருங்கக் கூறின் தமிழைத் தாய் மொழியாக, நாட்டு மொழியாக, வீட்டு மொழியாகக் கொண்டோர் அனைவரும் தமிழரேயாவர்.

மணம் என்பது வாசனை, கலியாணம் என்னும் பொருள்களில் வழங்குகின்றது. எனினும் மணம் என்பதற்கு வாசனை, நாற்றம் என்னும் பொருள்களே பொருந்துவன. மலர் விரியின் மணம் கமழும். கிழவர் மனம் விரியின் காதல் மணம் தோன்றும்—கிழவர் = உரியோர்—மன மலரில் அரும்பும் மணத்தினையே—காதலையே—தமிழர் மணம் என்றனர். இக்காதல் மணத்தைப்பற்றிப் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரந்து பகரப்பட்டுள்ளன. தமிழிலக்கண இலக்கியங்களில் ஈடும், எடுப்பும் இன்றி தலை சிறந்து நிற்கின்றன—நிற்பன தொல்காப்பியமும் திருக்குறளுமேயாம். சங்க நூல்களனைத்தும் நமக்குச் சாலச் சான்றுவனவே. காமம் காதல் என்பன ஒரு பொருளிலேயே சங்க விலக்கியங்கள் விரவி விளம்புகின்றன. காமம்



கடியப்படுவதென்றும், வெறுக்கப்படுவதென்றும் பிற்கால இலக்கியத்தார் பேசினர். காமம் என்னும் மொழி தலைவன் தலைவியர்க்குள் வழங்குங்கால், முதற்கண் நிகழும் ஆசை என்னும் பொருளில் சங்க இலக்கியங்கள் சாற்றுகின்றன. திருக்குறளில் காமத்துப் பாலில் “காதற் சிறப்புரைத்தல்” என்னும் அதிகாரத்தை வைத்துள்ள அமைப்பை ஆராய்வார்க்கு உண்மை புலனாகும். இவ்வுண்மையினை ஆராயாதே “காதல் கவறாடல்” எனக் காதலைக் கடியப்படுவதாக வைத்துக் கூறிப் புகழேந்தியார் புரைபோனமைக்குப் புழுங்குகின்றேம்! பழந்தமிழர் காதலை காட்சியாகக் கண்டனர். கடவுளாகக் காட்டினர்.

இம்மணம் இருவகையன:—ஒன்று தமிழர் மணம்; ஒன்று ஆரியர் மணம். இவ்விரண்டிற்கும் இரண்டு எடுத்துக்காட்டுகளை இரு பெருங் காப்பியங்களினின்று காட்டுவம். கண்களிரண்டும் வெவ்வேறாகக் காணப்படினும் அவ்விரண்டும் ஒன்றையே குறிக்கொண்டு நோக்குதல்போல இவ்விரு காப்பியங்களும் வெவ்வேறு மொழியில் இயம்பப்பெறினும் அவ்விரண்டும் குறிக்கொண்டு கூறுவன அவ்வொரு பொருளையேயாம். அவ்வொரு பொருளாவது:—

“மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம்,” என்று கவிச் சக்கரவர்த்தி களிப்புடன்

கழறியதாகும்.

வடமொழிப் புலவரான வான்மீகியார் ஸ்ரீ ராமனுக்கும் பிராட்டிக்கும் திருமண நிகழ்ச்சி கூறுமிடத்து, ஸ்ரீ ராமனும் சீதையும் திருமணத்திற்கு முன்னர் இருவருங் கண்டு காதலுற்றதாகச் சொல்லவில்லை. சீதையைத் திருமணம் செய்வோர் வில்லை வளைக்கவேண்டுமென்னும் நியதியைக் கூறும் வான்மீகியார், வில்லை வளைப்பதற்கு முன் காதலரிருவரும் கண்டு கருத்தொற்றுமையுறல் வேண்டுமென்னும் காதற் சிறப்பைக் கருதினாரல்லர்; காதல் அமிழ்தம் பருகினாருமல்லர்.

செந்தமிழ்ச் செல்வர் கம்பநாடர் கழறுவது வான்மீகியார் வரைவதற்கு முற்றும் வேறுபட்டதாகும். ஸ்ரீ ராமனும் சீதையும், வில்லை வளைப்பதற்கு முன்னே இருவரும் கண்டு காதல்கொண்டனர் என்பர் கம்பர். ஸ்ரீ ராமன் இளையவரோடும் விசுவாமித்திரரோடும் மிதிலையின் காட்சி கண்டு களித்து நடக்கும்பொழுது,

“பொன்னின் சோதி போதினில் நாற்றம் பொலிவே போல்
தென்னுண் தேனில் தீஞ்சுவை செஞ்சொற் கவி யின்பம்

கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபே டோடு
அன்னம் ஆடும் முன்னுறை கண்டங்கு அயல் நின்றார்."

இங்ஙனம் நிற்றலும் அம் மணிமாடத்தின் அணிமாடத்தில்,

"கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவை யெல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லும் தன்மைத் தன்றது குன்றும் சுவரும் திண்
கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண் கனி நின்றாள்."

இங்ஙனம்,

"எண்ணரு நலத்தினாள் இளைய நின்றுழி
கண்ணொடு கண்ணினை கவ்வி ஒன்றைஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."

மேலும்,

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார்"

எனக் கம்பநாடர் காதலரிருவரின் கடிமணத்தைக் காட்சியிலேயே நிறைவேற்றிவைத்தனர். கம்பநாடர் தமது கவித் திறமையில் கட்டிய மிதிலையைக் காகுத்தனுக்குக் காண்பிக்கின்றான். ஸ்ரீ ராமன் கண்டது மிதிலை நகரத்தையன்று; அன்று. மிதிலை நங்கை; நங்கை. மிதிலை வேறு சீதை வேறு அன்று. மிதிலையே சீதையாவாள், சீதையே மிதிலையாவாள். வடமொழியில் சீதையை மைதிலி என்று வழங்குவர்; தென்மொழியில் சீதையை மிதிலை என்று செப்புவர். (இன்றேல் இயம்புக.)

காகுத்தன் கார்முகத்தை வளைப்பதற்கு முன்னமே, கடிமணம் நிகழ்த்திய கம்பர் கழறுவதற்கும் வான்மீகியார் வரைவதற்கும் வேற்றுமை புலனாயிற்றன்றோ?

வான்மீகியார் ஆரிய மணத்தை வலியுறுத்துகின்றார். கம்பநாடரோ தமிழர் மணத்தைக் கைக்கொள்ளுகின்றார். வான்மீகியார் நிகழ்த்திய திருமணத்தை இறையனார் அகப்பொருள் உரைகாரர் "ஆசுரம்" என்னும் மணமாகக் கொள்ளுகின்றனர். ஆசுர மணமாவது:—"கொல்லேறு கொண்டான் இவளை எய்தும்; வில்லேற்றினான் இவளை எய்தும்; திரிபன்றி எய்தான் இவளை எய்தும்; மாலை சூடப்பட்டான் இவளை எய்தும்" என இவ்வாறு சொல்லிக்கொடுப்பது. கம்பநாடர் கடாத்திய தமிழர் மணத்தை அவ்வுரைக்காரர் 'கந்தர்வம்'



என்பர். கந்தர்வ மணமாவது:—"இருவர் ஒத்தார் தாமே கூடும் கூட்டம்; அதனையாழோர் கூட்டம் என்றுணர்வது" என்பதாம். இவ்விரு வேறு மணங்கட்குமுள்ள வேறுபாட்டை விரித்தல் வேண்டா. காதல் அமிழ்தினைக் கம்பநாடர் காட்டிய மிதிலைக் காட்சியில் கண்டு களிப்பாராக.

தமிழர் மணம் இயற்கை மணம் என்றும் தெய்வ மணம் என்றும் களவுப் புணர்ச்சி என்றும் தண்டமிழ் நூல்கள் சாற்றும்.

"அதுவே,
தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்" (அகம்-சூ.உ.)

என்பதனான், காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே மணம். காதல் வெள்ளம் கரை கடந்து ஓடுங்கால் வருணம் என்னும் வரம்பில் வைகுமோ! மதம் என்னும் மடுவில் மன்னுமோ! பருவம் என்னும் பள்ளத்தில் பாயுமோ! சாதி சமயங்களைக் கடந்ததன்றோ காதல் மணம்—தமிழர் மணம். பண்டைக்காலத் தமிழ் மக்கள் காதல் மணஞ்செய்தே களித்து வாழ்ந்தனர். ஆரியர் கலப்பிற்குப் பின்னரே, காதல் மணத்தைக் கைவிடுத்து வேறு வேறு மணங்களை மனம்பற்றினர். ஆரிய வெள்ளத்தால் தமிழர் மணக்கால்கள் தூர்ந்துவிட்டன எனினும், ஆராய்ச்சி என்னும் அகழ்கோலால் அகழ்ந்தால் ஆங்காங்கு அரும்புவதைக் கண்டு அன்புற்றமரலாம்.

நமது பாரத தேசத்தைத் தவிர, உலகத்தில் வேறெங்கணும் சாதியோ, சமயமோ பற்றி காதலர் மணம் கடியப்படுவதில்லை. பண்டைக்காலத்துத் தமிழர் மணம் உலகம் முழுவதும் உவக்க உலாவுகின்றது. அந்தோ! தமிழ் நாட்டில்—தாரணிக்குக் காதலைக் காட்டிய தமிழ் நாட்டில்—இயற்கை மணம் ஏற்ற இன் தமிழ்நாட்டில்—தெய்வ மணம் செய்த செந்தமிழ் நாட்டில்—காதல் மணம் கைவிடப்பட்டதே! காதல் மணம் செய்தோர் கடியப்படுகின்றனரே!

தொல்காப்பியம் தொடங்கிக் கடைச்சங்க மிறுதியான நூல்களனைத்தும் இக்காதல் மணத்தைப் பலப்பலவாறு புனைந்து பகர்கின்றன. அக்காதல் மண ஒழுகலாறுகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி, ஓர் கோவைப்படுத்திக் கூறுவனவே கோவைகள் என்ப. காதலிருவரும் பான்மை வகையான் ஓரிடத்துக் காண்டலும் தத்தம் கருத்தொருமித்தால், மண வினைக்கானவற்றை மகிழ்ந்து முடிப்பர். இங்ஙனம் இயல் மண வினைகளே மேல்நாடுகளில் நடைபெறுகின்றன. முதன் முதல் பொழிலோ, பொறுப்போ, புழையோ இவை யன்ன மனங் கவரும் மாண்புற்ற இடங்களே காதலர் காணும் இடங்களாகப் புனைந்து கூறுவர் தமிழ் நாட்டார். மேல் நாட்டாரோ கூட்டமோ,

கோயிலோ, கோலாட்டமோ இவையிற்றைக் காதல் கொள்ளும் இடங்களாகக் காட்டுவர். இவர் கூறுவன வனைத்தும் காதலர் மனம் ஒருப்படின் மற்றவர் மறுக்கலாகாவென்பதே. இயற்கைக் கூட்டம் கண்ட காதலர் இருவரும் சின்னாளில் பலர் அறிய மணம் செய்துகொள்வர்.

காதலர் இருவரும் தனித்துக் கலந்ததைக் களவு என்பர்; பலர் அறிய மணம் செய்துகொள்வதைக் கற்பு என்பர். களவு மணம் கண்டபின்னர், தம்மிடத்திலோ, காதலிருவரும் வேறிடத்திற்குப் போகியோ மணம் செய்துகொள்ளும் முறை தொல்காப்பியர் காலத்திற்கு (5000 ஆண்டுகளுக்கு முன்) முன்னரே வழக்காறு யிருந்தது. பலரறிய மணம் செய்துகொள்ளுவதற்கு "கற்பு" என்னும் பெயர் வைத்த பின்னரே, தனித்த மணத்தை "களவு" எனப் பெயர் வைத்தனர். இப் பலரறி மணம் தோன்றுவதற்கு முன், களவு மணம்—காதல் மணம்—தமிழ் நாட்டில் பன் னெடுங்காலம் பயின்றிருத்தல் வேண்டும். தனித்துக் காதல் மணம் செய்தோர் அம்மணத் திண்மையினின்றும் நெகிழ்ந்த பின்னரே பலரறி மணங்களும் காரணங்களும் வகுத்தனர்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் தொல்காப்பியமும் இதனை வலியுறுத்தும். ஆயின் ஒன்றினை உறுதியாக உளத்தில் கொளல் வேண்டும். என்னை? காதலர் கருத்தொற்றுமையுற்றே மணந்தனர் என்பதும், காதலர் கருத்தொருமித்த பின்னர் வேறுவகையான் அம்மணம் தடையுறுமாயின் மரணம் என்பதும் ஆம். "கரணம் தப்பின் மரணம்" என்னும் பழமொழிக்கு நச்சினார்க்கினியர் இங்ஙனமே நவில்கின்றார்.

களவு அல்லது கள்ளப் புணர்ச்சி யென்பது காதலர் கருத்தொற்றுமையுற்ற முதற் கூட்டம் என்றே மொழிதல் வேண்டும். இம்முதற் கூட்டத்தில் காதலர் இருவர்க்கும் உற்ற புணர்ச்சி யாது? உள்ளப் புணர்ச்சியா? மெய்யுறு புணர்ச்சியா? ஆராய்ச்சி என்னும் அறிவு விளக்கைக்கொண்டு, சங்க விலக்கிய சருக்கறைகளில் எங்கு தேடினும், இதன் உண்மை புலப்பட்டிலது. ஒல்காப்புலமைத் தொல்காப்பியனாரே,

"உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்
கள்ளப் புணர்ச்சியுள் காதலர்க்கு உரிய"

என ஐயச் சேற்றில் அழுத்திவிட்டனர். இறையனார் அகப்பொருள் 32-வது சூத்திரவுரையில் நல்லிசைப் புலவர் நக்கீரனார், "மக்கட் பேற்றுக்குக் காலம் களவொழுக்கத்திற்குப் பொருந்தாதென விலக்கப்பட்ட



தாம் ஆசிரியர்களாலென்பது" என எழுதுகின்றார். இதனால் களவொழுக்கத்தில், மெய்யுணர்ச்சி கடியப்பட்டது. இக் களவொழுக்கத்தில் மெய்யுறு புணர்ச்சி தோன்றிய பின்னரே பொய்யும் வழுவும் தோன்றலாயன. அதனானே ஐயர் கரணம் யாத்தனர். (கரணம் = சடங்கு). களவு மணம் நிகழ்ந்த பின் இரு திங்களுக்குள் கற்பு மணம்—கரண மணம்—நிகழ்த்தல் வேண்டும் என்பது பண்டைத் தமிழரின் பண்பாகும்.

"களவினுள் தவிர்ச்சி வரைவின் ஈட்டம்
திங்களி ரண்டின் அகம்என மொழிப" (அகம்-சூ. 32.)

என்பது வலியுறுத்தும். இவ்விரண்டு திங்கள் என்பதனைத் தெளிய ஆய்தல் வேண்டும்.

தனித்து மணம்கொண்ட காதலர் இருவரும் பின்னை எவ்வகை ஊறு நேரினும் அவ்வுறுதியினின்றும் எட்டுணையும் பிறழக்கூடா தென்பதை திண்மையாகக் சிந்தையில் வைத்தல் வேண்டும். பழங் காலம் காதல் மணத்திற்கு ஊறு நிகழுங்கால், மடலேறுவதும் வரைபாய்வதுமான சூள்களைக் கொண்டிருந்தனர். (சூள் = சபதம்; வரை பாய்தல் = மலையின் மேலேறிக் கீழே விழுந்து இறத்தல்) வரை பாய்தலைச் செய்யும் காதலரின் கருத்தொற்றுமையும் மனத் திட்பமும், மெய்ம்மையில் நாட்டமும் என்னென்பேம்! என்னென்பேம்!!

இதுபோழ்து நம் நாட்டில்—நற்றமிழ் நாட்டில்—காதல் மணத்தை மறுப்பார் சிலர்; மணங் கொள்வார் பலர்; இப் பலருள்ளும் காதல் மணத்தை வேண்டுவோர் உடன்பாடும், எதிர் மறையும், உடன்பாடும் எதிர் மறையுமான முத்திற வினை முற்றுக்களைக் கொள்ளும் புத்திலக்கணம் புகல்வர். காதல் மணத்தை மறுக்கும் அழுக்கு மூட்டைகளைத் தூய்மைசெய்ய ஒண்ணாது. "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்னும் இலக்கணத்திற்கு இலக்கிய மாவாரவர். கால் வெள்ளத்தில் நீந்தத் தெரியாது முழுகிப்போகும் மூழு மக்களாவாரவர். இன்னார்க்கு இரங்குவதன்றி இயம்புவதென்! இறைவனே! இறைவனே!! அன்னார்க்கு அருள் செய்க; ஆட்கொள்க.

இனி உடன்பாடும் எதிர் மறையுமுள்ளவர் கூற்றைக் கூறுவோம். அன்னார் காதல் மணம் வேண்டும்; அதனை மறுப்பாரில்லை. ஆயின், தம் குலத்துள்ளே, தம் சாதியுள்ளே, தம் சமயத்துள்ளே இருத்தல் வேண்டுமெனப் பலவாறு பகர்வார். இவர் கூறுவனவற்றை விரிந்து ஆராய அமையம் இன்று. பண்டைக்கால தமிழர் மணம், சாதியையும் சமயத்தையும்பற்றி நிற்கவில்லை என்பதே மேலே வலியுறுத்தினோம். இன்னும் அதற்காக ஒரே எடுத்துக் காட்டுமட்டும் காட்டுவம்:

"யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

என்பது பெருந் தொகை பெறாஉம் குறுந் தொகைச் செய்யுள். இதன் கண் காதலரிருவரும் தம்முள் மணப்பதற்கு முன், ஒருவரையொருவர் தந்தையார் யாவர்? தாயார் யாவர்? உறவினர் யாவர்? சுற்றம் யாது? என வினவுகின்றனரோ? இல்லை; இல்லை. அன்றி, செல்வம் எத்துணை? அணிகள் எத்துணை என வினவுகின்றனரா? இல்லையே. அன்புடை நெஞ்சம் தாம் கலந்தபின் சாதி யேது! சமய மேது! அக்காதலர் ஒற்றுமையே சாதி; சேர்ந்ததே சமயம். காதலர் அன்புடைய நெஞ்சம் கலத்தற்கு "செம்புலப் பெய்ந் நீர்போல" என்னும் உவமையை உற்று நோக்கும் பெற்றியர் சாதிச் சண்டையினும், சமயப் போரினும் கால் வையார். சுருங்கக் கூறின் கடவுளில் கலந்தார் கலப்பார் மாட்டுச் சாதியும் சமயமும் தோன்றாததுபோல், காதலர் மாட்டும் சாதி சமயம் தோன்றாதென்க. கடவுளும் சாதி சமயத்தைக் கடந்தவர். இதற்கு இரு காட்டுகள் காட்டுவாம்.

ஸ்ரீ ராமனை ஒழுக்கதிலுயர்ந்த தெய்வமாக வணங்குகின்றோம்; வாழ்த்துகின்றோம். அவ்விராமபிரான், மிதிலையில் மிதிலையைக் கண்டதும் காதல்கொண்டனரோ! அதுகாலை, தந்தையர் தசரதரைக் கேட்டு வந்தபின் காதல் கொள்வோமென்று கருதினரா? "தந்தை சொன்மிக்க மந்திர மில்லை" என்பதையறிந்து அதன் வழியே நடந்த ஸ்ரீ ராமன் சீதையின் மாட்டுமட்டும் தந்தையின் மந்திரம் ஏன் மதிக்கவில்லை. அன்றித் தாயவர் மொழிகளையேனுந் தழுவினரா? போகட்டும்; குலகுரு—வாசிட்டம் சொன்ன வசிட்டர்—வார்த்தையையேனும் கொண்டனரா? அத்துணையேன், முன்னர் முனிவன் விசுவாமித்திர முனிவன்—வேண்டுமாயின் இன்னொரு சீதையைப் படைக்கும் திறல் வாய்ந்த மாதவன்—செல்கின்றானே! அம்முனிவனையாவது "ஐயன்மீர்! முனிவர் தலைவரே! அதோ சீதை என் சிந்தையில் குடிகொண்ட செம்மணி அம் மேன்மாடத்தில் மிளிர்கின்றது. அக்காரிகையைக் காதல் கொள்வதற்குத் திருவருள் செய்யவேண்டு" மென்று வேண்டினரா?" இல்லை; இல்லை. ஏன் இல்லை. காகுத்தன் காதல் கடவுள் முனிவன் கருத்தையும் கட்டளையையும் கடந்துவிட்டது. அவரை ஸ்ரீ ராமன் வினவாவிடினும் பின்னர் வரும் தம்பி—பிரியாத் தம்பி—சாவில் சாகும் தன்மையன்—நோவில் நோகும் நீர்மையன்—இலக்குமணனையேனும் ஏதேனும் வினவினரா? இல்லை; இல்லை.

தொடரும்.

197880




# "பாரதி"
# பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ'வெனப் புகழப்பெற்று,
சென்ற 1929-ம் ஆண்டுமுதல் வெளிவந்துகொண்டிருக்கும்

## "பாரதி"ப் பத்திரிகையின் பைண்ட் வால்யம்

உங்கள் புத்தகசாலையை
அழகு செய்வதாயிருக்கின்றது.

இவைகளில் பல தேசப் பெரியார்கள் சரிதைகளும்,
தேசாபிமானச் செல்வர்களின் சரிதைகளும்,
அவர்தம் படங்களும் இலங்குகின்றன.

தமிழ் நாட்டின் அறிஞர் சிகாமணிகளும், பண்டிதப்
பெரியார்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் எழுதிய கட்
டுரைகள் என்றும் படித்துணரத் தக்கவையாய்த் திகழுகின்றன.

விஷயங்களுக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக உறுதியாக
பைண்ட் செய்யப்பெற்றிருக்கிறது.

800 பக்கங்கள்; நேர்த்தியான காலிகோ; கில்ட் பிரிண்ட்.

1930-ம் வருட வால்யம் 1-க்கு விலை ரூ 2—8—0.

1931-ம் " " ரூ. 2—8—0,

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன்
ரூ. 3½ அல்லது 5½ ஷிலிங்.

முன்பணம் அனுப்பிவைக்கும் "பாரதி"யின்
சந்தாதாரர்களுக்கு மட்டும் தபாற் செலவு இனும்.

வெளி நாட்டிலுள்ளவராயின் வால்யம் 1-க்கு ரூ. 3
அல்லது 5 ஷிலிங் அனுப்பிவைக்க வேண்டும்.

'பாரதி' ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## தமிழபிமானிகளுக்குச் சிறந்த விருந்து

# 1. திருவாசகம்.

(உண்மை ஞான விளக்க உரையுடன்.)

'மனங் கரைந்து மலங் கெடுக்கும் வாசகம்' எனப் புலவர் புகழும் தமிழ் மறையின் பெருமையை உணராதார் தமிழுலகில் ஒருவருமே இரார். சைவ சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள திருவாசகம் என்னும் அரிய பெரிய நூலைத் தமிழராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் பிழையறப் படித்துப் பயன்பெற வேண்டும். இந் நூலின் உரையாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்தரமாணிக்க யோகியார் அவர்கள் தமது முதிர்ந்த ஆன்ம ஞான அனுபவத்தினால் இந் நூலை வெறும் பக்தி நூல் அன்றெனவும், பிரம்ம சாதனைகள் நிரம்பிய ஆன்ம ஞானக் களஞ்சியம் எனவும் ஐயந்திரிபறத் தெளிந்து தாம் சென்னையில் நிறுவியுள்ள பிரம்ம வித்யா சங்கத்தின் உபயோகத்திற்காக இந் நூலுக்குச் சிறந்த உரையியற்றி யிருக்கின்றார்கள். இது டிம்மியளவில் 115 பாரத்தில் அமைந்திருக்கின்றது; உயர்ந்த பளபளப்பான தாளில் அழகாய் அச்சிடப்பெற்றுள்ளது; சிறந்த காலிகோ பைண்டு செய்யப்பெற்றது.

விலை ரூபா 10—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

# 2. ஔவைக் குறள்.

(உரையுடன்.)

இந் நூல் வாகவிகளில் சிறந்த ஔவையார் அருளிய ஆன்ம ஞான நூல். இது திருக்குறளைப்போல் பண்டிதர்களும், பாவலர்களும் உரை யெழுதக்கூடியதன்று. இது ஆன்ம ஞான சாதனங்களைப் புகட்டும் நூல், ஆன்ம ஞான இன்பத்தை அளாவி அம் மெய்ச் சுகத்தில் ஈடுபடும் மெய் யன்பர்களுக்கே இது பெரிதும் பயன் அளிக்கும். ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்தமாணிக்க யோகியார் அவர்கள் தமது சிறந்த ஆன்ம ஞான அனுபவத்தினால் இந் நூலுக்குச் சிறந்த உரை எழுதியிருக்கின்றார்கள். இதுவும் உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பெற்றுளது.

விலை ரூபா 1—8—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பிரதிகள் கிடைக்கும் இடம்: வே. ஐ. முருகேச முதலியார்,
15, முத்துமுதலி தெரு, புரசைபாக்கம்,
வேப்பேரி, சென்னை



# "பாரதி"

## சிறந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை

நான்காம் ஆண்டு நடைபெறுகிறது.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் மதபேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான கொள்கையுடன்
தேசாபிவிருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாலிகை

**"பாரதி" ஒன்றே யாகும்.**

உடனே சந்தாதர்களாய்ச் சேருங்கள்.

உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதார்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

**சந்தா விபரம்.**

போஷக சந்தா குறைந்தது ரூ 100/=

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2/= அல்லது 3 ஷிலிங்
வெளி நாடுகளுக்கு ,, ரூ 3/= ,, 5 ,,

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜண்டுகளை எதிர்பார்க்கப்படுகிறது.
விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினல், லோகோபகாரிக்குச் சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளைத்தும் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தெட்டாவது ஆண்டு நடக்கிறது.

பத்திராதிபர்:

பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,

லோகோபகாரி பத்திரிகாலயம்,

சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ருபாய் நான்கு.

ஆத்ம வீரக் கனலெழுப்பும்

# அரவிந்த யோக நூல்கள்.

சுத்தானந்தா பாரதியார் எழுதியவை.

1. அன்னை (யோகசக்தி) ... 0—4—0
2. அரவிந்த யோகவிளக்கம் ... 0—4—0
3. கீதை காட்டும் பாதை ... 0-10—0

கீதை முழுதும் புதிய விளக்க விரிவுரையுடன் பல யோக ரகசியங்களடங்க விவரிக்கப்பட்டுள்ளது.

கிடைக்குமிடம்:

பாரத சக்தி நிலயம், புதுச்சேரி.





# பாரதியார் விளக்கம்.

தனித் தனியான 5 பாகங்கள்.

"பாரதி" ஆசிரியர்,

திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் தொகுத்தது.

அச்சிலிருக்கும் முதற் பாகம் வெளிவரும் நாளை எதிர்பாருங்கள்.

தமிழ் நாட்டின் ஒப்பற்ற கவியரசாக இலங்கும்
தேசாவேசப் பிரியர்
சுப்ரமண்ய பாரதியாரைப்பற்றி,

அறிஞர் சிகாமணிகளும்
ஆராய்ச்சி வல்லுனரும்
இன்னிசை நிபுணரும்
தேசாபிமானச் செல்வரும்
பேராசிரியப் பெரியோரும்
புலவர் பெருமக்களும்

பலப்பல விதமாகப் பல்வேறு விஷயங்களை, இந்த ஐந்து பாகங்களுக்காகவே ஆராய்ந்து தேர்ந்து எழுதப்பெற்ற விஷயங்களும் கவிகளும் உடைத்தாயிருக்கின்றது.

இதில் நமது புலவர் பெருமான் பாரதியாரின் குடும்பத்தார் உருவப் படங்களும் வெளிவருகிறது.

இஃதல்லாது கட்டுரைக் கர்த்தர்களின் படங்களும் நிறையப்பெற்றதாம்.

பாகம் 1-க்கு விலை ரூ ... 1—4—0.
முன்பணமனுப்பினுல் ,, ... 1—0—0.
பாகங்கள் 5-க்கும் முன் பணம் 4—0—0.

வெளி நாட்டிலுள்ளோர் பாகம் 1-க்கு ரூ 1—8—0 அல்லது 2 ஷிலிங் அனுப்பவேண்டும்.

தபாற் செலவு பிரத்தியேகம்.

'பாரதி' புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## முத்தண்ணா.

துப்பறியும் செந்தமிழ் நாவல்.

ஜனப் M. பீர்முகமது பாவலர் அவர்கள் எழுதியது.

எல்லாம் பா நடை
எல்லாம் இன்சுவை
பண்டிதர் விரும்புவது
பாமரர் விரும்புவது
இளைஞர் விரும்புவது
முதியோர் விரும்புவது
யாவும் இதில் இருக்கின்றது

இந்நூல் நற்றமிழில் நடையும், அகவலும் கலந்து ஓர் புதிய எழுச்சியையும் திறத்தினையும் கொடுக்கின்றது. டபிள் கிரவ்ண் 1/16 அளவான கிளேஸ் பேப்பரில் 400 பக்கங்களைக் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—4—0.

குறைக்கப்பெற்றுள்ள விலை ரூ. 1-12-0.

"பாரதி" புத்தகாலயம்,
உத்தமபாளையம்.

## "இந்திய மித்திரன்"

சிறந்த தேசீய வாரப் பத்திரிகை.

ஆசிரியர்: B. வேணுகோபாலன் அவர்கள்.

மலேயா நாட்டிலே தமிழ்ப் பத்திரிகையில் தேசீயத்தையே பிரதானமாகக் கொண்டு வெளிவருவது எது?
தொழிலாளர்களுக்குத் தொண்டாற்றுழைப்பது எது?
திக்கற்ற இந்தியக் கூலிகளுக்குச் சிறந்த வழிகளை எடுத்துக் காட்டி, மோசக்காரர்களின் படு மோசத்திற் காளாகாது தப்புவிப்பது எது?
ஆயிரக் கணக்கான சந்தாதார்களைப் பெற்று எண்திசை வர்த்தமானங்களையும் கொண்டு வீரமுடன் தீரமாக உலாவி வருவது எது? "இந்திய மித்திரன்" ஒன்றேயாகும்.

வருட சந்தா: மலேயாவுக்கு வெள்ளி 4/-
இந்தியா, பர்மா, சிலோனுக்கு ,, 5/-

விலாசம்: மானேஜர், "இந்திய மித்திரன்,"
87, பெல்பீல்ட் தெரு, ஈப்போ., F. M. S.





தமிழ் நாட்டின் நகரங்கள் ஒவ்வொன்றிலும்
"பாரதி"-க்கு ஏஜெண்டுகள்

## தேவை.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேயா முதலிய விடங்களிலும் தேவை.
மற்ற விபரங்களறிய கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "பாரதி,"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழிபெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்:

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7—8—0, வெளிநாட்டிற்கு ரூ. 9—0—0 தனிப்பிரதி அணா 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்.—மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## 1931-ம் வருட 'பாரதி' அனுபந்தம்.

'பாரதி'யைப் பற்றி அறிய இதனிலும் வேறு வழியில்லை.

'பாரதி' அளவான 100 பக்கம் கொண்டது. கட்டுரை, கட்டுரையாளர், நோக்கங்கள், சிறப்புரைகள், மதிப்புரைகள் ஆகிய இவற்றுடன், 'பாரதி'யின் ஆரம்ப காலமுதல் இது பரியந்தம் வந்துள்ள சுவைதரும் சிறந்த பாக்களனைத்தையும் ஒருங்கே பெற்றிலங்குகிறது. விலை அணா 4.

இந்தியா அல்லது இலங்கை ஸ்டாம்பு அனுப்பவும்.
வெளி நாட்டார் போஸ்டல் கூப்பன் அனுப்ப வேண்டும்.

பாரத நாட்டின் வீரப் புதல்வி

**ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மீ பாய்**

சரித்திரம். கிரவ்ண் 1×8ல் 60 பக்கம்கொண்ட

பிரதி 1-க்கு விலை அணா 0—2—0

வேண்டுவோர் தபாற் செலவிற்கும் சேர்த்து இரண்டரையணா ஸ்டாம்பு அனுப்பிவைக்கவும்.

10 பிரதிகள் வாங்குவோருக்குத் தபாற் செலவு இனாம்.

வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

நெப்போலியன் போனபார்ட் சரித்திரம்.

பண்டித N. M. உஷென்கான் அவர்கள் எழுதியது.

கொடுங்கோலர் துன்பத்தினின்றும் விடுதலையடைந்து, நாட்டு மக்களனைவர்க்கும் பூரண சுதந்திரத்தைக் கொடுத்த பிரஞ்சு நாட்டு உவமையற்ற வீராதி வீரன், நெப்போலிய சக்ரவர்த்தியைப் பற்றிய புதிய பதிப்பு-சிறந்த புத்தகம்.

விலை அணா 4.

தபாற் செலவுக்கும் சேர்த்து 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.


## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 2&3 | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 | ,, | ,, | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.

நீண்டகால விளம்பரஞ் செய்வோர் பொறுப்பாளருக்கு எழுதவும்.

மேற்கண்ட இவ்விகிதங்களை சமீபத்தில் அதிகப்படுத்த நேரிடும்.

முன்பாகவே விளம்பரம் கொடுத்துக்கொள்வார்களாக.

# T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900 000 பங்குகளின் பேரில்

**2,700,000, ரூ. மூலதனம்.**

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்ஸைன்மென்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கனுப்பிவைத்தும் பம்பாய், கல்கத்தா, கராச்சி, டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக்கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்துவருவதோடு ஸக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆகரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்துவைப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தங்க லாபத்தையும் மிக்கப் புகழையுமடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
**T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி**
(லிமிடெட்),
கோம்பை, மதுரை ஜில்லா.

தேயிலே!　நன்கு மதிக்கப்பெற்று வரும்　தேயிலே!!

கைலாச நாடு தேயிலேயை விற்பனை செய்ய

## நகரங்கள்தோறும் ஏஜண்டுகள் தேவை

இந்தியாவின் அபிவிருத்தியை விரும்பினால்
சுதேசக் கைத்தொழிலே ஆதரியுங்கள்.

இந்தியர் முதல்!　இந்தியர் உழைப்பு!!　இந்தியர் கைத்தொழில்!!!

நிறத்திற்கும் மணத்திற்கும் குணத்திற்கும் உருசிக்கும்
உத்திரவாதம்.

பலவகை வளமிகுந்த திருவாங்கூரைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலேயில் தேர்ந்தெடுத்த செழிப்பான நல்ல நிலத்தில் தேவகோட்டை லெ. அரு. ராம. ராமநாதன் செட்டியாரவர்களால் கைலாச நாடு தேயிலேத் தோட்டம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து உண்டாகும் தேயிலேயின் உயர்வைப்பற்றித் தமிழ் நாட்டாருக்கும் அயல் நாட்டாருக்கும் நன்கு தெரியும். ஐரோப்பியத் தோட்டக்காரர்களால் தயாரிக்கப்பட்ட தேயிலேயை உபயோகப்படுத்தின இந்தியரனேகர் இப்பொழுது சுதேசப் பற்றுலும் உயர்வாலும் இந்த கைலாச நாடு எஸ்டேட்டின் தேயிலேயை உபயோகப்படுத்த முன்வந்திருக்கிறார்கள்.

நமது நாட்டில் கைலாச நாடு தேயிலே எங்கும் எப்பொழுதும் எவருக்கும் கிடைக்கும் வழிகளைச் செய்ய முயன்றுகொண்டிருக்கிறோம். ஆகையால் கீழ்கண்ட விடங்களுக்கும் இன்னும் எல்லா முக்கிய பட்டிணங்களிலும் ஊக்கமுள்ள ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும். விருப்பமுள்ள ஏஜெண்டுகள் அடியிற்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்வார்களாக.

| | | | |
|---|---|---|---|
| மதுரை | சேலம் | காரைக்குடி | திருப்பத்தூர் |
| திருச்சி | வேலூர் | ஈரோடு | மேலூர் |
| திருநெல்வேலி | தூத்துக்குடி | ராமநாதபுரம் | ஜோலார்பேட் |
| தஞ்சாவூர் | திண்டுக்கல் | சிவகெங்கை | கும்பகோணம் |
| கடலூர் | வாணியம்பாடி | தொண்டி | நாகபட்டணம் |

மாதிரிகளுக்கும் மற்ற விஷயங்களுக்கும் மானேஜருக்கு எழுதுக.

V. சாத்தையா பிள்ளே,
**மானேஜர், கைலாச நாடு எஸ்டேட்,**
தேவாரம் P. O., (மதுரை ஜில்லா)



பொறுப்பாசிரியர் திரு. ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டு பிரசுரிக்கப்படுகிறது.